பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 புரட்டாதி 07 வியாழக்கிழமை (23-09-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:303

ஒழுங்காகத் தொடர்புகளைப் பேணி

# தகவல்களைப் பரிமாறிக்கொள்ள புலிகளும் இராணுவமும் இணக்கம்

## நேற்று வவுணதீவுச் சந்திப்பில் முடிவு

மட்டக்களப்பு,செப்ரெம்பர்23

**ஒழுங்காகத் தொடர்புகளைப் பேணித் தகவல்களைப் பரிமாறிக்கொள்ள இராணுவத்தினரும் புலிகளும் இணங்கியிருக்கின்றார்கள்.**

**நேற்று வவுணதீவில் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைத் தலைவர்களுக்கும் அரச படைகளின் அதிகாரிகளுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பில் இதற்கான முடிவு எட்டப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.**

நேற்றைய சந்திப்புத் தொடர்பாக விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், இலங்கை இராணுவத்தின் 23 ஆம் பிரிவுப் படையணிக்குப் பொறுப்பான பொதுக் கட்டளை அதிகாரி பிரிகேடியர் வஜிர விஜய குணவர்த்தன ஆகியோர் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரொன் புறுஹொல்டே தலைமையில் வவுணதீவுப் பிரதேச செயலகத்தில் நேற்றுக்காலை 10.30 மணிமுதல் இச்சந்திப்பு இடம்பெற்றது.

இருதரப்புகளுக்குமிடையில் தொடர்புகளையும், கூட்டுறவையும் எவ்வாறு பலப்படுத்துவது என்பது நிகழ்ச்சி நிரலாக அமைந்திருந்தது.

சீரிய சூழ்நிலையிலும் இணக்க நிலையிலும் இச்சந்திப்பு நடைபெற்றது. வன்முறைகளை எதிர்கொள்வது தொடர்பாகக் களத்தில் ஆக்கபூர்வமான நடைமுறையை உருவாக்குவதற்காக மாதத்திற்கு இரண்டுமுறை சந்திப்பதென தரப்புகள் முடிவுசெய்தன.

தகவல்களைப் பரிமாறுவதற்கும், சம்பவங்களையொட்டி விரைந்து செயற்படவும், வழி

(16ஆம் பக்கம் பார்க்க)



சந்திப்பில் கலந்துகொண்ட படைத் தளபதியும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் கைலாகு கொடுத்துத் தம்மை அறிமுகம் செய்துகொள்கின்றனர்.

## யாழ்.பெருமாள் ஆலயத்தில் இன்று தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம்,செப்.23

யாழ்ப்பாணம் - வண்ணை ஸ்ரீவெங்கடேஸ வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் (யாழ். பெருமாள் கோயில்) வருடாந்தப் பெருவிழாவில் இன்று காலை தேர்த்திருவிழா இடம்பெறவுள்ளது.

காலை 6 மணிக்கு இடம்பெறும் உதய பூசையுடன் தொடர்ந்து காலை சந்திப்பூசை,

(16ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு நிரந்தர இடம்; இலங்கை ஆதரவு வழங்கும்

நியூயோர்க்,செப்.23

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்புரிமை கிடைப்பதற்கு இலங்கை தனது முழுமையான ஆதரவைத் தெரிவித்துள்ளது. நேற்றுமுன்தினம் ஐ.நா. பொதுச்சபையின் 59ஆவது கூட்டத் தொடரில்

(16ஆம் பக்கம் பார்க்க)

## கற்பிட்டிப் பிரதேச செயலகத்தில் அரசியல்வாதிகள் அடிபிடி

கற்பிட்டி,செப்.23

கற்பிட்டிப் பிரதேச சபை உபதலைவர் எம்என்.எம்.எம்.பசீருக்கும், வடமேல் மாகாணசபை உறுப்பினர் என்.ரீ.எம்.தாஹீருக்குமிடையே கற்பிட்டிப் பிரதேச செயலகத்தில் நேற்றுக் கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

(16ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.சுகாதார ஊழியர்கள் நேற்று பணிப்பகிஷ்கரிப்பு

ஆரையம்பதி,செப்.23

மட்டக்களப்பில் மாகாண சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளில் பணியாற்றும் ஊழியர்கள் நேற்று பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதத்துக்கு வன்முறை வழியில் பதிலா? புஷ்ஷின் கருத்தை நிராகரிக்கிறார் சந்திரிகா

நியூயோர்க்,செப்.23

"பயங்கரவாதத்துக்கு எதிரான உலகின் போராட்டத்தில் வன்முறையை ஓர் அரசு கையாள்வது கடைசி வழிமுறையாகத்தான் இருக்கவேண்டும்.

தற்காலத்தில் மனிதகுலப் பண்புகளுக்கும் மிகவும் விரோதமான - அச்சம் தருகின்ற - போக்கு இந்தப் பயங்கரவாதம். ஆனாலும், அதைக் கையாள்வதற்கு வன்முறை தவிர்ந்த வேறு வழிகளும் இருக்கின்றன."

- இப்படிச் சர்வதேச சமூகத்துக்கு அறிவுரை கூறியிருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

பயங்கரவாதத்தை எதிர்கொள்வது உலகுக்கு உள்ள பிரதான தந்திரோபாயம் பலாத்காரம் என்ற சாரப்பட நேற்றுமுன்தினம் காலையில் ஐ.நா.சபையில் உரையாற்றிய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் கூறியிருந்தார்.

அந்தக் கருத்தைத் தாம் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் ஜனாதிபதி குமாரதுங்க பட்டவர்த்தனமாகத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷின் காலை உரைக்குப் பின்னர் மாலையில் ஐ.நா. தலைமைச் செயலகத்தில் ஐ.நா. செய்தியாளர்கள் கழகத்தில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"அப்படியானால் பயங்கரவாதத்துக்கு எதிரான செயற்பாட்டில் உலகுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வழிகாட்டக் கூடிய தந்திரோபாயம் என்ன?" - என்று செய்தியாளர்கள் கேட்டனர்.

பிணக்குகளுக்குக் கலந்துரையாடல் மற்றும் பேச்சுக்கள் மூலமே தீர்வுகாணமுடியும் என்று தனது அரசு நம்புகின்றது என ஜனாதிபதி குமாரதுங்க பதிலளித்தார்.

"பிணக்கின் வெளிப்பாடு அச்சமூட்டும் பயங்கரவாத வடிவத்தில் இருந்தாலும், அவற்றுக்கு நியாயப்படுத்தக் கூடிய காரணங்கள் இருக்கும என்று நாம் நம்புகின்றோம்" என்றார் அவர்.

சட்ட, நியாயரீதியான மன ஆதங்கங்களைப் பயங்கரவாதச் செயற்பாடுகளில் இருந்து வேறுபடுத்திப் பார்க்கப்படவேண்டும் என்றும் ஜனாதிபதி சந்திரிகா வாதிட்டார்.

பயங்கரவாதத்திற்கான மூலகாரணங்களை அடையாளப்படுத்தி அதைப்பற்றிக் கவனிக்க ஐ.நா.சபையை விட வேறு சிறந்த அமைப்பு இல்லை என்றும் அவர் சொன்னார்.

இந்த வகையில், அல்-கெய்டா மற்றும் சதாம்

(16ஆம் பக்கம் பார்க்க)

தடுத்து வைக்கப்பட்டுள்ள ஊர்காவலர் விடயத்தில்

## புலிகளின் நிபந்தனைகளை ஏற்க அரசு தயாராக இல்லை

கொழும்பு,செப்.23

விடுதலைப் புலிகளின் நிபந்தனைகளை ஏற்க அரசாங்கம் தயாராக இல்லை. புலிகள் தடுத்துவைத்துள்ள ஊர்காவலர்களை விடுவிப்பதற்காக விளக்க மறியலில் உள்ள புலிகளை விடுவிக்கவும் முடியாது.

- இப்படித் தெரிவித்துள்ளார் பதில் பாதுகாப்பு அமைச்சரும் சட்ட ஒழுங்கு புத்தசாசன, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்க.

நாடாளுமன்றத்தில் ஜே.வி.பி. உறுப்பினர் விமல் வீரவன்ஸ சபையின் கவன ஈர்ப்புப் பிரேரணை ஒன்றைக்கொண்டு வந்தார். அதற்குப் பதில் அளித்துப் பேசுகையிலேயே அமைச்சர் ரட்ணசிறி மேற்கண்டவாறு கூறினார்.

தனது கவன ஈர்ப்புப் பிரேரணையைக் கொண்டு வந்த விமல் வீரவன்ஸ் எம்.பி., "முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் புலிகளும் யுத்தநிறுத்த உடன்படிக்கையைச் செய்து கொண்டதால், இன்று படையினரால் எதனையும் செய்யமுடியாமலுள்ளது. புலிகள் கண்மூடித்தனமாகப் படுகொலைகளைச் செய்கின்றனர். கைதுகளைச் செய்கின்றனர். சில தினங்களுக்கு முன்னர் திருகோணமலையில் இரண்டு ஊர்காவல் படையினர் புலிகளால் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இது அப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## நெஞ்சைப் பிழிந்தெடுத்த பிஞ்சுகளின் நினைவுதினம்

வடமராட்சி கிழக்கு,செப்.23

நாகர்கோயில் பாடசாலை மீது அரசுப் படைகள் நடத்திய விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட 20 பள்ளிச் சிறுவர்களின் 9ஆவது நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

புலோலி றோ.க.த.க.பாடசாலையில் நேற்று நண்பகல் இடம்பெற்ற நினைவுதின நிகழ்வில் சிறுவர்களின் உருவப்படங்களுக்கு சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்து மாணவர்களின் பெற்றோரும், ஆசிரியர்களும் கண்ணீர்விட்டு அழுதனர்.

இச்சம்பவம் அங்கு நின்றிருந்தவர்களின் நெஞ்சை உருக்குவதாக இருந்தது.

நிகழ்வில், கலந்துகொண்டிருந்த ஏனையோரும் விம்பி அழுதனர். நினைவுரையாற்றிய பிரமுகர்களும் சோகத்தால் நாதழுதழுத்து உரையைத்தொடரமுடியாது நின்றனர்.

நாகர்கோயில் மகாவித்தியாலயம்மீது 1995 ஆம் ஆண்டு விமானப் படையினர் நடத்திய

(16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# உபவேந்தர் உட்பட அதிகாரிகளை கட்டடத்துள் பூட்டி பேராதனைப் பல்கலைக்கழக ஊழியர்கள் போராட்டம்

பேராதனைப் பல்கலைக்கழக உபவேந்தர், பதிவாளர், காசாளர் மற்றும் உயர் அதிகாரிகளை அவர்கள் பணிபுரியும் செனற் கட்டடத்திற்குள்ளேயே பூட்டி வைத்து கல்விசாரா ஊழியர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கல்விசாரா ஊழியர்கள் மேற்கொண்டுவரும வேலைநிறுத்தப் போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கையில் பல்கலைக்கழகக் கல்விசார் ஊழியர்களுக்கு இம்மாத சம்பளத்தைக் கொடுப்பதற்கு நிர்வாகம் எடுத்த நடவடிக்கையை எதிர்த்தே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

நேற்று முற்பகல் 10.30 மணியளவில் போராட்டம் ஆரம்பமானது. சுமார் 500 ஊழியர்கள் செனற் கட்டடக் கதவை மூடி அதனைச் சுற்றி நின்றுகொண்டனர். மாலை வரை போராட்டம் தொடர்ந்தது.

அவசர நிலையைச் சமாளிப்பதற்காக இரு ஜீப்களில் பொலீஸார் செனற் கட்டடத்திற்கு அருகில் தயாராக இருக்கின்றனர். கட்டடத்திற்குள் உள்ள கணனிகள் இயங்காதவாறு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.



யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட சமுதாய மருத்துவத்துறை மாணவர்களின் ஒழுங்கமைப்பில் - கிளிநொச்சி மருத்துவ சங்க ஆதரவுடன் கிளி.மாவட்ட கரைச்சிப் பிரதேசத்துக்குட்பட்ட 12 பாடசாலைகளில் கடந்த திங்கட்கிழமை முதல் நேற்று வரை மூன்று தினங்கள் இலவச மருத்துவ முகாம் இடம்பெற்றது. 'உதயன்' ஊடக அனுசரணையுடன் நடத்தப்பட்ட இம்மருத்துவ முகாமில் மேற்படி பிரதேச பாடசாலைகளைச் சேர்ந்த பலநூற்றுக்கணக்காக மாணவர்கள் கலந்துகொண்டனர். மருத்துவப் பரிசோதனையில் தரம் 5 இற்குட்பட்ட மாணவர்கள் உட்படுத்தப்பட்டதுடன் மருத்துவ ஆலோசனைகளும் இந்த முகாமில் வழங்கப்பட்டன. மருத்துவ முகாம் ஒன்றில் எடுக்கப்பட்ட படம் இது. *(படம்:சேந்தன்)*

# கனடா பொங்கு தமிழ் நிகழ்வுகள் குறித்த நேரத்திற்கு முன்பே ஆரம்பமாகும்

கனடா ரொறன்ரோவில் நடைபெறவுள்ள பொங்கு தமிழ் நிகழ்வுகள் எதிர்வரும் சனிக்கிழமை மாலை 2 மணியளவில் ஆரம்பமாகும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பொங்கு தமிழ் நிகழ்வுகள் பிற்பகல் 4 மணிக்கே ஆரம்பமாகும் எனப் பொங்கு தமிழ் விளம்பரங்களில் குறிக்கப்பட்டிருந்தது. எனினும், நிகழ்ச்சி நிரலினை முழுமையாக உள்வாங்குவதற்காக நிகழ்ச்சிகள் சரியாகப் பிற்பகல் 2 மணிக்கே ஆரம்பமாகும் என அறிவிக்கப்படுகிறது.

எனவே, பொங்கு தமிழில் கலந்துகொள்ளும் மக்களை பிற்பகல் 2 மணிக்கு குயின்ஸ் பார்க் முன்றிலிற்கு வருமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

(ஏ)

# சண்டிலிப்பாயில் தலைமைத்துவப் பயிற்சி

வலி.தென்மேற்கு,செப்.23

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் சண்டிலிப்பாய் (வலி.தென்மேற்கு) பிரதேச செயலகம் நடத்தும் மூன்று நாள் தலைமைத்துவப் பயிற்சி நெறி, இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணிய சர்மா தலைமையில் நடைபெறவுள்ள இப்பயிற்சி நெறியில், இப்பிரிவு கிராம அபிவிருத்திச் சங்கங்களினதும் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்களினதும் பிரதிநிதிகள் பங்குபற்றுவார்கள்.

யாழ்.மாவட்ட செயலக உதவி அரச அதிபர் வே.வீரகத்திப்பிள்ளை, யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.செல்வரத்தினம் விவசாய போதனாசிரியர் திருமதி பரமேஸ்வரி மணிவர்ணன், சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் , உதவித திட்டமிடல் பணிப்பாளர் மு.பாலசிங்கம், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுனேத்திரா சுதாகர், சமூகசேவை உத்தியோகத்தர் செ.யோகானந்தராசா, சமுர்த்தி முகாமையாளர் ந.சுசீந்திரராசா, நியாப் திட்ட செயலகப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கே.பாலகிருஷ்ணன் ஆகியோர் உட்பட மற்றும் பலர் இப்பயிற்சியில் விரிவுரை நிகழ்த்துவார்கள்.

(ஏ-135)

# விண்ணப்ப திகதி நீடிப்பு

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் அடுத்த கல்வியாண்டில் மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்ப முடிவு திகதி அடுத்த மாதம் 10ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தேசிய நடன இறுதிப்பரீட்சையானது வட இலங்கை சங்கீத சபையால் நடத்தப்படும் - பரதநாட்டிய இறுதிப்பரீட்சைக்கும் - தேசிய நடனம் இடைநிலைப் பரீட்சையானது வட இலங்கை சங்கீத சபையின் ஐந்தாம் தரப் பரீட்சைக்கும் சமமானவையாகக் கணிக்கப்படும் எனவும் -

தேசிய சங்கீத இறுதிப்பரீட்சை வடஇலங்கை சங்கீத சபையின் கர்நாடக சங்கீத இறுதிப் பரீட்சைக்கும், தேசிய சங்கீத இடைநிலைப் பரீட்சையானது வடஇலங்கை சங்கீத சபையின் 5ஆவது தரப் பரீட்சைக்கும் சமமானவையாகவும் கணிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(10-201)

## எழுத்தறிவு தின வைபவம்

அரியாலை,செப்.23

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தின் யாழ்.நகர் மேற்கு சமுர்த்தி வலயம்-2 நடத்தும் சர்வதேச எழுத்தறிவு தின வைபவம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3மணிக்கு யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கேட்போர் கூட மண்டபத்தில் நடைபெறும்.

யாழ் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சமுர்த்தி முகாமையாளர் திருமதி யோ.ராகினி வரவேற்புரையை நிகழ்த்துவார்.

யாழ்.பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் சூ.சிறில் பிரதம விருந்தினராகவும் யாழ்.பிரதேச செயலகக் கணக்காளர் எஸ்.குகதாஸன், யாழ்பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் கே.மகேஸ்வரன், ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள்.

இந்த நிகழ்வில் வறிய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.

(ஐ-17)

# முக்கிய ஆவணங்களைப் பெற்ற பின்னரே சந்தேகநபர்களை பிணையில் விடுவியுங்கள்

## பொலீஸாருக்கு நீதிவான் அறிவுறுத்து

போக்குவரத்து விதிகளை மீறுதல் மற்றும் குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்படுபவர்களை பிணையில் விடுவிப்பதாயின் அவர்களிடமிருந்து முக்கிய ஆவணங்களைப் பெற்ற பின்னரே விடுவிக்கவேண்டும்.

- இவ்வாறு யாழ். மாவட்ட பிரதிப் பொலீஸ் மா அதிபர் மற்றும் குடாநாட்டிலுள்ள சகல பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார் யாழ். நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா.

அவர் தமது உத்தரவில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

வீதிப் போக்குவரத்துக் கடமையில் ஈடுபடும் போக்குவரத்துப் பொலீஸார் போக்குவரத்து விதி மீறல்கள் மற்றும் குற்றச்செயல்கள் தொடர்பாக கைதுசெய்யும் சந்தேகநபர்களிடமிருந்து முக்கிய ஆவணங்களைப் பெற்றுக்கொண்டு, குறிப்பிட்ட குற்றத்திற்கான தண்டப் பணத்தைச் செலுத்திய பின்பே ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தி பற்றுச்சீட்டு ஒன்றை வழங்கி வருகின்றனர்.

குறிப்பிட்ட சந்தேகநபர் 14 நாள்களுக்குள் தண்டப்பணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்யப்படும். ஆனால், பெரும்பாலானோர் தம்மிடம் சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் அடையாள அட்டைகள் போன்ற முக்கிய ஆவணங்கள் எவையும் இல்லை என்று தெரிவித்து பொய்யான தகவல்களை வழங்கித் தப்பிச் சென்று விடுகின்றனர். இதனால், இவர்களுக்கெதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல்செய்து விசாரணைகளை மேற்கொள்வது கடினமாகவுள்ளது.

இதனைத் தவிர்க்கும் பொருட்டு எதிர்காலத்தில் இத்தகைய குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகக் கைதுசெய்யப்படுவோரிடமிருந்து தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் ஆகிய மூன்றில் ஏதாவது ஒன்றைப் பெற்றுக்கொண்டே பொலீஸார் சம்பந்தப்பட்டவர்களை பிணையில் விடுவிக்கவேண்டும்.

மேற்குறிப்பிட்ட மூன்று ஆவணங்களில், மூன்று ஆவணங்களில் ஒன்றும் இல்லாதவிடத்து சம்பந்தப்பட்ட சந்தேகநபரைக் கைதுசெய்து நீதிமன்றங்களில் ஆஜர்ப்படுத்தவேண்டும்.

- இவ்வாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

(ஐ-5)

# பாணின் விலை, நிறை என்பன குறித்து மக்கள் நலன் பேணும் குழு பரிசோதனை

## மோசடி புரிவோர் பற்றித் தகவல் தருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.23

பாணின் விலையை அதிகரித்தும் அதன் நிறையைக் குறைத்தும் விற்பனை செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மக்கள் நலன் பேணும் குழு அறிவித்திருக்கின்றது.

பாணின் விலை 19 ரூபாவாகவும், அதன் எடை 450 கிராமாகவும் இருக்கவேண்டும் என்றும்- குடாநாட்டில் சில பகுதிகளில் அண்மையில் நடத்தப்பட்ட பரிசோதனைகளின்போது பாணின் விலை 20 ரூபாவாகவும், அதன் எடை 370 கிராமாகவும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும் -

மக்கள் நலன்பேணும் குழு தெரிவித்துள்ளது.

இப்படிச் சில வெதுப்பகங்கள் மேற்கொள்ளும் ஏமாற்று நடவடிக்கைகளில் இருந்து விடுபட மக்கள் விழிப்பாக இருக்குமாறும் - இப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வெதுப்பகங்கள் பற்றிய தகவல்களை கீழக்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு தெரியப்படுத்தும்படியும் - மக்கள் நலன் பேணும் குழு கேட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - 021 222 7594
கிளிநொச்சி - 228 5003

(ஐ)



யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்கு நேற்றைய தினம் கொரிய நாட்டுத் தூதுக்குழுவினர் வருகை தந்தபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. கொரியத் தூதுவர் லிம் ஜெம்ஹொங், இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி இம் பைங் குவான், கொரியப் பிரதிநிதிகளான கிம் மற்றும் சாங்லிம் ஆகியோர் மங்கள வாத்தியங்களுடன் அழைத்து வரப்படுவதையும் கல்லூரி மேடையில் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். *(படங்கள்:தீபன்)*

## கொழும்பு பங்குப் பரிவர்த்தனை(நேற்றையது)

பங்குச்சந்தை புள்ளிவிவரங்களும் கம்பனி அறிவித்தல்களும் புதன்கிழமை, செப்-22-2004

| சந்தைப்புள்ளிவிவரம் | இன்று | முந்திய நாள் | புள்ளி மாற்றம் | %மாற்றம் |
|---|---|---|---|---|
| அனைத்துப்பங்கு விலைச்சுட்டி (ASPI) | 1457.26 | 1449.50 | 7.79 | 0.54 |
| மிலங்கா விலைச்சுட்டி (MPI) | 2161.67 | 2159.63 | 2.04 | 0.09 |
| மொத்த வருவாய்ச்சுட்டி (TRI) ASTRI - அனைத்துப் பங்குகள் | 1508.10 | 1500.03 | 8.07 | 0.54 |
| MTRI - மிலங்கா பங்குகள் | 2245.54 | 2243.42 | 2.12 | 0.09 |
| சந்தைப்புரள்வு (மில்லியன் ரூபாயில்) | 425.7 | 509.1 | | |
| கைமாற்றப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (மில்லியனில்) | 26.8 | 23.2 | | |
| மொத்தக் கொடுக்கல் வாங்கல் | 6743 | 6061 | | |
| சந்தை மூலதனம் (பில்லியன் ரூபாயில்) | 358.3 | 356.3 | | |

கம்பனி உரிமைப் பங்கு வழங்கல் தொடர்பான அறிவித்தல்கள்

| கம்பனி பெயர் | விகிதம் | XRதிகதி உரிமம் கைமாறற் திகதி |
|---|---|---|
| Hotel Reefcomber Ltd. | 1For 3 | Subject to Approval |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மற்றோர் அமெரிக்கரின் தலையும் துண்டிப்பு

## ஈராக்கில் தொடர்கிறது தீவிரவாத நடவடிக்கை!

### பிரிட்டன் பிரஜையின் நிலைகுறித்து அங்கலாய்ப்பு

ஈராக்கில் 'தௌஹீத் அல்-ஜிஹாத்' தீவிரவாத அமைப்பினால் பணயக் கைதியாகப் பிடிக்கப்பட்ட மற்றோர் அமெரிக்கரும் தலை துண்டிக்கப்பட்டு கோரமாகக் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

உலக அரங்கில்

அமெரிக்கப் பிரஜையான ஜாக் ஹென்ஸ்லே என்ற பொறியியலாளரே இவ்வாறு தீவிரவாதிகளால் தலை துண்டித்துக்கொலைசெய்யப்பட்டவராவார்.

இவர் கொலை செய்யப்பட்ட காட்சியை கட்டாரைத் தளமாகக் கொண்டு இயங்கும் அரேபியத் தொலைக்காட்சியான அல்-ஜெஸீரா ஒளிபரப்பியது.

கடத்தப்பட்ட மற்றோர் அமெரிக்கரான ஆம்ஸ்ட்ராங் படுகொலை செய்யப்பட்டு, 24 மணிநேரத்தின் பின்னர் ஹென்ஸ்லே தலை துண்டித்துக் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

ஒரு சோகம் தணியமுன், இன்னொரு சோகம் ஆட்கொண்டுள்ளது. ஹென்ஸ்லேயின் துணைவியார் மற்றது அவரது குடும்பத்தினர் ஆழ்ந்த சோகத்தில் இருப்பதைத் தொலைக் காட்சிகள் ஒளிபரப்பின.

ஈராக் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பெண் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்பதே இவர்களைக் கடத்திய தீவிரவாத அமைப்பின் பிரதான நிபந்தனை.

ஆனால், தீவிரவாதிகளின் நிபந்தனையை ஏற்க அமெரிக்கா மறுத்துவிட்டது.

அபுமுஸாப் அல்-ஸர்காவி என்ற தீவிரவாதத் தலைவரின் கட்டுப்பாட்டிலேயே ஈராக்கில் இயங்கும் தௌஹீத் அல்-ஜிஹாத் அமைப்பு செயற்படுகிறது என்று அமெரிக்கத் தரப்புச் செய்திகள் சந்தேகம் வெளியிட்டுள்ளன.

இந்தத் தீவிரவாத அமைப்பினால் கடத்தப்பட்ட மூவரில் பிரிட்டனைச் சேர்ந்தவர் மட்டுமே எஞ்சியிருக்கிறார். அவரும் தீவிரவாதிகளால் சிரச்சேதம் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இவரின் நிலை குறித்து பல உலகத் தலைவர்களும் தமது கவலையை வெளிப்படுத்தியுள்ளனர். (க-8)

## பரகுவேயில் ஆர்ப்பாட்டம்

பரகுவே நாட்டில் காணி உரிமை அற்ற ஆயிரக்கணக்கானோர் பெரும் ஆர்ப்பாட்டமொன்றில் நேற்று ஈடுபட்டனர்.

1,300 குடும்பங்களைச் சேர்ந்த காணியற்றவர்களுக்கு பரகுவே அரசு 25 ஆயிரம் ஹெக்டெயர் நிலப்பரப்பை வழங்கத் தீர்மானித்ததை அடுத்தே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதன் மூலம், பல்லாயிரக்கணக்கான பரகுவே நாட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

பரகுவே நாட்டில் 56லட்சம் மக்கள்பின் தங்கிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர்களில் 80 வீத மாணவர்களுக்குச் சொந்தமான காணிகள் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க-8)

## மனிதர்களை ஆட்டிப்படைக்கும் மற்றொரு புதிய ஆயுதம்!

லண்டன்,செப்.23

'ஏ.கே.47'ரக ஆயுதத்தைக் கண்டுபிடித்த மிகைல் காலஸ்னிகோவ் மனிதர்களை ஆட்டிப் படைக்கக் கூடிய மற்றோர் ஆயுதத்தைக் கண்டுபிடித்துள்ளார்.

மிகைல் காலஸ்னிகோவ் ரஷ்யாவைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் கண்டு பிடித்த 'ஏ.கே.47' என்ற ஆயுதம் உலகத்தின் சிறிய, பெரிய நாடுகளின் இராணுவம் முதல் தீவிரவாதிகள் வரை பயன்படுத்தப்பட்டு வருகிறது.

லண்டனில் நேற்றுமுன்தினம் அந்த ஆயுதம் விற்பனைக்கு அறிமுகம் செய்யப்பட்டது. புதிய கண்டுபிடிப்புப் பற்றி காலஸ்னிகோவ் அளித்த பேட்டியில் தெரிவித்தகாவது:

'ஏ.கே.47' கண்டுபிடித்ததன் மூலம் எனக்குக்கிடைத்த நற்பெயரைத் தொடர்ந்து காப்பாற்ற விரும்புகிறேன். மேலும், பல நல்ல காரியங்களைச் செய்வதன் மூலம் எனது ஆயுதத்துக்குக் கிடைத்த நற்பெயரை மேலும் விரிவுபடுத்த நினைக்கிறேன்.

என்னுடைய நாட்டின் எல்லைகளைக் காகக வேண்டும் என்ற தேசபக்தியில்தான் 'ஏ.கே.47' ஐக் கண்டு பிடித்தேன். ஆனால், கெரில்லாக்கள் முதல் தாதாக்கள் வரை எல்லோருடைய விருப்பமான ஆயுதமாக அது மாறிவிட்டது. உலகம் முழுவதும் 'ஏ.கே.47' பரவியது என்னுடைய தவறில்லை. அதனுடைய நம்பகத்தன்மை அப்படி.

தற்போது, என்னுடைய பெயரில் புதிய கண்டுபிடிப்பை அறிமுகம் செய்துள்ளேன். ரஷ்யாவில் விளைந்த தானியங்களையும் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கிலுள்ள லடோகா ஏரியின் தண்ணீரையும் பயன்படுத்தி இது தயாரிக்கப்படுகிறது நண்பர்களோடு இதைச் சேர்ந்து 'அடித்தால்' உற்சாகமாக இருக்கும்.

- இவ்வாறு காலஸ்னிகோவ் கூறினார்.

அவர் கண்டுபிடித்துள்ள புதிய ஆயுதம் 'காலஸ்னிகோவ் வோட்கா' ரஷ்யாவின் புகழ் பெற்ற மதுபானங்களில் ஒன்றுதான் பிரிட்டன் ரஷ்யாவில் இதுவரை வந்த வோட்கா ரகங்கள் எல்லாவற்றையும் 'காலஸ்னிகோவ் வோட்கா' தூக்கிச் சாப்பிட்டுவிடுமாம். (க-8)

## அமெ.அதிபர் புஷ்ஷுடன் இந்தியப் பிரதமர் சந்திப்பு!

நியூயோர்க்,செப்.23

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷைச் சந்தித்துப் பேசினார். ஐ.நா. சபைக் கூட்டத்தில் பங்கேற்க பிரதமர் மன்மோகன்சிங் அமெரிக்கா சென்றுள்ளார். இன்று ஐ.நா.பொதுச்சபைக் கூட்டத்தில் அவர் உரையாற்றுகிறார்.

நேற்றுமுன்தினம் மன்ஹாட்டனில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் தங்கியிருந்த அஸடோரியா ஹோட்டலுக்குச் சென்று அவரை சநதித்துப் பேசினார். பிரதமரான பின்னர் அதிபர் புஷ்ஷை மன்மோகன் சிங் சந்தித்துப் பேசுவது இதுவே முதல் தடவையாகும்.

உலகளவில் தீவிரவாதத்திற்கு எதிராகப் போராடுவது, பேரழிவு ஆயுதங்களின் பரவலைத் தடுப்பது, இந்திய - பாகிஸ்தான் உறவுகளில் முன் னேற்றம் காண்பது, இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்துவது உட்படப் பல்வேறு விவகாரங்கள் பற்றி அவர்கள் விவாதித்தனர்.

இந்தியா மீது அமெரிக்கா விதித்த பொருளாதாரத் தடைகளை மேலும் தளர்த்த சில நாளகளுக்கு முன் அமெரிக்கா ஒப்புக்கொண்டது. குறிபபாக ஏற்றுமதி தடைகளைத் தளர்த்துவது, தடை செய்யப்பட்ட பட்டியலிலிருந்து 'இஸ்ரோ' அமைப்பை நீக்குவது ஆகியவை இதில் முக்கியமானவை.

அந்தப் பின்னணியில் இந்தச் சந்திப்பு முக்கியமானது. மேலும் இருநாட்டு உறவு வலுப்பட இச்சந்திப்பு வழிவகுக்கும். பாகிஸ்தானுடன் நெருக்கமான உறவிருந்தாலும் இந்திய உறவுககு அமெரிக்கா முக்கியத்துவம் வழங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-8)



## சாயி சிந்தனை

### எந்த மதமும் தீயதல்ல

ஒவ்வொரு மதமும் தியாக தத்துவத்தை விரிவாக போதிக்கிறது. அவர் கிறிஸ்துவாக இருந்தாலும், பாரசீகத்தவரானாலும், முஸ்லிமாக இருந்தாலும், அன்றி இந்துவானாலும், ஒவ்வொருவருள்ளும், புனித உணர்வுகள்நிறைந்தே காணப்படுகின்றன. எந்த மதமும், தீயதல்ல மனம நல்லதனால் மதம் எங்ஙனம் தீயதாகும்? ஆகவே, நாம் மனதை முதலில் நல்லதாக மாறறிக்கொள்ளவேண்டும். பிறகு மதங்கள் தம்மைத் தாமே திருத்திக் கொள்ளவேண்டும். வேற்றுமை பாராட்டக் கூடாது. சகோதர சகோதரிகளாக வாழவேண்டும். பாசத்துடன் வாழ வேண்டும். இதைத்தான் ஜசஸீம் கூறினார். என் அருமை மகனே! அனைவரும் ஒன்றே! எல்லோரிடமும் ஒரே மாதிரியாக நடந்துகொள்ளுங்கள். அதுதான் ஈஸ்வரஸ் ஸர்வ பூதாளம், ஈஸாவாஸ்யம் இதம் ஜகத் என பாரத கலாசாரத்தில் குறிப்பிடப்படுகிறது. இறைவன் எல்லா உயிரினங்களிலும் நிறைந்திருக்கிறார். எல்லா இடத்திலும் பரவி நிற்கிறார்.



எனறுதான் பாரத கலாசாரம் உறுதியாகக் கூறுகிறது. எல்லா மதங்களிலும் தீயதைப் போதிப்பதிலலை. எல்லா மதங்களும் மற்றவர்க்கு உதாரணமாக, வழிகாட்டும் வகையில்தான் விளங்குகின்றன. நீங்கள் அதனை உங்கள் அன்றாட வாழ்க்கையில் எடுத்து விளக்குகிறீர்கள். ஒரு தட்டில் ரொட்டியையும் உருளைக்கிழங்கையும் வைத்துவிட்டு நூறுமுறை அவற்றின் பெயர்களைக் கூறினாலும் உன் வயிறு நிரம்பாது. அதனை எடுத்து உண்ண வேண்டும். அது போல பிறருக்கு எடுத்துச் சொல்வதை விட, உனது வாழ்க்கையில் ஒன்றையாவது நடை முறைப் படுத்த வேண்டும். சொல்லியிருக்கும் தத்துவங்களை நடைமுறையில் கொண்டுவர முயற்சி செய்யுங்கள். இவ்வாறு செய்தால் இந்நாடு வளரும். வளர்ச்சிபெறும். புத்தக அறிவும் மேலோட்டமான அறிவும் இருந்தால் போதாது. நாம் புத்திசாலித்தனத்திலும் அறிவிலும் வளர்ந்து வருவதாக நினைக்கின்றோம். இல்லை, அதற்குப் பதில் நமக்கு இருக்கும் அறிவையும் கெடுத்துக்கொள்கிறோம்.

*(ஆதாரம்: சனாதன சாரதி)*

**இலங்கை ஸ்ரீ சத்ய சாயி நிலையங்களின் காலாண்டு இதழான "சாயிமார்க்கம்" சஞ்சிகையின் 2004 செப்ரெம்பர் மாத இதழில் வெளியான கட்டுரையை இங்கே பிரசுரம் செய்கிறோம்**

### அன்பு ஒரு மகாசக்தி – அதிசய அனுபவம்

முதிய சாயி பக்தனும், அவரது முதிய மனைவியும் வலது குறைந்த மகனும் ஒரு வீட்டில வாழ்கிறார்கள். பக்தனின் ஆருயிர் நண்பரொருவர். அவரது பேர்த்தியின் கலியாணத்திற்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தார். இக்கலியாணத்தை முதிய சாயிபக்தன்தான் பொருத்தி வைத்ததனால், பக்தனும் மனைவியும் கலியாணத்திற்காகப் போகவேண்டிய கட்டாயம் இருந்தது. கலியாணம் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை (01.02.2004) நண்பகல் சுபமுகூர்த்தத்தில் நடைபெற ஏற்பாடாகியிருந்தது. முதிய பக்தனின் வீட்டில் சமைக்க, மகனின் வேலை பார்க்க, வெளிவளவைச் சுத்தி செய்ய மூன்று உதவியாளர்களை சம்பளத்திற்கு அமர்த்தியிருந்தார்கள். அவர்கள் பகலில் வந்துபோய் விடுவார்கள். வீட்டில் சகல அறைகள் உள்ளுக்கெல்லாம் போய் வருவார்கள். (31.01.2004) சனிக்கிழமை நண்பகல் நகைகள் நகைப்பெட்டியிலிருந்ததை அவதானித்தார்கள். அலுமாரிகள் பூட்டப்படுவதில்லை. ஞாயிற்றுக்கிழமை காலை நகைகளைப் போடுவதற்கு நகைப்பெட்டியைத் திறந்தால் நகைகளைக் காணவில்லை. மனைவியார் மிகவும் துயரமடைந்து பகவானின் படத்திற்கு முன்னால் மண்டியிட்டார். தனது நகைகளை முக்கியமாகத் தாலிக்கொடியை மீட்டுத்தர வேண்டுமென்று பிரார்த்தித்தார். கணவனுக்குச் சொன்னபோது, அவர் 'பரவாயில்லை போனது போகட்டும் தாலிக்கொடி ஒன்றைச் செய்துபோடுவம், ஒருவரையும் சந்தேகிக்க வேண்டாம். வேலையாட்களின்மேல்தொடர்ந்து அன்பாயிருக்கவும்' என்று ஆறுதலும், புத்தியும் கூறினர். எம்மில் பலர், உடனே வேலையாட்களில் சந்தேகம் கொண்டு வெறுப்புணர்வுடன், பொலிஸில முறைப்பாடும் போட்டிருப்போம். திட்டு திட்டென்று திட்டியிருப்போம். ஆனால், இங்கே ஆன்மீகம் கையாளப்பட்டது. அமுல்படுத்தப்பட்டது. முதிய தம்பதிகள் நகைகள் இல்லாது கலியாண வீட்டிற்குப் போய்வந்தார்கள்.

மூன்று நாள்களுக்குப் பின்பு, சின்னப்பார்சல் ஒன்று பதிவுத் தபாலில் வந்தது. திறந்து பார்த்தபொழுது ஒரு சின்ன பிளாஸ்ரிக் டப்பாவில் தாலிக்கொடி இருந்தது. என்ன அதிசயம்! மனைவியாருக்கு ஆனந்தமோ ஆனந்தம். இன்னும் இரண்டு நாள்கள் கழித்து இன்னொரு சின்னப் பார்சல் பதிவுத் தபாலில் வந்தது. திறந்து பார்த்த பொழுது, மீதி நகைகளும் கிடந்தன. வேலையாள்கள் தொடர்ந்து அன்புடன் வேலை செய்கின்றார்கள். இவ்வதிசயம் அன்பின் நிமித்தத்தினால் நிகழ்ந்தது. இதிலிருந்து அன்பின் மகாசக்தியை நாம் உணரலாம்.

*கட்டுக்கதையல்ல! இது எமது பிரதேசத்தில் நடைபெற்ற உண்மையான சம்பவம்.*

**செவ்வி கண்டவர்: வைத்திய கலாநிதி இ.கணேசமூர்த்தி**

'கடவுளின் அன்புக்கும் அருளுக்கும் பாத்திரமாக விரும்பினால், பிறரிடம் அன்பு காட்டுவதுதான் ஒரே ஒரு வழி' - ஸ்ரீ சத்திய சாயி பாபா

### வாக்களிப்பதற்கு அடையாள அட்டையா?

## அன்று நீதிமன்றம் சென்ற டக்ளஸ் இன்று அதை ஆதரிப்பது வேடிக்கை!

### நாடாளுமன்றத்தில் சுரேஷ் பிரேமச்சந்திரன்

கொழும்பு,செப்.23

"வாக்களிப்பதற்கு அடையாள அட்டை அவசியம் இல்லை என்று தெரிவித்து அன்று உயர் நீதிமன்றம் சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இன்று அடையாள அட்டை அத்தியாவசியம் என அரசுக்கு வக்காலத்து வாங்குவது வேடிக்கையானது" - எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பியான சுரேஷ் பிரேமச்சந்திரன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை ஏளனம் செய்தார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தேர்தல்கள் திருத்தச்சட்டங்கள் தொடர்பான விவாதம் இடம்பெற்றது. சட்டமூலத்தை சமர்ப்பிக்கும்போதே சபையில் சர்ச்சைகளும் ஆரம்பித்து விட்டன.

விவாதம் நடைபெற்றாலும் வாக்கெடுப்பு நடத்தப்படக் கூடாது என்பதே எதிர்க்கட்சிகளின் வாதம்.

ஆனால், நேற்றுமுன்தினமே வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்பது ஆளும் தரப்பினரின் பிடிவாதம். இதனால், சபையில் சிறிது நேரம் சர்ச்சை.

எனவே, கட்சித் தலைவர்களின் கூட்டத்தில வாக்கெடுப்புத் தொடர்பாகத் தீர்மானிப்போம் என சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்தார் சபாநாயகர் லொக்கு பண்டார.

இவ்விவகாரத்தின் மீது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான நடராசா ரவிராஜ் பேசிக்கொண்டிருக்கும்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அடிக்கடி குறுக்கீடு செய்தார்.

இதனால் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கும் இடையில் பலத்த வாக்குவாதம் ஏற்பட்டது.

"கடந்த தேர்தலின்போது சிறுவர், சிறுமியர் கூட கட்டுக்கட்டாக வாக்களித்தனர். முற்றிலும் முறைகேடான தேர்தல் என்று தேர்தல் கண்காணிப்புக் குழு அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

"வாக்காளர்களை அடையாளப்படுத்த தேசிய அடையாள அட்டை அவசியம்" என்றார் டக்ளஸ்.

"நேர்மையைப் பற்றிப் பேச உங்களுக்கு வெட்கம் இல்லையா? உங்களைப் போன்று ஐந்து வாக்குகளும், ஒன்பது வாக்குகளும் பெற்று இந்தக் கதிரைக்கு நாம் வரவில்லை.

"2001 ஆம் ஆண்டு தீவுப்பகுதிக்கு வாக்கு கேட்க வந்தவர்களை கொலை செய்த நீங்கள இன்று இப்படிப் பேசுவது வேடிக்கையானது.

"அப்போது வாக்களிப்பதற்கு தேசிய அடையாள அட்டை தேவை இல்லை என்று உத்தரவு பெறுவதற்காக உயர் நீதிமன்றம் சென்றீர்கள். இப்போது யாரை திருப்திப்படுத்த அந்த முறையை ஆதரிக்கின்றீர்கள்? " - என்றார் சுரேஷ் பிரேமச்சந்திரன்".

இவ்வேளையில் மீண்டும் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டன.

"அன்று இருந்த யுத்த சூழலில் அப்படிக் கேட்டேன். ஆனால், இன்று நிலைமை வேறு!' - எனறு பதிலளித்தார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. (ஐ-க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீ ராமஜெயம்

# யாழ். வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய

# தேர்த்திருவிழா சிறப்புமலர் - 23.09.2004





## கண்ணனைக் காண வாரீர்

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும் அருக்கண் அணிநிறமும் கண்டேன் செருக்கிளரும் பொன் ஆழிகண்டேன் புரிசங்கும் கைக்கண்டேன் என் ஆழிவண்ணன் பால் இன்று எமது ஈழத்திருப்பதிவாசன் வண்ணை நகர் வளம் பெறவிளங்கும் வள்ளல் ஸ்ரீவேங்கடவரதன் தேரில் எழுந்தருளும் அரும் பெரும் காட்சியைத் தரிசிக்க இவன் முற்றம் கூடும் அடியார் கூட்டம் கோவிந்தா! கோவிந்தா!

என்று பக்திப் பரவசத்துடன் பரவும் காட்சி காணவாரீர்!
திருவேங்கடநாதன் தேரில் ஆரோகணிக்கும் சிறப்புக்காண வாரீர்!
ஜடாமுடிதரித்து துளாய் மலர் சூடும் பிரானைக் காண வாரீர்!
கமலத் திருவிளக்கு அரசன் தேரில் உலா வரும் காட்சி காண வாரீர்!
அணி அரங்கத்துப்பள்ளி கொள்ளும்
மாயோன் பவனிவரும் காட்சி காண வாரீர்!
முகில் உருவாய் கனல் உருவாய்
புனல் உருவாய் நிற்கும் எந்தையின் திருவுரு காண வாரீர்!
உறிமேல் நறு நெய் உண்ட அமுதனைத் தரிசிக்க வாரீர்!
மாபலி அகந்தை அகற்ற குறளாய்
வந்து மூவுலகு அளந்த திரிவிக்ரமனைக் காண வாரீர்!
திரு வேங்கடமலை மீது உறையும் இறையை வணங்க வாரீர்!
பார்மகள் பூமங்கையொடு பொலிந்து நிற்கும் வரதனைக் காண வாரீர்!
சிவன் பிரமன் இந்திரன் வானவர்க்கு நாயகராகத் திகழும் நாராயணனை வணங்க வாரீர்!
வேதம் நான்கும் உணர்ந்த வேதியனைத் துதிக்க வாரீர்!
பிணிபசி மூப்புத் துன்பம் அகற்றும் வித்தகனை வணங்க வாரீர்!
அறந்திகழத் தோன்றிய அண்ணல் இராமனைத் துதிக்க வாரீர்!
பாண்டவர்க்குத் தூது சென்று பாரதப் போர் முடித்த பார்த்த சாரதியைக் காண வாரீர்!
வாட்கவி சூறையிடச் செல்வனாய்த் தோன்றி ஆட்கொண்ட மாலைத் தரிசிக்க வாரீர்!
கணிகை பால்மையல் கொண்ட தொண்டரடிப்பொடியின் பழவினை அகற்றிய அரங்கனைத் துதிசெய்ய வாரீர்!
வலமார் பினில் வாழ் மங்கை மணாளனை ரத ஊர்தியில் காண வாரீர்!
வேண்டுவோர் வேண்டும் வரனை ஈந்தருளும் வேங்கடேசன் தாள் பணிய வாரீர்!



**இரா.லோகநாதன்**
தலைவர், ஆதீன மகாசபை,
வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம், யாழ்ப்பாணம்.

ஸ்ரீ ராம ஜெயம்

## ஆலயப் பிரதம குருவின் ஆசியுரை

ஈழத்து திருப்பதி எனப் போற்றப்படும் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாளின் இரதோற்சவம் இன்று நிகழ்கின்றது. "செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே" என குல சேகராழ்வாரினால் போற்றித் துதிக்கப்படும் ஸ்ரீ மத் நாராயணன் எமது துயரங்களை நீக்க வல்லவன். தன்னையே கதி என சரணடைந்த வர்களை அவன் ஒருபோதும் கைவிட்டதில்லை. தர்மம் அழிந்து அதர்மம் தழைக்கும் வேளையில் பகவான் அவதாரம் எடுத்து தர்மத்தை நிலைநாட்டுகின்றார். ஏனைய தெய்வங்களில் இல்லாத சிறப்பு ஸ்ரீ மத் நாராயணனுக்குரியது. அவர் மனிதரிடையே பிறந்து மானிடர் உய்வதற்கு வழிகாட்டினார். அவை என்றும் போற்றப்படும் மகாபாரத, இராமாயண இதிஹாசங்களாகத் திகழ்கின்றன.

சர்வ ரட்ஷகரும், பகவத்கீதையை உலகிற்குத் தந்தவனுமான பகவான், ஸ்ரீதேவி, பூமிதேவி சஹிதராக இன்று அழகிய இரதத்தில் உலாவருகின்றார். வடம் தொட்டு இழுத்து அவனின் பேரழகைக்கண்டு தரிசித்து உய்யவரும் அடியார்களுக்கும் மற்றும் அனைவருக்கும் சகல வளங்களும் கிடைக்கப் பிரார்த்தித்து எமது நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

"வேறொன்றிலும் புலன்களைச் செலுத்தாது என்னை வழிபடுகின்ற பக்தனுடைய யோகஷேமங்களை நான் தாங்குகின்றேன்" - பகவத் கீதை

**ஸ்ரீவத்ஸ.வ.இராஜேஸ்வரக்குருக்கள்**
பிரதமகுரு, ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.


புத்தம் புதிய ஆடைகளுக்கு
அஜந்தாஸ்
ரெக்ஸ்வுரல்ஸ்
54, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 021 222 2899 (சி-37770)

நவயுகம் மகிழும் புதுமலர்ப்பூங்கா
புதுமணத்தென்றலில் பூத்து நிற்கும்
நவநாகரீக நகை உலகம்
சிறீ மீனாட்சி
தங்கமாளிகை
இல.187, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். T.P.6109 (சி-37769)

நவநாகரீக நகைகளுக்கு
நம்பிக்கையான
ஸ்தாபனம்
ஸ்ரீ லக்ஷ்மி
ஜுவல்லரி
220 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி-37764)

நவீனபாணியிலான
நகைகளுக்கு சிறந்த இடம்
நியூ விஜயன்
நகைமாடம்
06, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 2903 (சி-37766)

மொத்த, சில்லறை
விற்பனையாளர்
ஏகாம்பரம்
புடைவை மாளிகை
(72)9, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 021 222 2151 (சி-37771)

ருசிமிக்க குளிர்பான
சிற்றுண்டிகளுக்கு என்றும்
வாருங்கள்
லிங்கன் கிறீம் ஹவுஸ்
இல.119, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி-37758)

அகிலன் நகைமாடம்
தங்கப் பவுண் நகை வியாபாரம்
ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த
தவணையில் செய்து கொடுக்கப்படும்.
AGILAN NAGAI MAADAM
240, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
240, Kasthuriar Road, Jaffna (சி-37760)

அசல் 22 கரட் தங்க
நகைகளுக்கு சிறந்த இடம்
சானுகா நகைமாடம்
200G, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 021 222 3700 (சி-37763)

JIALING மோட்டோர் சைக்கிள்
இலங்கையின் ஏக இறக்குமதியாளர்
யசோ மோட்டோர்ஸ்
163, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.,
T.P.: 222 2544 (சி-37772)

நல்ல தரமான மின்சாரப்
பொருள்களுக்கு நாடுங்கள்
யாழ்ப்பாண மின்னகம்
141, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 222 5766 (சி-37774)

நவீன வடிவமைப்புகளில் அழகிய தங்க நகைகளை
செய்துபெற்றுக்கொள்ளலாம் நகை என்றதும்
நாடவேண்டிய ஸ்தாபனம்
துர்க்கா நகைப்பூங்கா
தங்கப்பவுண் நகை வியாபாரம்
ஓடர் நகைகள் குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
71, கன்னாதிட்டி, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். T.P 222 2228 (சி-37761)

நவீன பாணி சாறி வகைகளுக்கு
நாடவேண்டிய இடம்:
மகாநதி
புடைவையகம்
16, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
T.P 222 2552 (சி-37772)

உறுதியான உத்தரவாதம் மிக்க நகைகளுக்கு
நதியா நகைமாடம்
149,02, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P 021 3479
நிதியா நகைமாடம்
99, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கவுசன் மொடன் ஜுவல்லறி
129, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி-37767)

அருள் கொமினிகேசன்
நேரடி உள்நாட்டு, வெளிநாட்டு அழைப்புக்கள்,
இன்ரநெற் மூலமான சர்வதேச அழைப்புகள்,
பக்ஸ், போட்டோ கொப்பி, லமினேஷன்
பிரிண்டிங், ஸ்கானிங்
Net to Phone, Go to Call டொலர்
Calling cards, Internet Browsing
இல.1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 3536
e-mail arul.com 2003 @ Yahoo.com (சி-37779)

நம்பிக்கையான நகைகளுக்கு
நாணயம்மிக்க இடம்
பொ.அம்பலவாணர்
நகைமாளிகை
110, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி-37765)

மேசைத்தொலைபேசி அதிரடிவிலையில்
பவர் செலூலர் ரேடிங்
கம்பனி
185, முதலாம்மாடி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P 021 222 7070, 071 239220, 0777 281 521
Shop: 205, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி-37768)

சாரங்கா நகைமாடம்
Saranga Nagai Madam
தங்கப் பவுண் நகை வியாபாரம்
22Kt. Gold Jewellery
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 222 26972, T.P. /Fax: 021-222 2480
சாரங்கன் நகையகம்
90/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 222 6059 (சி-36762)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# நமது வளங்களை நன்கு பயன்படுத்துவோம்

ஜப்பான் நாட்டின் தொழில்நுட்ப உதவி வழங்கும் தூதரகங்களின் முதுநிலை ஆலோசகர் தனக்குரே அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த சமயம், யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் நடந்த நிகழ்வில் எழுப்பிய கேள்வி, குடாநாட்டில் மாத்திரமின்றி இலங்கை முழுவதிலும் உள்ள அறிஞர்களின் மனதைத் தட்டி எழுப்பவேண்டிய ஒன்றாகும்.

"இந்த நாட்டிலேயுள்ள வளங்களைக் கொண்டு புதிய தொழில்நுட்பங்களைக் கண்டுபிடிப்பதற்கு முயற்சித்தால் நிச்சயமாக இந்த நாட்டை முன்னேற்றலாம். இதனைவிடுத்து, எடுத்ததற்கெல்லாம் வெளிநாடுகளின் உதவிக்காகக் கையேந்தலாமா? அப்படிச் செய்வது இந்தநாட்டின் வளங்களை அழிக்க முற்படுவது போன்றதல்லவா?" - என்று பட்டவர்த்தனமாக, வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கேட்டிருக்கின்றார் அவர்.

ஜப்பான் நாடு அபிவிருத்தி அடைந்த - தொழில்நுட்பத்தில் உயர்ந்த - நாடாக இன்று மிளிர்கின்றது.

இரண்டாவது உலகப் போரில் அணுகுண்டு வீச்சுக்கு இலக்கான அழிவோடு, தனது அபிவிருத்திப் பாதையை முடுக்கிவிட்ட அந்நாடு, இன்று உலகின் வசதிபடைத்த நாடுகளின் வரிசையில் உச்சியில் உள்ளது.

இதற்கு ஜப்பானியர்களின் சலியாத உழைப்பு மட்டும் காரணமல்ல. தமது சொந்த வளங்களைக் கொண்டு கடும் முயற்சி எடுத்ததே அவர்களின் வெற்றிக்குக் காரணம் என்கிறார் ஆலோசகர் தனக்குரே.

அதேபோல இலங்கையர்களும் சொந்த வளங்களைப் பயன்படுத்தி, கண்டுபிடிப்புகள் மேற்கொண்டு, மேலும் முன்னேறலாம் என்கிறார் அவர்.

எந்த ஒரு நாட்டிலும் ஏதோ ஒரு வகையான திறன் காணப்படும். அதனை அடையாளம் கண்டு, அதன் மூலம் புதிய செய்திறன்களை உருவாக்க - முன்னெடுக்க - முயற்சிக்க வேண்டும் என்கிறார் அவர்.

"என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்; ஏன் கையை ஏந்தவேண்டும் வெளிநாட்டில்?" - என்ற பாடல் அடி, மக்கள்திலகம் எம்.ஜி.இராமச்சந்திரன் நடித்த 'விவசாயி' படத்தில் வரும். நாம் அனைவரும் இன்று சிந்திக்க வேண்டிய கருத்தை அந்தப்பாடல் அடிகள் எதிரொலிக்கின்றன.

வரவு - செலவுத்திட்டத்தில் பெரும் தொகை துண்டு விழும் சிக்கலைக் காலங்காலமாக எதிர்நோக்கும் தென்னிலங்கை அரசுகள் அதனைச் சமாளிப்பதற்கு இரண்டே இரண்டு வழிகளைத்தான் கைவசம் வைத்திருக்கின்றன.

ஒன்று - சர்வதேச சமூகத்திடம் கையேந்துவது. அது நிதி உதவியாக இருக்கலாம்; அல்லது நீண்டகால அடிப்படையிலான கடன் உதவியாக இருக்கலாம்.

அடுத்தது - தேசிய சொத்துக்களைத் தனியார்மயப்படுத்துவது என்ற பெயரில் 'வித்துச் சுத்தி' நிதியைத் திரட்டுவது.

இப்படிக் கடன் எடுக்கும் அல்லது தேசிய சொத்துக்களை விற்றுத்தள்ளும் தென்பகுதித் தலைமைகளினால், எமது மண்ணின் - மக்களின் - வளத்தைப், பயன்படுத்தி, வளர்ச்சிப் பாதையைக் காட்டி, நாட்டை விருத்திசெய்வது என்பது இயலாத காரியம்.

தங்களது தவறான - தீர்க்க தரிசனமற்ற - அன்றாடப் பிரச்சினைகளை மட்டும் சமாளிக்கின்ற - கொள்கைப் போக்குடைய நமது நாட்டின் அரசியல் தலைமைகளினால் இந்த நாட்டின் எதிர்காலமே குட்டிச் சுவராகிக் கொண்டிருக்கின்றது.

நாட்டின் வளத்தைச் சரிவரப் பயன்படுத்தத் தவறுவது மட்டுமன்றி முழு நாட்டையுமே கடனில் ஆழ்த்தும் திருக்கூத்தைத்தான் தென்னிலங்கை அரசியல் முறைமை காலம் காலமாக அரங்கேற்றி வருகின்றது.

எடுத்ததற்கெல்லாம் பிறநாடுகளை நம்பி இருப்பது இந்த நாட்டின் வளங்களை இந்த நாட்டவரே அழிப்பது போன்றதாகும் என்று சுட்டிக் காட்டியுள்ள ஜப்பான் ஆலோசகர், இலங்கை மாணவர்களிடம் - குறிப்பாக யாழ்ப்பாண மாணவர்களிடம் - புதிய தொழில்நுட்பத் திறன்களை வெளிக்காட்டும் ஆர்வம் உண்டு என்பதையும் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

இத்தகைய மாணவர்களுக்குச் சிறந்த வழிகாட்டல் வாய்ப்புகளும், வசதிகளும் செய்துகொடுக்கப்பட வேண்டும். அவர்களைச் சரியான திசையில் வழிப்படுத்த வேண்டும். அதன் மூலம் பொருளாதார, அபிவிருத்திப் பாதையில் உச்சப் பயனை நாம் பெற முடியும்.

நாட்டையும், தேசியத்தையும், இனத்தையும் காக்கும் பணியில் தீரத்துடன் ஈடுபட்டிருக்கும் நமது இளம் சமூகத்துக்கு நாட்டின் வளத்தையும் வசதியையும் உரிய முறையில் பயன்படுத்தி உயர்ந்த பெறுபேற்றை வெளிப்படுத்துவது அவ்வளவு ஒன்றும் சிரமமான காரியமல்ல. அதற்கு வாய்ப்பு வழங்கப்படுமா என்பது தான் கேள்வி.

# பேச்சு மூலமே தீர்வு போர் மூலம் அல்ல!

## ஜனாதிபதி சந்திரிகா நியூயோர்க்கில் அறிவிப்பு



நியூயோர்க்,செப்.23

"இலங்கையின் இனப்பிரச்சினைக்கு பேச்சுமூலம் நிரந்தரத்தீர்வு காண்பதற்கு அரசு தொடர்ந்து முயலும்; யுத்தம்மூலம் அல்ல."

- இவ்வாறு உறுதியாகக் கூறியிருக்கின்றார் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

ஐ.நா. பொதுச்சபையில் உரையாற்றுவதற்காக அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, கடந்த திங்கட்கிழமை அங்கு ஆசிய சமூகத்தவர்கள் மத்தியில் உரையாற்றினார்.

"பிணக்குக்குத் தீர்வுகாணுதலும், சமாதானத்தைக் கட்டியெழுப்புதலும் இலங்கையிலிருந்து பாடம்" என்ற தலைப்பில் அவர் உரைநிகழ்த்தினார். அந்த உரையிலேயே மேற்கண்டவாறு அவர் உறுதி கூறினார்.

அமெரிக்காவில் வசிக்கும் இலங்கையர்கள், ஆசிய மற்றும் அமெரிக்க ஊடகப் பிரதிநிதிகள், துறைசார்ந்தோர், வர்த்தக சமூகத்தினர் ஆகியோர் அடங்கிய இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி, பல்லின - ஜனநாயக நாடு ஒன்றே இன்றைய தேவை என்பதே தனது அரசின் கருத்து என்றார்.

"பேச்சு மூலம் சமாதானம் எட்டப்பட வேண்டும். ஆனால், எதைக் கொடுத்தாவது சமாதானத்தைப் பெறவேண்டும் என்று நாம் கருதவில்லை. நாட்டின் இறைமை, ஆள்புல ஒருமைப்பாடு, பாதுகாப்பு ஆகியவை உறுதிப்படுத்தப்படவேண்டும் என நாங்கள் திடமாக நம்புகிறோம்.

"நாம் நீதியான சமாதானத்தை வேண்டுகின்றோம். அது, நாட்டுக்குள் ஓரினத்திற்கு அல்லது ஒரு குழுவிற்கு உரிமை வழங்குவதாக மட்டும் இருக்கக்கூடாது; ஏனைய எல்லாப் பிரஜைகளுக்கும் உள்ளது போல அனைத்துத் தமிழர்களுக்கும் உரிமைகளை வழங்குவதாக இருக்க வேண்டும்.

"வாழ்க்கையை நாங்கள் நம்புவதால்; மனிதாபிமானத்தை நாங்கள் விரும்புவதால்; மிகமோசமான பயங்கரவாதக் குழுவை நாங்கள் நம்புவதால்; ஆகக் குறைந்தது அவர்களில் ஒரு சிலராவது எப்போதோ ஒருசமயம் தமது மனிதாபிமானத்தை வெளிப்படுத்துவார்கள் என நாங்கள் நம்புவதால் நாம் சமாதானப் பாதையைத் தெரிந்தெடுத்துள்ளோம்.

"தொடர்ந்து வந்த அரசுகளால் தமிழர்கள் பாகுபாட்டுக்கும், அநீதியான நடத்துகைக்கும் உட்படுத்தப்பட்டு வந்தார்கள் என்பதை எனது அரசே முதல்தடவையாகப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டது.

"ஆனால், அதற்காக தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று தம்மைக் கூறிக் கொள்ளும் ஒரு குழு, தீவிரவாதம் மூலம் அதற்குப் பதில் தருவதைச் சரியான மார்க்கம் என்று நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டோம்.

"இந்தத் தீவிரவாத நிலைப்பாட்டிலிருந்து அவர்களை அரசு திசைதிருப்ப வேண்டுமானால் -

"பிணக்கு மூலமாக அமைந்த காரணத்துக்குத் தீர்வுகாண்பதோடு நாம் ஆரம்பிக்கவேண்டும்.

"அதனால்தான், அதிகாரப்பகிர்வு பற்றிய விரிவான யோசனைகளுடன் பேச்சு முயற்சியில் பத்து ஆண்டுகளுககு முன்னர் எனது அரசு இறங்கியது.

"அது குறித்து ஆராய மறுத்து புலிகள் மீண்டும் யுத்தத்துக்குச் சென்றதையடுத்து, அந்த யோசனையைத் தமிழ் மக்களுக்கும், நாட்டுக்கும் 1995 ஓகஸ்டிலும், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு 1997 இலும் சமர்ப்பித்தோம்.

"சுமார் இரண்டரை வருடங்களாக விரிவாக ஆராய்ந்த பின்னர் பிரதான எதிர்க்கட்சி அதை ஆதரிக்க மறுத்தது

"அதிகாரப் பகிர்வுக்கான பிரேரணை புதியதோர் அரசமைப்பு வடிவத்தில் 2000 ஓகஸ்டில் என்னால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

"நாடாளுமன்றத்தில் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய அனைத்துக் கட்சிகளுடனும் தீவிர கலந்தாலோசனை நடத்தப்பட்டது. புதிய அரசமைப்பின் வடிவுக்கான இணக்கம் ஏற்பட்டது.

"ஆனால், புதிய அரசமைப்பை நிறைவேற்றுவதற்கான மூன்றில் இரண்டு பங்கு ஆதரவைப் பெறுவதற்கு ஏழு வாக்குகள் குறைந்ததால் அதனை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது.

"ஓர் எதிர்க்கட்சி மீண்டும் ஒருதடவை ஆதரிக்க மறுத்துவிட்டது." - இப்படி ஜனாதிபதி கூறினார். (ஐ-க-9-10)

# சமாதானத்தைக் கட்டியெழுப்ப இணைந்து குரல் கொடுப்போம்

## சர்வோதயத்துக்கு மனிதநேய அமைப்பின் செய்தி

யாழ்ப்பாணம்,செப்.23

சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்காக இதய சுத்தியுடன் குரல் கொடுப்போம்.

உலக சமாதான தினத்தை முன்னிட்டு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நேற்றையதினம் 'சர்வோதய அகிம்சா சமாதி' வைபவம் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு யாழ். மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் அனுப் பிய செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக் கப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:-

இலங்கையின் வரலாற்றைத் திருப்பி எழுதமுடியாது. ஆனால், அதன் படிப்பினைகளினூடாக நாம் எம்மைத் திருத்திக்கொள்ள முடியும். அந்தவகையில், நாம் அனைவரும கைகோர்த்துச் செயற்படுவோம்.

எமது உரையாடல்களில், எமது வேறுபாடுகளை, சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்காகப் பயன்படுத்தவேண்டும். கலந்துரையாடல்கள் அடிமனதிலிருந்து வெளிவருவதாக இருக்கவேண்டும். அரைவேக்காட்டு முடிவுகளில் இறங்கக்கூடாது.

பல்வேறு சமூகங்களையும் ஒருங்கிணைத்து, மீள் நிர்மானத்துக்கும் அமைதியைக் கட்டியெழுப்புவதற்குமான சந்தர்ப்பங்களைக் கண்டுபிடித்துப் பயன்படுத்திக் கொள்வதே எமது நோக்கமாக இருக்க வேண்டும் - என்றுள்ளது. (ப-9)

## வலி. வடக்கிலுள்ள

# படைப்பாளிகள் தொடர்பான விவரத்திரட்டு விரைவில் வெளியாகும்

யாழ்ப்பாணம்,செப்.23

வலிகாமம் வடக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த படைப்பாளிகளின் படைப்புகள் தொடர்பான விவரத் திரட்டு ஒன்றை வெளியிடுவதற்கு வலிகாமம் வடக்குப் பிரதேசக் கலாசாரப் பேரவையினர் முடிவு செய்துள்ளனர்.

கலாசாரப் பேரவையினரால் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதல் வாரத்தில் "பண்பாட்டுக் கோலங்கள்" கண்காட்சியும், விற்பனையும் நடத்தவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுவருகின்றன.

படைப்பாளிகளின் படைப்புக்கள் தொடர்பான விவரத்திரட்டை வெளியிடுவதற்கு வசதியாக வலிகாமம் வடக்குப் பிரதேச படைப்பாளிகள் தங்களுடைய ஆக்கங்கள் தொடர்பான விவரங்களைக் கலாசார உத்தியோகத்தரிடம் கொடுத்து உதவுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

படைப்பாளிகளின் பெயர், நூல்களின் பெயர், வெளியிடப்பட்ட ஆண்டு, பதிப்பகத்தின் பெயர் போன்ற விவரங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன், இப்பிரதேசத்தைச் சேர்ந்த மறைந்த கலைஞர்கள், சமய, சமூகத் தொண்டர்கள், அறிஞர்கள், அரசியற் பிரமுகர்கள் போன்றோரின் படங்கள் வைத்திருப்போர் அவற்றையும் தந்துதவுமாறு கண்காட்சி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளார்கள். (8-152)

# ஊர்காவற்றுறையில் 101 குடும்பங்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்பு உபகரணங்கள்

ஊர்காவற்றுறை,செப்.23

பட்டினிக்கெதிரான நிறுவனத்தினால் இவ்வாண்டு ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஜே/51, ஜே/59 ஆகிய கிராமசேவை அலுவலர் பிரிவுகளில் உள்ள மொத்தம் 101 பயனாளிகளுக்குச் சுயதொழிலை ஊக்குவிப்பதற்கான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் ஜே/51 கிராமசேவை அலுவலர் பிரிவைச் சேர்ந்த 70 பயனாளிகளுக்கும் ஜே/59 கிராமசேவை அலுவலர் பிரிவைச் சேர்ந்த 31 பயனாளிகளுக்கும் இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

இதன்படி அடிப்படை உபகரணம் ஒன்பது பேருக்கும், விதை உள்ளீடுகள் ஒன்பது பேருக்கும், மீன்பிடி உபகரணங்கள் மூன்று பேருக்கும், கூலி வேலை செய்பவர்கள் ஏழு பேருக்கும், மேசன் வேலை செய்பவர்கள் பதினைந்து பேருக்கும், தச்சுவேலை செய்பவர்கள், கல் உடைத்தலில் ஈடுபடுபவர்களில் தலா இருவருக்கும், தையல் உபகரணம் மூவருக்கும், சிறிய கடைக்கான உபகரணம் நால்வருக்கும், பனைமரத்தொழிலில் ஈடுபடுபவர்கள் ஏழுபேருக்கும், சைக்கிள் திருத்தம், சலவைத் தொழில், சிகையலங்காரம் ஆகியவற்றிற்கான உபகரணங்கள் தலா ஒருவருக்கும், கூட்டுப்பசளை ஆறுபேருக்கும் இவ்வாறு கையளிக்கப்பட்டுள்ளன. (எ-16)

## உதயவாக்கு

அதிகம் உண்பவன் யோகியாக மாட்டான்.

## நாளை

புரட்டாதி 8
வெள்ளிக்கிழமை
(24.09.2004)
திதி : ஏகாதசி
பின்னிரவு 1.16 வரை
நட்சத்திரம் : உத்தராடம்
முற்பகல் 8.45 வரை
ஏகாதசி விரதம்
[illegible] - 7.32
[illegible]: 10.32 - 12.02
(பழைய நேரப்படி)

## சாகா வரம் பெற்றான்



உத்தமன் திலீபன் மண்ணுக்காய் உயிர் தந்து
பத்தோடு ஏழாண்டு பறந்தோடிச் சென்றது பார்
நித்தம் சாவதிலும் எம் நினைவிலென்றும் வாழ்வதென்று
சத்தியத்தின் வழி நடந்து சாகா வரம் பெற்றான் அன்று
கத்தும் கடல் கடந்து காவலுக்கு வந்தவர்கள்
கத்தியின்றி யுத்தம் என்று காந்தியம் சொன்னவர்கள்
யுத்தத்தின் கறைபோக்கி அமைதி தரவந்தவர்கள்
எத்தர்கள் இவர் செயலால் காந்தீயம் செத்தது பார்
வித்தகன் திலீபனின் திலீபம் மலர்ந்ததிங்கே
புத்தனின் கால் தொட்டு தங்கள் கண் ஒற்றும்
பித்தர்கள் தார்மீகம் இங்கு பேச்சிழந்து போனதென்ன?
[illegible]யமாய் திலீபன் வென்றிட்டான் இமயத்தை
புத்தகத்தில் அடங்குமோ அண்ணல் இவன் தியாகம் தான்!

- பத்மகிரியான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைதானம் புனரமைப்பு

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தின் விளையாட்டு மைதானப் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுவருகின்றன.

தேசிய சேவைகள் மன்றம் விளையாட்டு மைதானப் புனரமைப்பு வேலைகளைப் பொறுப்பேற்று செய்துவருகின்றது.

70 ஆயிரம் ரூபா செலவில் மைதானம் புனரமைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-152)

## 'கலைமுகம்' வெளியானது

யாழ்ப்பாணம்,செப்.23

காலாண்டு கலை, இலக்கிய, சமூக இதழான 'கலைமுகம்' வெளிவந்துள்ளது.

அடுத்த காலாண்டு இதழிற்கு கவிதை, கட்டுரை மற்றும் பிற ஆககங்களை அனுப்ப விரும்புவோர 'கலைமுகம்', திருமறைக் கலாமன்றம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விரைந்து அனுப்பிவைக்கும்படி அறிவிககப்பட்டுள்ளது. (8-9)


**PROOF READER**

**PROOF READER**

தேவை

க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் தமிழ்மொழி பாடத்தில் சிறப்புச் சித்தி பெற்ற–மாநகர எல்லைக்குள் வசிக்கும் பெண்கள் அலுவலக நேரத்தில் நேரில் வரவும். ஆங்கில அறிவு மேலதிக தகைமை.

பாரதி பதிப்பகம்,
430,காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(C/37752)

**காணி விற்பனைக்கு**

கொடிகாமத்திலிருந்து கிழக்குப் பக்கமாக A-9 வீதியிலிருந்து 50 மீற்றர் தூரத்தில் 28 பரப்பு தென்னங்காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:-
T.P. - 0776366028
(37753)(38-14-46)

**MATHS CENTRE - NELLIADY**

**A/L DAY CLASS**


**ACCOUNTING**
**திரு.ஜெயகணேஸ்**

பகல்நேர வகுப்புக்களாக நடைபெறுகிறது.

**Economics - திரு.விக்கி**

(C-37742)(38) - நிர்வாகி.

**உங்களுக்கு இதயம் ஒன்று இருந்தால்...........**



அதில். எங்களைக் கவனம் செலுத்தவிடுங்கள்.
அறுவை சிகிச்சை இல்லை!!! ஒரு சில ஆயுர்வேத குளிகைகள். அந்தக் குளிகைகள்
உங்கள் அடைப்புக்களைக் கரைத்துவிடும்.
செலவு குறைவு. மிகவும் குறைவு.
பக்க விளைவுகள் இல்லை. வேறுவித சிக்கல்களுமில்லை.
கடந்த ஆறு வருடங்களில் ஒரு தோல்வியும் கூட ஏற்பட்டதில்லை.
(இது குறித்து அறிய நூறு முகவரிகளை எம்மால் வழங்கமுடியும்)
மேல் விவரங்களைப் பெறத் தயவுசெய்து எங்களுக்கு எழுதுங்கள். இதற்காக 5 நிமிடங்களைச் செலவழியுங்கள். இந்த 5 நிமிடங்களும் உங்கள் வாழ்வில் மிகுந்த நினைவுக்குரிய காலமாக அமையும். அது ஆரோக்கியமான, கவலையற்ற, இதயக்கோளாறு மற்றும் மார்புவலி இல்லாத சாதாரண வாழ்வை மீதமுள்ள வாழ்நாள் முழுவதும் வழங்கும்.

| | |
|---|---|
| மூட்டு வீக்கம்/மூட்டுவலி......?? | ஒற்றைத் தலைவலி...?? நிரந்தர நிவாரணம் |
| நீண்டகால முதுகுவலி...?? நீண்டநாள் முதுகுவலி குறைக்கப்படும்! | சிறுநீரக சுரப்பி பிரச்சினைகள்...?? அறுவைச் சிகிச்சையிலிருந்து சிறுநீரக சுரப்பியைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள் |
| கல்லீரல் பிரச்சினைகள்...?? கல்லீரலில் ஏற்படும் மஞ்சள் காமாலை மற்றும் உபாதைகளுக்கு | இருதயத்தில் ஓட்டை? இருதயத்தில் ஓட்டையுள்ள குழந்தைகள் அறுவை சிகிச்சையைத் தவிர்க்கலாம் |

விவரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும்

**FAIR PHARMA (PVT) LTD**
(MANUFACTURERS OF AYURVEDIC MEDICINES)
A BOI APPROVED COMAPANY

Level 5/East Tower/1C, World Trade Centre,
Colombo-01.
Phone: 0094-11-5517897, 5551879, 5558442
Fax:0094-11-5517756
E-mail:fppvtl@lankabellnet.com
Website : www.fppvtl.com

மருத்துவ ஆலோசனைகள்: Dr.வசந்தா பத்மகுமார
தொ.பே.077-3063550
வர்த்தக மற்றும் ஏற்றுமதி தகவல்: திரு.நிரோஷ் ஜயமகா
தொ.பே.077-3063540
(சி-37746)(34-14-46-21)


**கண்ணீருடன்**

## 31 ஆம் நாள் நினைவலைகள்



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 1942 - 08 - 06 | 2004 - 08 - 24 |

**அமரர் கார்த்திகேசு முத்துலிங்கம் (சின்னராசா)**

பாசமுடன் எம்மை வளர்த்து
பாரினிலே உயரவைத்த அப்பாவே!
ஆசைமுகம் மறக்கவில்லை
அனுதினமும் உங்கள் நினைவே...

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

வளாக வீதி,
திருநெல்வேலி.
(36680)(38-21-14-46)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16 - 10 - 1941 | 10 - 08 - 2004 |

**அமரர் திருப்பதி மாணிக்கம்**
(பவளக்கொடி)

அக்கா என்று ஆசையுடன் உன்னிடம்
அன்போடு ஓடோடி வருவோம்
பாசமுடன் நீயும் எங்களை அரவணைப்பாய்
மாயமாக நீ எங்களை விட்டகன்ற தேனோ?

அன்புச் சகோதரியின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!*

இன்று (23-09-2004) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறு உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கருணாநிதி ச.ச.நிலையம்,
வல்வெட்டி.
(C/37747)(21-14-46)

தகவல்:
சகோதரர்கள்.


வாங்குங்கள்

**DSI**

மோட்டார் சைக்கிள் டயர்கள்

**வெல்லுங்கள்**


**10** புதிய ரக

**SUZUKI EN 125**

மோட்டார் சைக்கிள்கள்,

மற்றும் **100**


ஓட்டுநர் மேலங்கிகளை.



**DSI**
மோட்டார் சைக்கிள் டயர்களை வாங்குங்கள். அதன்மூலம் 10 புதிய ரக சுசூகி EN 125 மோட்டார் சைக்கிள்களை வெல்லுவதற்கான சந்தர்ப்பத்தினைப் பெறுங்கள். அத்துடன் வேறும் பல தரம்மிக்க 100 ஓட்டுநர் மேலங்கிகளை ஆறுதல் பரிசில்களாக வென்றெடுங்கள்.

நீங்கள் ஒரு **DSI** மோட்டார் சைக்கிள் டயரினை வாங்கும்போது, அதனது உத்தரவாத அட்டையை நிரப்பி, கீழ்வரும் முகவரிக்கு தபாலில் இடுவதன் மூலம், இப்போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பைப் பெறுவீர்கள்.

நிபந்தனைகள் - ■ சாம்சன் றபர் இண்டஸ்றீஸ் (பிரைவேட்) லிம்டெற் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய குடும்ப அங்கத்தவர்களுக்கும் இது ஏற்புடையதல்ல ■ வெற்றி பெறுபவர்கள் தமது அடையாளத்திற்கான ஆதாரத்தை சமர்ப்பிக்கக் கூடியதாய் இருக்க வேண்டும்.




**DSI**
இலங்கையின் முன்னணி மோட்டார் சைக்கிள் ரயர், எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

DSI 20 ஆண்டுகளில்

இச் சலுகை 2005 ஏப்ரல் 15 வரை மட்டுமே செல்லுபடியாகும்

உங்கள் வியாபாரியிடம் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

அகன்ற பல வகை, தரம்மிக்க மோட்டார் சைக்கிள் டயர்களிலிருந்து தெரிவு செய்யுங்கள்.



ISO 9001-2000 சான்றுப்படுத்தப்பட்டது.

CREATIVE SERVICES

சாம்சன் றபர் இண்டஸ்றீஸ் (பிரைவேட்) லிமிற்றெட்
ஜினசேன மாவத்தை, மகர, கடவத்தை
Tel: (011)2 926065, (011)4 816442
Fax: (011)2 925064, (011)4 816440
E-mail: dsityre@dsityre.lk www.dsityre.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தினால் இங்கு ஏற்பட்ட அழிவுகள் தென்னிலங்கை மக்களுக்குத் தெரியாது

## குருநாகலில் இருந்துவந்த தேவசரண குழுவினர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,செப்.23

யாழ். குடாநாட்டில் யுத்தத்தினால் ஏற்பட்ட இழப்புக்கள், அழிவுகள் தொடர்பாகத் தென் பகுதி மக்களுக்குத் தெரியாது.

இதனால், தற்போதைய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் எமது மக்களுக்கு விளங்கவில்லை. தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலையில் அவற்றை நேரில் பார்த்து எமது மக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காகவே இங்கு வந்துள்ளோம்.

- இவ்வாறு குருநாகல் தேவசரண அபிவிருத்தி நிலையத்திலிருந்து யாழ். குடாநாட்டுக்கு வந்துள்ள குழுவில் இடம்பெற்றிருந்த ரஞ்சினி மொறகொட தெரிவித்தார்.

குருநாகலில் இருந்து யாழ். குடாநாட்டிற்கு வருகைதந்த தேவசரண அபிவிருத்தி நிலையத்தைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கும், யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் மாலை இணைய அலுவலகத்தில் இடம்பெற்றது.

அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே ரஞ்சினி மொறகொட மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட்டு அனைத்து மக்களும் சாந்தி, சமாதானத்துடன் வாழவேண்டும் என்பதே அனைவரது விருப்பமும் ஆகும்.

இங்கு என்ன நடந்தது; தற்போது என்ன நடைபெறுகிறது என்பது பற்றித் தென்பகுதி மக்களுக்கும், எமது மாவட்ட மக்களுக்கும் ஒன்றும் தெரியாது. இதனால், இங்குள்ள நிலைமைகளை நேரில் பார்த்து அவற்றை எமது மக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காகவே இங்கு வந்துள்ளோம் - என்றார்.

யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் உரையாற்றும்போது தெரிவித்ததாவது:-

இங்கு வந்துள்ள குருநாகல் மக்கள் யாழ். மாவட்டத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களை நேரில் பார்வையிட்டு அதுபற்றித் தமது மக்களுக்குத் தெளிவுபடுத்துவார்கள் என்று நாம் திடமாக நம்புகின்றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி வரைபு பற்றித் தென்பகுதியிலுள்ள சிங்கள ஊடகங்கள் தவறான வகையில் பூதாகாரப்படுத்திப் பிரசாரப்படுத்தி வருகின்றன.

சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டுப்போனமைக்குச் சிங்கள ஊடகங்களும், பேரினவாதிகளுமே காரணம்.

தமிழ்மக்கள் சிங்கள மக்களுக்கு என்றைக்குமே எதிரானவர்கள் அல்லர். ஆனால், அரசியல்வாதிகள் தாம் பதவிக்கு வருவதற்காக இனவாதத்தைக் கக்கி நாட்டைப் பிளவுபடுத்தி வருகின்றனர்.

யுத்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் யாழ். குடாநாட்டு மக்கள்தான். தென்னிலங்கையிலுள்ள அரசியல்வாதிகளுக்கு இங்குள்ள பிரச்சினைகளில் எவ்வித அக்கறையும் இல்லை - என்றார். குருநாகலில் இருந்துவந்த 60 போ கொண்ட இக்குழுவுக்குப் பி.டி.குணதிலக தலைமை வகித்தார்.

இக்கலந்துரையாடலில் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளான பி.விக்னேஸ்வரன், அருட்திரு.சி.ஜி.ஜெயக்குமார், திருமதி சறோஜா சிவச்சந்திரன், இணைய நிர்வாக அலுவலர் என்.சோதிநாதன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (8-5)

### சமயபாடப் பரீட்சை[illegible] விண்ணப்பிக்கலாம்

நீர்வேலி,செப்.23

நீர்வேலி காமாட்சி அம்பாள் இந்து பரிபாலன சபை வருடாந்தம் பாடசாலை மாணவர்களிடையே நடத்தும் சமயபாடப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இது விடயமான விவரங்கள் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (4-110)

### அறநெறி விழா

தென்மராட்சி;செப்.23

மீசாலை இந்துமன்ற அறநெறிப் பாடசாலை நடத்தும் அறநெறிவிழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலய மண்டபத்தில் பண்டிதர் ஏ.பரம்சோதி தலைமையில் நடைபெறும்.

விழாவுக்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜும் சிறப்பு விருந்தினர்களாக இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கம், தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா, பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

ஆசியுரையை ஸ்ரீகாயத்ரி காமகோடி பீடாதிபதி சுவாமி ஸ்ரீராஜ்குமார் நிகழ்த்துவார். (ஜ-117)

### பிரிவுபசார விழா

யாழ்ப்பாணம்,செப்.23

யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடத் தமிழ்த்துறையின் இறுதிவருட மாணவர்களுக்கான பிரிவுபசாரவிழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாணவர் பொது அறையில் நடைபெறவுள்ளது.

தமிழ்த்துறையின் 3ஆம், 4ஆம் வருடப் பொதுக்கலை மற்றும் சிறப்புக் கலை மாணவர்கள் அனைவரையும் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (10)

## பதிவாளர் சார்பில் பேரவை உறுப்பினர் வழக்குத் தொடுநராக இருக்கமுடியாது

யாழ்ப்பாணம்,செப்.23

யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் திருமதி என்.துங்கராசா மீதான குற்றச்சாட்டுக் குறித்து விசாரணையில் வழக்குத் தொடுநராகப் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர் செயற்பட முடியாது என்று விசாரணைக் குழு தெரிவித்துள்ளது.

பதிவாளருக்கு எதிரான விசாரணைக் குழு கடந்த திங்கட்கிழமை குழுவின் தலைவர் வி.சிவசாமி தலைமையில் கூடியது. அச்சமயம், பல்கலைக்கழகத்தின் வழக்குத் தொடுநராக எஸ்.குமாரவடிவேல் பிரசன்னமாகியிருந்தார்.

பேராசிரியர் குமாரவடிவேல் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினராக இருக்கின்றார். ஆனபடியால், அவர் வழக்குத் தொடுநராகப் பணியாற்றுவது ஆட்சேபத்துக்குரிய விடயம் என்று பதிவாளர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி அ.விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

இந்த ஆட்சேபத்தை ஆராய்ந்த குழு, பதிவாளர் சார்பாகப் பேராசிரியர் குமாரவடிவேல் ஆஜராகமுடியாது என்று தெரிவித்ததாக அறிய வந்துள்ளது. பின்னர் இந்த விசாரணைத் திகதி குறிப்பிடப்படாமல் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. (ஜ-3)

## சர்வோதய அமைப்பின் ஏற்பாட்டில் உளவள விழிப்புணர்வுக் கருத்தரங்கு

கொழும்புத்துறை.செப்.23

சர்வோதய அமைப்பின் ஏற்பாட்டில் அடுத்த மாதம் முதலாம் திகதிமுதல் 5ஆம் திகதி வரை 5 கிராமங்களில் உளவள விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.

ஊரெழு, மயிலங்காடு, மிருசுவில், கரம்பைக்குறிச்சி, காக்கைதீவு ஆகிய கிராமங்களில் உள்ள தாய்மார் மற்றும் உடல்உள பாதிப்புற்றவர்களுக்கு இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் இடம்பெறும்.

தேசிய கல்வி நிறுவன உளவளத்துணை ஆசிரியர் எஸ்.சிவசுப்பிரமணியம் தலைமையில் இக்கருத்தரங்குகள் இடம்பெறவுள்ளதாக சர்வோதய மாவட்ட இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (8-30)-

## 'புதுயுகம் நோக்கி' கதம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.23

திருமறைக் கலாமன்றத்தின் 'புதுயுகம் நோக்கி' (Towaards New Horizons) என்ற சிறுவர் மற்றும் இளையோர் கதம்ப நிகழ்ச்சி எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை இரவு கொழும்பு, ஆயர்கள் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கையின் சகல பாகங்களிலுமிருந்து சிறுவர் சமாதான வலயம் மற்றும் இளையோர் சமாதான வலயத்தைச் சேர்ந்தவர்கள் இக்கதம்ப நிகழ்ச்சியில் பங்குகொள்கின்றனர். இசை, நடனம் மற்றும் நாடகம் போன்றன இக்கதம்ப நிகழ்வை அலங்கரிக்கின்றன.

கலை நிகழ்வுகளின் மூலம் சமாதானத்தை ஏற்படுத்தும் பொருட்டான திருமறைக் கலாமன்றத்தின் பணிகளில் இக்கதம்ப நிகழ்வு வருடாந்தம் நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, 'புதுயுகம் நோக்கி' என்ற நிகழ்வு தொடர்பான ஐரோப்பிய நாடுகளுக்கான கலைப் பயணம் ஒன்றை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 12ஆம் திகதிமுதல் திருமறைக் கலாமன்றத்தின் குழுவொன்று மேற்கொள்ளவுள்ளது.(ஜ-9)

### தென்மராட்சிக் கல்வி வலய

## பாடசாலை மாணவர்களுக்கு அடுத்தவாரம் முதல் மதிய உணவு

சாவகச்சேரி,செப்.23

பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டம் அடுத்தவாரம் முதல் தென்மராட்சிப் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. அதற்கான நடவடிக்கைகளில் தென்மராட்சிக் கல்வி வலயம் ஈடுபட்டுள்ளது. 'யுனிசெவ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மதிய உணவு தயாரிக்கும் செயற்பாட்டுக்காகத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனைக்குச் சமையல் பாத்திரங்கள், சமையலுக்கான மேசைகள் உட்படப் பல சமையல் உபகரணங்கள் எடுத்துவரப்பட்டுள்ளன.

இந்தச் சமையல் பாத்திரங்கள் கடந்த திங்கட்கிழமை கல்வித் திணைக்கள அதிகாரிகளால் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டன. (8-31)

### சிறுவர் தின நிகழ்வும் சிரமதானமும்

யாழ்ப்பாணம்,செப்.23

சண்டிலிப்பாய்ப் பிரதேச முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தினரின் சண்டிலிப்பாய்க் குடும்ப முன்பள்ளி மாணவர்களின் சிறுவர் தின நிகழ்வும், சிரமதானமும் எதிர்வரும் 29ஆம் திகதி சண்டிலிப்பாய் மணிமோகன் சனசமூக நிலையத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளன.

சண்டிலிப்பாய்ப் பிரதேச குடும்ப முன்பள்ளித் தலைவர் பா.கோமதி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் சண்டிலிப்பாய்ப் பிரதேச இணைப்பாளர் கா.சந்திரவதனி கலந்துகொள்ளவுள்ளார்.

முன்பள்ளி மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஜ-13)

### நெல்லியடியில் ஹற்றன்நஷனல் வங்கியின் கிளை

வடமராட்சி,செப்.23

ஹற்றன் நஷனல் வங்கியின் புதியகிளை ஒன்று எதிர்வரும் 30ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9.38 மணிக்கு நெல்லியடியில் பருத்தித்துறை வீதியில் திறந்துவைக்கப்படவுள்ளது.

இவ்வங்கியின் நெல்லியடிக் கிளை யாழ். குடாநாட்டில் மூன்றாவது கிளையாகும். யாழ்ப்பாணம், சுன்னாகம் ஆகிய இடங்களில் ஏனைய கிளைகள் இயங்கிவருகின்றன.

நெல்லியடிக் கிளையின் முகாமையாளராக எஸ்.சபேசன் நியமிக்கப்பட்டுள்ளார். (173)

### ஆஸ்பத்திரிக்கு மருந்து வகைகள் அன்பளிப்பு

வடமராட்சி,செப்.23

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை மனநோய் வைத்திய சிகிச்சைப் பிரிவில் விடுதியிலிருந்து சிகிச்சை பெற்றுவரும் மனநோயாளர்களுக்கு ஒரு தொகுதி மருந்து வகைகளைக் கொழும்பிலுள்ள தனியார் நிறுவனம் ஒன்று அன்பளிப்பாக வழங்கவுள்ளது.

மருந்து வகைகளைத் தயாரிக்கும் 'மக்வூட்ஸ்' நிறுவனமே இம்மருந்துகளை அன்பளிப்புச் செய்யவுள்ளது.

இந்நிறுவனம் ஏற்கனவே தொய்வு நோயாளர்களுக்கு மருந்துகளை உறிஞ்சும் கருவிகளை அன்பளிப்பாக வழங்கியிருந்தது.(ஜ-173)

### சமாதான தினத்தன்று சாராயம் விற்றோர் பொலீஸாரால் கைது!

யாழ்ப்பாணம்,செப்.23

உலக சமாதானத் தினமான நேற்றுமுன்தினம் யாழ். நகரப் பகுதியில் சாராயம் விற்ற இருவர் யாழ். பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை யாழ். கஸ்தூரியார் வீதியில் மதுபானக் கடை ஒன்றில் சாராய விற்பனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோதே இவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டனர்.

யாழ். பொலீஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து யாழ். பொலீஸ் நிலைய இன்ஸ்பெக்டர் ஜவ்பர் தலைமையிலான குழுவினர் அங்கு சென்று சாராயம் விற்பனையில் ஈடுபட்ட இருவரையும் கைதுசெய்ததுடன், அவர்கள் வைத்திருந்த மதுபான வகைகளையும் யாழ். பொலீஸ் நிலையத்துக்கு எடுத்துச்சென்றனர்.

உலக சமாதான தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் யாழ். மாவட்டத்திலுள்ள சகல மதுபான நிலையங்கள் மற்றும் இறைச்சிக்கடைகள் என்பவற்றை மூடுமாறு பொலீஸார் அழைப்பு விடுத்திருந்தனர்.

இதனையடுத்து, யாழ். கொட்டடிச் சந்தை, சின்னக்கடை சந்தை என்பன உட்பட நகரப் பகுதி இறைச்சிக் கடைகள் மூடப்பட்டிருந்தன. (8-7)



யாழ். நகர் கிழக்குச் சமுர்த்தி வங்கியினர் எழுத்தறிவு தினத்தையொட்டி பாசையூர் சென். அன்ரனிஸ் வித்தியாலயத்தில் வைத்து உதவிப்பொருள்களை வழங்கினர். கணவனையிழந்த பெண்ணொருவருக்கு தையல் இயந்திரத்தை யாழ். பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்:கவி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத்தராதரப்பத்திர (சாதாரணதரம்)

# மாதிரிப்பரீட்சை - 2004 சமூகக்கல்வியும் வரலாறும் II 43 T II


நேரம்: 3 மணித்தியாலம்

திரு. ச. கிருஷ்ணன் (ஆசிரியர்)

முக்கியம்: - அறிவுறுத்தலுக்கமைய ஆறு வினாக்களிற்கு மட்டும் விடை தருக. மேலதிகமாக எழுதப்படும் விடைகள் பரீட்சார்த்திகளினால் வெட்டிவிடப்படல் வேண்டும். அவ்வாறில்லையெனில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகள் மதிப்பீட்டின் போது பரீட்சகரால் புள்ளி வழங்கப்படாது வெட்டிவிடப்படும்.

முதலாம் வினாவின் (அ) பிரிவுக்கும் (ஆ) பிரிவுக்கும் வேறு ஐந்து வினாக்களிற்குமாக ஆறு வினாக்களிற்கு விடைதருக.

01.




A. ..........................................................

B. ..........................................................

C. ..........................................................

D. ..........................................................

அ, I. படத்தில் பின்வரும் அம்சங்களை இனங்கண்டு இவ்வம்சங்களுக்குத் தொடர்பான இலக்கங்களை படத்தில் பொருத்தமான இடங்களில் எழுதுக.

A - 382 மீற்றர் மலையுச்சிக்கு இலக்கம் (1) இனை இடுக.
B - கூம்புக் குன்றுக்கு இலக்கம் (2) இனை இடுக.
C - குளத்தின் அணைக்கட்டுக்கு இலக்கம் (3) இனை இடுக.
D - நீர்ப்பாசனக் கால்வாய்க்கு இலக்கம் (4) இனை இடுக.
E - நீண்ட குடியிருப்பிற்கு இலக்கம் (5) இனை இடுக.
F - பிரதேசத்தின் கணவாய் காணப்படும் இடத்திற்கு இலக்கம் (6) இனை இடுக. (06 புள்ளிகள்)

II. A . மலையுச்சிகளை இணைத்து சிவப்பு நிறத்தால் கோடுவரைக.
B - வயலுக்குப் பொருத்தமான நிறந்தீட்டுக. (02 புள்ளிகள்)

III. A - இப்பிரதேசத்திற்கு ஊடாகச் செல்லும் A தர பெருந்தெருவிற்கு வழக்கமான நிறந்தீட்டுக.
B - பொருத்தமான இடத்தில் பாலத்தை வரைக.
C - குளத்திற்கு மேற்கே 2 சதுர கிலோமீற்றர் பரப்புக்கொண்ட தென்னைப் பயிர்ச்செய்கையைக் குறித்துக் காட்டுக. (03 புள்ளிகள்)

IV. மெட்றிக் தேசப்படத்தின் கீழ்ப் பகுதியைப் பயன்படுத்துக.
A - இப்பிரதேசத்தின் மலைத் தொடர்களில் பிரதான மலைத் தொடர் எத்திசையில் உள்ளது. (01 புள்ளி)
B - தென்மேற்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள குடியேற்ற மக்கள் எத்தொழிலில் ஈடுபடுவர் என்பதைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
C - அவர்கள் மேற்கொள்ளும் பயிர்ச்செய்கையை உரிய குறியீட்டுடன் காட்டுக. (02 புள்ளிகள்)
D - இப்படத்தின் அளவுத்திட்ட வகையாது? (02 புள்ளிகள்)

(மொத்த புள்ளிகள் 18)

ஆ, கீழே தரப்பட்டுள்ள படங்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களிற்கு விடை அளிக்குக.



A B C D

01, I. A படத்தில் காணப்படுபவரின் பெயர் ..........................................

II. B படத்தில் காணப்படுபவர் ஈ.டபிள்யூ.பெரேரா. அவர் பிரித்தானிய ஆளுநரின் முறைகேடான ஆட்சியைப் பற்றி ...................................... நாடாளு மன்றத்தில் மனுவைச் சமர்ப்பித்தார்.

III. C சட்டவாக்கக் கழகத்திற்கு படித்த இலங்கையர்களில் ஒருவரைத் தெரிவுசெய்யும் சந்தர்ப்பம் கிடைத்தபோது திரு. ...................................... அவர்கள் தெரிவுசெய்யப்பட்டார்.

IV. D 1915 இல் கம்பளையில் உருவான முஸ்லிம் கலவரத்தின் போது கைதுசெய்யப்பட்ட முஸ்லிம் தலைவர்களுள் இவரும் ஒருவர். இவரது பெயர்......................................

(புள்ளிகள் 1x4 = 4)

02. அருகில் தரப்பட்டுள்ள படத்தை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களிற்கு விடையை புள்ளிக் கோட்டில் எழுதுக?



I. படத்தில் காணப்படும் மலை நாட்டு மன்னனின் பெயர்......................................
II. இம் மன்னன் ஒல்லாந்தருடன் தொடர்பு கொண்டு போர்த்துக்கேயரை விரட்டிய வருடம்......................................
III. முதுமைப் பருவத்தை அடைந்த இம் மன்னன் இறந்த பின் அவருடைய மகன் அரசனானான். அம்மன்னனுடைய பெயர்......................................

(புள்ளிகள் 1x3=3)

03. பின்வரும் வினாக்களிற்குப் பொருத்தமான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

I. பிரதிநிதித்துவம் இல்லையேல் வரியும் இல்லை எனறு கூறப்பட்ட புரட்சி எது? ......................................
II. 1974 ஆம் ஆண்டு உலக உணவு மாநாடு நடைபெற்ற இடம் எது? ......................................
III. இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதல் ஜனாதிபதி யார்? ......................................
IV. ஞாயிற்றுத் தொகுதியில் 10 ஆவதாகக் கண்டு பிடிக்கப்பட்ட கோளின் பெயர் என்ன? ......................................
V. இலங்கையில் சர்வஜனவாக்குரிமையை அறிமுகப்படுத்திய அரசியல் யாப்பு எது?......................................

(புள்ளிகள் 1x5=5) (மொத்தம் 04+03+05=12)

02. இன்று உலகில் ஏற்பட்டுவரும் பிரச்சினைகளுள் உலக சனத்தொகைப் பிரச சினை, உலக உணவுப்பிரச்சினை ஆகிய இரண்டும் மிக முக்கியமான பிரச சினைகளாகக் காணப்படுகின்றன.

I. ஒரு நாட்டின் சனத்தொகையில் மாற்றம் ஏற்படுவதைத் தீர்மானிக்கும் மூன்று காரணிகளைத் தருக. (03 புள்ளிகள்)
II. உணவுப்பிரச்சினைக்கான காரணங்கள் நான்கு எழுதுக. (04 புள்ளிகள்)
III. உலகில் பெண்கள் அந்தஸ்து குறைந்த நிலையில் காணப்படுவதற் குரிய காரணங்கள் மூன்றினைக் கூறி ஒன்றைப்பற்றி விளக்குக. (05 புள்ளிகள்)
IV. உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் மூன்றினை முன்வைத்து அவற்றில் இரண்டு வழிமுறைகள் பற்றி சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

03. நாடுகளுக்கிடையே தொடர்ச்சியாக ஏற்படும் பொருள்கள் சேவைகளுக்கான கேள்வி நிரம்பல்களைப் பூர்த்திசெய்யும் முகமாக சர்வதேச வர்த்தகம் மேற் கொள்ளப்படுகிறது.

I. 'வர்த்தக சமநிலை' என்றால் என்ன? (03 புள்ளிகள்)
II. நாடுகளுக்கு இடையில் பொருள்களைப் பரிவர்த்தனை செய்வது அவசிய மானது என்பதற்கு நான்கு காரணிகள் தருக. (04 புள்ளிகள்)
III. நவீன தொழில்நுட்ப வளர்ச்சியில் தாழ்ந்த மட்டத்தில் காணப்படும் நாடுகள் சர்வதேச ரீதியாக தங்கி வாழ்வதனால் அடையும் நன்மைகளை இரண்டு காரணிகளால் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)
IV. சர்வதேச வர்த்தகம் தொடர்பான சர்வதேச நிறுவனம் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றின் அமைப்புப் பற்றி சிறுகுறிப்பு எழுதுக. (06 புள்ளிகள்)

04. உலக மக்களின் வாழ்க்கை நலன்களில் தரங்கள் ஒரே ரகமானவையல்ல. அவற்றுக்கிடையே பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. அதற்கிணங்க அபிவிருத்தி சம்பந்தமாக உலக நாடுகளில் காணப்படும் சில இயல்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

A - சூழல் மாசடைதல்
B - ஆள்வீத வருமானம் குறைவு
C - போதைப்பொருள் பாவனை
D - வளங்கள் சிறந்தமுறையில் பயன்படுத்தப்படாமை
E - எய்ட்ஸ் (HIV) நோய்பரவுதல்
F - நகர்ப்புறத்தில் சனத்தொகையின் வீதம் அதிகரித்தல்
G - விவசாயத்துறையில் பெரும்பாலான மக்கள் ஈடுபட்டிருத்தல்
H - தொழில்நுட்ப அறிவு உயர்மட்டத்தில் நிலவுதல்
I - சனத்தொகை வளர்ச்சி வீதம் உயர்வாக இருத்தல்

I. அபிவிருத்தி என்ற எண்ணக்கரு மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது. (03 புள்ளிகள்)
II. மேலே தரப்பட்டுள்ள தன்மைகளில் அபிவிருத்தியடைந்துவரும் நாடுக ளில் காணப்படும் தன்மைகள் நான்கினை எழுதுக. (04 புள்ளிகள்)
III. ஒரு நாட்டின் அபிவிருத்தியை அளப்பதற்கு பயன்படுத்தக்கூடிய நவீன அளவீடுகள் மூன்றையும் மரபுரீதியான அளவீடுகள் இரண்டையும் தருக. (05 புள்ளிகள்)
IV. அபிவிருத்தி சம்பந்தமாக இலங்கை எதிர்நோக்கும் பிரச்சினைகள் மூன் றைக் குறிப்பிட்டு அவற்றைத் தீர்ப்பதற்கு எத்தகைய நடைமுறைகளை கையாளலாம் எனச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. மனித உரிமைகள் தொடர்பான அகில உலக வெளியீட்டில் அடங்கிய வாசகம் இதுவாகும்.

'தன்னால் அல்லது சுயாதீனமாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமே தனது நாட்டு நிர்வாகத்துடன் தொடர்புகொள்ளல் யாவரதும் உரிமை ஆகும்'

I. இங்கு கூறப்பட்டுள்ளவாறு எந்தச் சிறப்புரிமைகளின் அடிப்படையில் தனது நாட்டின் நிர்வாகத்தில் பங்கேற்க பிரஜை ஒருவருக்கு வாய்ப்புக் கிடைக்கும். (03 புள்ளிகள்)

II. சுதந்திரமான முறையில் தமது பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க இலங்கைப் பிரஜை ஒருவர் வாய்ப்புப் பெறும் நான்கு சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

III. பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும்போது' வாக்காளர் செயற்படவேண்டிய விதத்தை இரண்டு விடயங்களின் துணையுடன் விளக்குக. (05 புள்ளிகள்)

IV. ஜனநாயக நாடொன்றில் வெகுஜன கருத்தை உருவாக்கும்போது ஊடகங்கள் செயற்பட வேண்டிய விதத்தை இரண்டு விடயங்களின் அடிப்படையில் விளக்குக. (06 புள்ளிகள்)

06. உலகளாவிய ரீதியில் நாடுகளுக்கிடையே பரஸ்பர நல்லுறவுகளின் அடிப்படையில் இன்று பல பிராந்திய ஒத்துழைப்பு அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

I. உலகரீதியாக நிறுவப்பட்ட பிராந்திய ஒத்துழைப்பு நிறுவனங்கள் மூன்று எழுதுக. (03 புள்ளிகள்)

II. 'சார்க்' அமைப்பின் குறிக்கோள்கள் நான்கு எழுதுக. (04 புள்ளிகள்)

III. கொழும்புத் திட்டத்தின் கீழ் அபிவிருத்திக்கான பின்வரும் அட்டவணையை பூர்த்தி செய்க.

| உதவி வழங்கிய நாடுகள் | உதவி பெற்ற நாடுகள் | உதவிகள் |
|---|---|---|
| (a) ஆஸ்திரேலியா | .............................. | குழாய்க் கிணறுகள் அமைத்தல் |
| (b) பிரித்தானியா | நேபாளம் | .............................. |
| (c) நியூசிலாந்து | .............................. | .............................. |
| (d) .............................. | இலங்கை | புகையிரத எந்திரவியல் |

(05 புள்ளிகள்)

IV. பொதுநலவாய அமைப்புப்பற்றி பின்வரும் தலைப்பின் கீழ் எழுதுக.
a. நோக்கங்கள். b. அங்கத்துவம். C. இலங்கை பெற்ற உதவிகள் (06 புள்ளிகள்)

07. இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக அரசாங்கம் முன்னேற்றகரமான திட்டங்களை செயற்படுத்திவருகின்றது. ஏற்றுமதி நோக்கமான வலயங்களை அமைத்து வருவதும் இவற்றுள் ஒன்றாகும்.

I. இலங்கையில் ஏற்றுமதி நோக்குடைய வலயங்கள் மூன்று எழுதுக. (03 புள்ளிகள்)

II. ஏற்றுமதி அபிவிருத்தி வலயங்கள் நிறுவப்பட்டதன் நோக்கங்கள் நான்கினை கூறுக. (04 புள்ளிகள்)

III. இலங்கையின் பிரபல்யமான பொதுசன தொடர்பு சாதனமாகியுள்ள தொலைக்காட்சி மூலமாக ஏற்படக்கூடிய நன்மையான விளைவு ஒன்றையும் தீமையான விளைவு ஒன்றையும் விளக்குக. (05 புள்ளிகள்)

IV. துரிதமாக செய்திகளை பரிமாறிக்கொள்ள முடிகின்றமை அபிவிருத்திக்கு துணைசெய்யும் விதத்தை இரண்டு உதாரணங்களின் உதவியுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

08. கி.பி. 1796 இல் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை ஒல்லாந்தரிடமிருந்து கைப்பற்றிய பிரித்தானியர் கி.பி 1815 இல் இலங்கை முழுவதையும் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்து கி.பி. 1948 வரை இந்நாட்டை ஆட்சி செய்தனர்.

I. பிரித்தானியரை இலங்கைக்கு வரத்தூண்டிய காரணிகள் மூன்று எழுதுக. (03 புள்ளிகள்)

II. கி.பி. 1818 இல் மலையகத்தில் இடம்பெற்ற சுதந்திரக் கிளர்ச்சிக்கான காரணங்கள் நான்கு எழுதுக. (04 புள்ளிகள்)

III. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கையின் கிராமிய விவசாய விருத்தியில் பிரித்தானிய ஆள்பதிகள் கவனம் செலுத்தியதற்குரிய காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (05 புள்ளிகள்)

IV. பிரித்தானிய ஆட்சியினால் இலங்கை பெற்ற நயப்பாடு ஒன்றையும் நயக்கேடு ஒன்றையும் தந்து விளக்குக. (06 புள்ளிகள்)

09. சில அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

☆ இராசகாரிய முறையை நீக்கியமை
☆ சட்டவாக்கக்கழகம் அமைக்கப்பட்டமை
☆ சர்வஜன வாக்குரிமை வழங்கியமை
☆ நாடாளுமன்றம் அமைக்கப்பட்டமை
☆ அரசுக்கழகம் அமைக்கப்பட்டமை
☆ நிர்வாகக்குழு முறையை உருவாக்கியமை
☆ தேசிய அரசுப்பேரவை அமைக்கப்பட்டமை
☆ பிரதேசவாரி பிரதிநிதித்துவம் அறிமுகம் செய்யப்பட்டமை

I. அரசியல் யாப்பு என்பதனால் நீர் விளங்கிக்கொள்வது யாது. (03 புள்ளிகள்)

II. மேலேயுள்ள சீர்திருத்தங்களில் டொனமூர் யாப்பு சீர்திருத்தங்கள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

III. 1972 ஆம் ஆண்டு முதலாவது குடியரசு அரசியல் யாப்பிற்கும் 1978 ஜனநாயக சோஷலிச குடியரசு யாப்பிற்கும் இடையிலான வேறுபாடுகள் ஐந்தினை முன்வைக்க. (05 புள்ளிகள்)

IV. 1978 ஆம் ஆண்டு யாப்பில் நீதித்துறையின் சுதந்திரத்தை பாதுகாப்பதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடுகள் இரண்டினை கூறி விளக்குக. (06 புள்ளிகள்)

10. உலகில் உள்ள பெரும்பான்மையான நாடுகள் அங்கம் வகிக்கும் ஸ்தாபனமாக விளங்குவது ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமாகும்.

I. ஐக்கிய நாடுகள் சபையின் மூன்று உறுப்புக்களின் பெயர்களைத் தருக. (03 புள்ளிகள்)

II. ஐக்கிய நாடுகள் அமையம் ஸ்தாபிக்கப்படுவதற்கு ஏதுவாக இருந்த இரண்டு காரணிகளைத் தருக. (04 புள்ளிகள்)

III. இலங்கைக்கு உதவி வழங்குகின்ற ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்துடன் இணைந்த ஸ்தாபனங்கள் மூன்றினைக்குறிப்பிட்டு அதன் மூலம் இலங்கைக்குக் கிடைக்கும் நன்மைகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (05 புள்ளிகள்)

IV. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் சமாதான முயற்சிகள் பற்றி மதிப்பிடுக. (6 புள்ளிகள்)

11.

| | |
|---|---|
| எட்வேட் பாண்ஸ் | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் |
| வில்லியம் கிரகரி | சேர் பொன் இராமநாதன் |
| S.W.R.D பண்டாரநாயக்கா | ஹேர் குலிஸ் றொபின்சன் |
| தோமஸ் மெயிலண்ட் | அநகாரிக தர்மபால |
| வெஸ்ற் றிச்வே | M.C.சித்திலெப்பை |

I. கிராமிய விவசாய அபிவிருத்திக்காக நீர்ப்பாசன வசதிகளைப் புனரமைத்த மூன்று ஆளுநர்களின் பெயர்களைத் தருக. (03புள்ளிகள்)

II. இலங்கையில் புகையிரதப் பாதை அமைக்கப்படுவதற்குத் தூண்டுகோலாகவிருந்த காரணங்கள் 4 தருக. (04 புள்ளிகள்)

III. இலங்கையில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையால் ஏற்பட்ட நல்லவிளைவுகள் மூன்றினையும் தீய விளைவுகள் இரண்டினையும் எழுதுக. (05 புள்ளிகள்)

IV. பிரித்தானியர் காலத்தில் பெளத்த, இந்து, இஸ்லாமியமத கலாசார மறுமலர்ச்சிக்கு உழைத்த பெரியார்கள் மூவரின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களுள் ஒருவரின் பணி பற்றி சுருக்கமாகத் தருக. (06 புள்ளிகள்)

# தனியார் வீட்டில் தண்ணீர்த்தாங்கி; குடிதண்ணீர் பெறுவதில் மக்கள் அவதி

கைதடி,செப்.23

வரட்சியால் பாதிக்கப்பட்ட கைதடி தெற்குப் பிரதேசத்திற்கான குடிதண்ணீர் விநியோகத்தில் சில அரச அதிகாரிகளின் அசிரத்தையால் அப்பகுதி மக்கள் பல இன்னல்களை அனுபவித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பிரதேசத்தில் கடும் வரட்சி காரணமாக அண்மையில் ஏற்பட்ட குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டையடுத்து அப்பகுதி மக்களின் நலன்கருதி தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் பவுஸர் மூலம் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. தண்ணீர்த்தாங்கி ஒனறு அங்கு வைக்கப்பட்டு அதன்மூலமே மககள் அதனைப்பெற வசதிகள் செய்யப்பட்டன. ஆனால், அத்தண்ணீர்த்தாங்கி தனியார் ஒருவரின் வீட்டில் வைக்கப்பட்டுள்ளதால் அப்பகுதி மக்கள் அங்கு சென்று குடிதண்ணீரைப் பெறமுடியாத நிலையில் உள்ளனர். இத்தண்ணீர்த் தாங்கியை முதலில் அரச காணி ஒன்றிலேயே வைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டு, வைப்பதற்கான இடமும் பொதுமக்களால் துப்புரவு செய்யப்பட்டது. ஆனால், திடீரென அத்திட்டம் கைவிடப்பட்டுத் தனியார் ஒருவரின் வளவில் தண்ணீர்த் தாங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அப்பகுதி மக்கள் தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு நேரடியாகச் சென்று முறையிட்டபோதும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனத் தெரியவருகின்றது. ஒருசில அதிகாரிகளின் அசட்டையால் மக்களின் அடிப்படைத் தேவைகளைச் சரிவர நிறைவேற்றாமல் வீணடிப்பது மிகப்பெரும் வேதனையாக இருக்கின்றது எனப் பொதுமக்கள் தெரிவிக்சின்றனர்.

எனவே, மக்கள் நலனில் அக்கறை கொண்டோர் இவ்விடயத்தில் உடனடிக் கவனமெடுத்து மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகத்தைச் சீராக்க வேண்டுமெனவும் பொதுமக்கள் கோரியுள்ளனர். (8-75)

# புதிய அதிபரின் வரவை ஆட்சேபித்த மாணவர் இப்போது மாலையிட்டு வரவேற்றனர்

தென்மராட்சி,செப்.23

மறியல் போராட்டம் நடத்தி பாடசாலை வளவுக்குள் புதிய அதிபரை வராமல் தடுத்த மாணவர்களும், பெற்றோரும் மலர்மாலை அணிவித்து அதே அதிபரை வரவேற்றனர்.

மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலய அதிபருக்கே இந்த அனுபவம் நேரிட்டது.

இவ்வித்தியாலயத்தில் ஏற்பட்ட அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டு புதிய அதிபரான கு.கதிர்காமசேகரர் என்பவர் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரினால் கடந்த ஜூலை முதலாம் திகதி தொடக்கம் நியமனம் செய்யப்பட்டிருந்தார்.

இந்த அதிபர் பதவியேற்கச் சென்ற வேளையில் மாணவர்களும் பெற்றோர்களும் அதிபரைப் பதவியேற்கவிடாமல் வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் மாணவர்களின் கல்வி நிலையைக் கருத்திற்கொண்டு இந்த அதிபரை சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்தில் கடமையாற்றுமாறு பணித்திருந்தார்.

இவ்வித்தியாலயத்தில் நிரந்தர அதிபர் இல்லாததால் மாணவர்களின் கல்விநிலை பாதிப்படையலாம் என்பதைக் கருத்திறகொண்டு தமிழீழ கல்விக் கழகத்தைச் சேர்ந்த அருண்மாஸ்டர், ஆர்வலன், யாழ். மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் செம்மணன், தென்மராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் ஆகியோர் வித்தியாலய மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்கத்தினர் ஆகியோருடன் கலந்துரையாடினர்.

அதனையடுத்து இவ்வித்தியாலயத்திற்கு நியமிக்கப்பட்ட கு.கதிர்காமசேகரரை மீண்டும் கடமைகளைப் பொறுப்பேற்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கடந்த 16ஆம் திகதி அறிவித்திருந்தார்.

இதனையடுத்து, நேற்றுமுன்தினம் அதிபர் வித்தியாலயத்திற்கு வருகைதந்தபோது வித்தியாலய வாசலில் நூற்றுக்கணக்கான பெற்றோரும், மாணவர்களும் மலர்மாலை அணிவித்து வரவேற்றனர். (எ-31-117)

# சம்பள உயர்வோடு பொதுத்துறையில் முனைப்பான மறுசீரமைப்புக்கும் ஏற்பாடு

## புதிய 'பட்ஜட்'பற்றிய திறைசேரி செயலரின் ஆருடம்

கொழும்பு,செப்.23

அரச துறையில் முனைப்பான நிர்வாகத்திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் சீர்திருத்தங்கள் செய்யப்படவிருப்பதாக திறைசேரி செயலாளர் டாக்டர் பி.பி.ஜெயசுந்தர தெரிவித்துள்ளார். இந்தச் சீர்திருத்தங்கள், அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு வரவு - செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்படும் அதேசமயம் சேர்த்து வெளியிடப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அரச ஊழியர்களுக்கு கவர்ச்சிகரமான சம்பள உயர்வு அறிவிக்கப்படும் என்று தெரிவித்த டாக்டர் ஜெயசுந்தர, பிரதமரின் செயலாளர் லலித் வீரதுங்க தலைமையிலான குழுவொன்று நிர்வாகத்துறை மறுசீரமைப்பு பற்றி ஆராய்ந்துவரும் அதேசமயம், பொதுத்துறையில் வருமான வழிவகைகளுக்கும் நிர்வாகத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் அம்சங்கள் பற்றி திறைசேரி கவனம் செலுத்திவருவதாகவும் தெரிவித்தார்.

2005ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு கவர்ச்சிகரமான சம்பள உயர்வு அறிவிக்கப்படும் என்று தெரிவித்த டாக்டர் ஜெயசுந்தர, திஸ்ஸ தேவேந்திர நிரந்தர சம்பள ஆணைக்குழு தனது சிபாரிசுகளைத் தெரிவிப்பதற்கு முன்னர் அரசதுறை ஆளணி கட்டமைப்பையும் நிர்வாகத் தன்மையையும் ஆராய்ந்து வருவதாகத் தெரிவித்தார்.

பொதுத்துறையில் திறமை உற்பத்தி விநியோக அம்சங்களில் ஊக்கமளிக்கும் வகையில் சம்பள உயர்வு அளிக்கப்படும் என்றும், வாழ்க்கைச்செலவு அதிகரிப்பும் கவனத்தில் கொள்ளப்படும் என்றும் திறைசேரி செயலாளர் கூறினார்.

பொதுச்சேவைகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை மொத்தமாகப் பார்த்தால் [illegible] பேர் என்று தெரிகிறது. இதில் ஆயுதப் படைகளிலும் பொலீஸ் பகுதியிலும் கடமையாற்றுபவர்களையும் நீக்கிப்பார்க்கும்போது மாகாண மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் பொதுச் சேவை ஊழியர்களின் தொகையில் பற்றாக்குறை தென்படுகிறது. அதேசமயம், சில துறைகளில் மேலதிமும் சிலதுறைகளில் பற்றாக்குறையும் காணப்படுகின்றது. - என்றார் டாக்டர் ஜெயசுந்தர.(ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

# திருமதி சரஸ்வதி சண்முகநாதன்

திதி:- வளர்பிறை நவமி 23.09.2004

அன்னை மடியில்
12-12-1927

ஆண்டவன் அடியில்
24-08-2004



ஈர் ஐந்து பிள்ளைகளை இனிதாக நீ பெற்று
ஈடில்லா அன்புடனே எமை நீ வளர்த்தாய் அம்மா
கண்ணுக்குள் மணியாகக் கருத்தோடு வளர்த்த அம்மா
மண்ணுக்குள் போனதென்ன? மாயமாய் மறைந்ததென்ன?
பொல்லாத விதி வந்து எம் வாழ்வைக் குலைத்ததென்ன?
எண்ணாத நேரமில்லை எமையாற்ற யாருமில்லை
பாசத்தைப் பகிர்ந்துகொள்ளப் பத்துப் பிள்ளைகள் நாம் வந்தோம்
பாடையிலே உமைச்சுமந்த பாவியாகிப் போனோம் அம்மா
உமைச்சுற்றி நாம் நின்று ஓ என்று அழுத சத்தம்
உன் காதில் கேட்கவில்லையோ உன் மௌனம் ஏனம்மா?

24.08.2004 அன்று சிவபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து எமது துயரத்தில் பங்குகொண்ட உற்றார், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபச் செய்தியைத் தெரிவித்தவர்களுக்கும், மலர்மாலை சூட்டி அஞ்சலித்தோர்களுக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலித்தவர்களுக்கும், சகல விதத்திலும் எமது துயரைப் போக்கியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இன்று (23.09.2004) வியாழக்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் இடம்பெறும் வீட்டுக்கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குபற்றி அன்னாரது ஆத்மா சாந்தி அடைய வேண்டிப் பிரார்த்திக்கும் வண்ணம் அனைத்து உள்ளங்களையும் அன்புடன் வேண்டுகிறோம்.

இவரது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கும்:
**பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

(36693) (39-13-44-24)

15, ஓட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.

# 31ஆம் நாள் நினைவும்

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மண் மகிழ : 02.03.1973

கண் நெகிழ : 24.08.2004



எழிலார்ந்த வதனம்! ஏற்றமுறு நல்லிதயம் உன் கனிவார்ந்த வார்த்தைகளும் கனிந்துயர்ந்த நற்பண்பும் மலராய் மணியாய் மார்பினிலே மகுடமெனப் பொழிவாய் புகழ்பூக்க லண்டன் நகர் போகையிலே உடனாய் மறைந்திருந்த உறுநோயும் தாக்கியதே திடமாய் முயன்றோம் தீரவில்லை. விதியிதுவோ - நீ வாழும் வயதினிலே நினை இழந்து கண்ணீரில் ஆழும் துயர் தீர்க்க மீண்டும் இங்கு வாராயோ!

எமது குடும்பத்தின் நல்விளக்காய்த் திகழ்ந்து எல்லோர் வாழ்விலும் அணையாத அன்பின் ஒளி விளக்கை ஏற்றிவைத்து அனைவரது மனங்களிலும் மங்காத மாணிக்கமாய் இருந்து சமூகத்தின் நன்மதிப்பைப் பெற்ற எங்கள் செல்வமே! அன்புத் தெய்வமே! உங்கள் ஆன்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் அன்புச் செல்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து எமது துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள். நாடாளுமன்ற உறுப்பினர்கள், அயற்கிராம நண்பர்கள் , வெளிநாட்டு உறவுகள், தென்மராட்சி ப.நோ.கூ.ச.பணிப்பாளர், பணியாளர்கள், தென்மராட்சி சனசமூக நிலைய அமைப்புக்கள்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 4 ஆம் வருட நடன, சித்திர வடிவமைப்புத் துறை மாணவர்கள், திலக நர்த்தனாலய அதிபர், மாணவர்கள், வளர்மதி சனசமூக நிலைய நிர்வாக அமைப்புக்கள் , பாடசாலைத் தோழர்கள், போராளி நண்பர்கள், மதத்தலைவர்கள் ஆகியோருக்கும் தொலைபேசி, கடிதம் , தந்தி, துண்டுப்பிரசுரங்கள் மூலம் அனுதாபச்செய்தி தெரிவித்தவர்களுக்கும் மற்றும் நோயுற்ற வேளையில் அவருக்கு வேண்டிய சகல மருத்துவ உதவிகளையும் வழங்கித் தம்மால் இயன்ற முயற்சியைச் செய்த உள்நாட்டு, வெளிநாட்டு வைத்தியர்களுக்கும் . இறைசக்தி மூலம் சுகம் பெறப் பிரார்த்தனை செய்த அனைத்து சமயப் பெரியோர்களுக்கும், இன்னும் எம்மையும் உங்கள் உறவுகளாகக் கருதி ஆறுதல் தெரிவித்துப் பல வழிகளிலும் உதவிபுரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது நெஞ்சம் நிறைந்த அன்பு கலந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அமரர்
## சுப்பையா சுபேந்திரன்
(செல்வா)

***இன்று (23.09.2004) வியாழக்கிழமை காலை 6.00 மணி முதல் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய கிரியைகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.***

*"மிஷாந்த மஹால்"
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.*

(36648)

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்பகுதி மக்களுக்குப் பணம் பொருளில் ஆர்வம் வடபகுதி மக்களுக்கோ ஆடம்பரத்தில் மோகம்!

## யாழ்.மாவட்ட நிர்வாகசேவைப் பொறுப்பாளர் உரை

வலி.தெற்கு,செப்.23

பனை - தென்னை உற்பத்திப் பொருள்களை வாங்கி உபயோகிபபதில் தென்னிலங்கை மக்கள் காட்டும் ஆர்வத்தைப் போல வடபகுதி மக்கள் ஆர்வம் காட்டுவதில்லை.

வலிகாமம் பனை - தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியும், அங்கத்துவ சங்கங்களும் இணைந்து நடத்திய கூட்டுறவுத் தினவிழாவில் உரையாற்றிய தமிழீழ நிர்வாக சேவை யாழ். மாவட்டப் பொறுப்பாளர் சி.விஜிதரன் மேற்கண்டவாறு கூறினார்.

மானிப்பாயில் உள்ள மேற்படி சங்கத்தின் கொத்தணி மண்டபத்தில் கொத்தணித் தலைவர் க.மெய்யழகன் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக சி.விஜிதரன் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அவர் தமது உரையில் கூறியதாவது:-

இன்று ஏற்பட்டு வரும் உலக மயமாக்கலின் நிலைமைகளுக்கேற்ப பொதுமக்கள் தம்மை மாற்றிக்கொண்டுவருகின்றனர். எமது பாரம்பரிய மூலவளப் பொருள்களின் பாவனைகளைக் கைவிட்டு, ஆடம்பரப் பொருள்களில் எமது வடபகுதி மக்கள் பெரிதும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

பனை - தென்னை வள நிலையங்களூடாக மேற்கொள்ளப்படும் பல்வேறு வகைப்பட்ட உற்பத்திப் பொருள்களில் கூடுதலானவற்றை தென்பகுதி மக்கள் வாங்கிச் செல்கின்றனர்.

ஆனால், எமது பிரதேச மக்களோ வெளிநாட்டு ஆடம்பரப்பொருள்களை வாங்கிக்குவிப்பதில் ஆர்வங்காட்டி வருகின்றனர்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் வர்த்தக சங்கங்கள் தமது உற்பத்திப் பொருள்களுக்கு சந்தை வாய்ப்பை தேடிக்கொள்ளும் நோக்கில் கண்காட்சியொன்றை நடத்தியுள்ளனர். இதே போன்ற ஒரு கண்காட்சியை, பனை - தென்னை வள உற்பத்தி பொருள்களைக்கொண்டு நடத்த வேண்டும்.

பனை - தென்னை வள சங்கங்களின் கிளைகள் ஒதுக்குப்புறமான இடங்களில் அமைந்திருந்த நிலைமாறி இன்று அவை மக்கள் குடியிருப்புகளுக்கு அண்மையாக நெருங்கிவருகின்றன.

சில இடங்களில் இக்கிளைகளை மூடிவிடுமாறு கோரப்படுகிறது. இக்கிளைகளைப் பொருதமான வேறு இடங்களுக்கு மாற்றும் வரை அவற்றை மூடுவதற்கு எமது அமைப்பு ஒருபோதும் அனுமதி தரமாட்டாது.

இச்சங்கங்கள் வெறும் கள்ளுச் சாராய உறபத்திச் சங்கங்களாகத் தொழிற்படாது சிறுவர்களின் கல்வி, போஷாக்கு என்பவற்றில் கவனம் செலுத்துவதுடன் மகளிர் குழுக்களூடாக பனை - தென்னை சார்பான பல்வேறு உற்பத்தி பொருள்களை மேற்கொள்ள வேண்டும் - என்றார்.

பனை - தென்னை வள யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சி.ஐயாத்துரை கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில்:-

சமூக மேம்பாட்டுத்திட்டம், கல்வி மேம்பாட்டுததிட்டம் தொடர்பாக சங்கத்தினால் முன்வைக்கப்பட்ட திட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுப்பதில் நிதிப்பிரச்சினை தடையாகவுள்ளது.

நவீன தொழில் நுட்பத்துறைகளை மேற்கொள்ளவும், கணனித்திட்டங்களை முன்னெடுக்கவும் தேவையான நிதியினைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

மேற்படித் திட்டங்களை முன்னெடுபபதற்குரிய நிதியுதவியை வழங்கவும், கூட்டுறவுத்துறை சார்ந்த உற்பத்திப் பொருள்களை சந்தைபபடுத்தவும் தமிழீழ நிர்வாக சேவைத்துறையினர் உதவவேண்டும் - என்றார்.

வடமாகாண ப.தெ.வ.அ.கூ.சங்க சமாசத் தலைவர் கி.தவராசா, கூட்டுறவுப் பரிசோதகர் இ.விஜயமோகனராசா மற்றும் அங்கத்துவ சங்கங்களின் தலைவர்கள் ஆகியோரும் உரையாற்றினர். (4-152)

## கலை கலாசார பண்புகளையும் பாதுகாத்து கொள்ளவேண்டும்

சங்கானை,செப்.23

தமிழ் மக்களாகிய எங்களுக்கு எமது கலை கலாசாரப் பண்புகளைப் பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்புண்டு இவ்வாறு வலி. மேற்கு உதவிப் பிரதேச செயலர் ய.பரந்தாமன் தெரிவித்தார்.

போரூட் நிறுவன அனுசரணையுடன் யு.என்.எச்.சி.ஆர். நிறுவன நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட இலவச வாத்திய இசைப் பயிற்சியை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முன்னோர் எமக்களித்த 64 கலைகளுள் இசைக்கலையும் ஒன்று, இக்கலையைப் பயில்வதன் மூலம் மனிதன் பூரணமடைகின்றான் - என்றார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய போரூட் திட்ட இணைப்பாளர் டெனி

போரின் பின்னால் கலை கலாசாரங்கள் மடிந்துபோகும் நிலைக்கு வந்துள்ளன. எமது நிறுவனம் புனரமைப்பில், வெறும் கட்டடங்கள் மட்டும் இல்லாது இத்தகைய கலைகளை அழியாமல் பேணவும் உதவிசெய்து வருகின்றது எனக் குறிப்பிட்டார். (28-204)




# மாணவர் வருகைக்குறைவு காரைநகரில் அதிகரிக்கிறது

## வித்தியாலய அதிபர் கவலை

காரைநகர்,செப்.23

காரைநகர் பிரதேச பாடசாலைகளில் மாணவர்களின் வரவு வீழ்ச்சியடைந்து வருவது அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது.

- இவ்வாறு தெரிவித்தார் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலய அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை.

காரைநகர் பிரதேச செயலகத்தில் இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் அனுசரணையுடன் நடைபெற்ற எழுத்தறிவு தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதைக் கூறினார்.

காரைநகர் பிரதேச செயலக பிரதம எழுதுநர் என்.சிவறஞ்சன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அதிபர் தொடர்ந்து உரையாற்றும்போது-

பெற்றோர் தமது வேலைகளுக்காகப் பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பாது தடுப்பது இப்பகுதிகளில் அதிகரித்து வருகின்றது. பெற்றோர் பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பவேண்டும். அவர்கள் படிப்பதற்கான சூழலை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும்.

மாணவர்களைப் பாடசாலைகளுக்குச் செல்லவிடாது வேலைக்கமர்த்துவது தண்டனைக்குரிய குற்றமாகும். கிராம சேவையாளர்களும் சமுர்த்தி உத்தியோகத்தர்களும் பாடசாலைகளுக்கு ஒழுங்காகச் செல்லாத மாணவர்களை அவதானித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

இந் நிகழ்வில் காரைநகர் பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளர் திருமதி எம்.வி.பத்மதயாளன், கிரமசேவையாளர் இ.திருப்புகழூர்சிங்கம் உட்படப் பலர் உரையாற்றினர்.

தொடர்ந்து ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவில் இருந்தும் தெரிவுசெய்யப்பட்ட 45 வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (ப-73)

# மகாகும்பாபிஷேகங்களின் பெறுபேறுகள் என்ன?

## விளக்குகிறார் சமஸ்கிருதப் பண்டிதர்

சாவகச்சேரி,செப்.23

ஆலயங்களில் நடைபெறும் மகாகும்பாபிஷேகங்களால் அந்த நிகழ்வில் கலந்துகொள்ளும் மக்கள் நல்ல வாழ்வுக்கான பேறுகளை இலகுவாகப் பெற்றுக்கொள்கின்றனர் என்று மட்டுவில் வடக்குப் பனையடிப் பிள்ளையார் ஆலய மகாகும்பாபிஷேக நிகழ்வில் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கிய சமஸ்கிருதப் பண்டிதர் எஸ்.சதாசிவக் குருக்கள் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்:-

ஆலயங்களில் நடைபெறும் மகாகும்பாபிஷேகங்களில் மக்கள் கலந்துகொள்வதால் அவர்கள் நல்ல சுபீட்சமான வாழ்வையும் நல்ல பேறுகளையும் பெற்றுவிடுகின்றனர். இவ்வாறான பேறுகளைப் பெற்றுக்கொள்ளும் யாழ்ப்பாண மக்கள் கொடுத்துவைத்தவர்கள். இவ்வாறான சந்தர்ப்பம் ஏனைய இடங்களில் வாழ்பவர்களுக்குக் கிடைப்பது மிகவும் அரிது. ஏனெனில், யாழ்ப்பாணத்தில் வாழும் மக்கள் ஏதாவதொரு ஆலய மகாகும்பாபிஷேக நிகழ்வில் கலந்துகொண்டு பேறுபெறும் வாய்ப்பைப் பெறுகிறார்கள்.

கும்பாபிஷேக நிகழ்வில் கலந்துகொள்ளும்போது அங்கு எழுப்பப்படும் அக்கினி ஓம குண்டத்தில் எழும் புகை எத்தனையோ நோய்களைத் துன்பங்களைத் தீர்க்கவல்லது. எனவே, கும்பாபிஷேகங்களில் கலந்துகொள்ளும் மக்கள் நீண்டகால ஆயுளைப் பெறுகின்றார்கள். அதுமட்டுமல்லாமல், அந்தணர்கள் ஓதுகின்ற வேத ஒலி, ஆலயத்தில் எழுந்து பரவும் ஓம குண்டப் புகை என்பன அந்தக் கிராமம் நீண்ட ஆயுளையும் நல்லபேறுகளையும் பெற உதவுகின்றது - என்று கூறினார்.

இவ்வாலயம் கடந்த 2000ஆம் ஆண்டு தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் முற்றாகச் சேதமடைந்து மீளப் புனரமைப்புச் செய்யப்பட்டதாகும். (ப-31)

# ஒவ்வொரு இரவையும் மக்கள் ஏக்கத்துடன் கழிக்கிறார்கள்

## புதிய ஜனநாயகக்கட்சி செயலாளர் கூறுகிறார்

கொழும்பு,செப்.23

இன்றைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு பதவியேற்று நாலு மாதங்கள் கடந்துவிட்டன. ஆனால், நாட்டு மக்கள் அனைவரும் ஒவ்வொரு இரவும் நித்திரைக்குச் செல்லும்போது இரண்டு விடயங்கள் பற்றிய ஏக்கத்துடனும் அச்சத்துடனுமே இரவைக் கழிக்கின்றனர். ஒன்று வேகமாக நாளாந்தம் உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பு, இரண்டாவது மீண்டும் யுத்தம் வெடித்துவிடுமோ என்ற அச்சமாகும். இந்நிலையில்தான் இந் நாட்டின் பொருளாதார அரசியல் நடப்புக்களை இன்றைய அரசு வழிநடத்திச் செல்கின்றது. இவற்றைப் பற்றிய சரியானதும் தூர நோக்குடனுமான அரசியல் விழிப்புணர்வும் தட்டிக் கேட்கும் வெகுஜனப் போராட்ட ஒன்றிணைவும் ஏற்படாதுவிட்டால் முழுநாடும் அபாயங்களையும் அழிவுகளையுமே சந்திக்கவேண்டிய சூழ்நிலைகள் மிக வேகமாக வளர்ந்து வருவதையே காணமுடிகின்றது.

- இவ்வாறு புதிய ஜனநாயகக் கட்சி கொழும்பில் தெஹிவளை கல்கிசை மாநகரசபை ஜெயசிங்கா மண்டபத்தில் நடத்திய அரசியல் கருத்தரங்கில் உரையாற்றிய அக்கட்சியின் பொதுச்செயலாளர் சி.க.செந்தில்வேல் கூறினார். சட்டத்தரணியும் கட்சியின் அரசியல்குழு உறுப்பினருமான சோ.தேவராஜாவின் தலைமையில் நடைபெற்ற மேற்படிக் கருத்தரங்கில் செந்தில்வேல் தொடர்ந்து உரையாற்றும் போது:-

இன்றைய அரசின்கீழ் புலிகள் இயக்கத்துடனான பேச்சு என்பது தொடங்கப்படுவதற்கான ஒரு சிறுபுள்ளி ஆரம்பத்தைக் கூடக் காண முடியவில்லை. ஜனாதிபதி புலிகளுடன் பேசப் போவதாகவும், எக்காரணம் கொண்டும் யுத்தத்திற்குச் செல்வதில்லை என்றும் மீண்டும் மீண்டும் கூறிவருகிறாரே தவிர அதற்கான அர்த்தமுள்ள எந்தவொரு நடவடிக்கையையும் எடுப்பதாகத் தெரியவில்லை. தமது சொந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு கட்சிகளுக்குள் பேச்சைப் பற்றிய ஒருமுக நிலைப்பாட்டை எடுக்கமுடியாத கையறு நிலையிலேயே ஜனாதிபதி இருந்துவருகின்றார். இந்நிலையில்தான் புலிகளுடனான பேச்சுப் பற்றி சகல கட்சிகளுடனும் பேசப்போவதாகவும் அதன் அடிப்படையில் தேசிய ஆலோசனைச் சபை ஒன்றை உருவாக்கப் [illegible] வதைக் காண[illegible]கின்றது. இவை காலத்தை இழுத்தடித்துச் செல்வதற்கான உத்திமுறையே அன்றி உருப்படியான செயற்பாட்டிற்கான ஆலோசனைகள் அல்ல. இந்த விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சி நேர்மையுடனும் மனப்பூர்வமாகவும் பேச்சைப் பற்றிப் பேசுவதுபோன்று காட்டிக்கொள்ள விரும்புகிறது. ஆனால், அதன் அடிமனதில் ஊறி இருப்பது தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பது பற்றிய அக்கறை அல்ல. பதிலுக்கு இன்றைய பேச்சு முட்டுக்கட்டை நிலையைத் தனது எதிர்கால ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் பாதைக்கு எவ்வாறு பயன்படுத்துவது என்பதிலேயே கண்ணாக இருந்து வருவதாகும். ஐக்கிய தேசியக் கட்சியின் முழுக் கவனமும் அடுத்து வரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலிலேயே பதிந்து நிற்கின்றது. அதற்கான வியூகங்களை அமைப்பதிலும் அதற்குரிய காய்களை நகர்த்துவதிலுமே அவர்கள் ஈடுபட்டு வருகிறார்கள் - என்று கூறினார்.

யுத்த அபாயத்தைத் தடுத்து நிறுத்தவுள்ள ஒரே வழி விடுதலைப் புலிகளுடனான பேச்சை உடன் ஆரம்பிக்கவேண்டும் என்பதாகும். [illegible]பது வருட யுத்தத்திற்குப் பின்பு விடுதலைப் புலிகள் ஒரு இடைக்கால நிர்வாகத்திற்கான யோசனைகளை முன் வைத்திருக்கிறார்கள். அதனை அடிப்படையாகக் கொண்டு பேச்சை ஆரம்பித்து இரு தரப்பும் விட்டுக் கொடுப்பு புரிந்துணர்வுடன் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை ஏற்



படுத்த முன்வரவேண்டும் என்பதையே சமாதானத்தை விரும்பும் தமிழ் மக்கள் உட்பட அனைத்து மக்களும் விரும்புகிறார்கள். எமது கட்சியும் அதனையே வற்புறுத்துகின்றது. அதற்கான வெகுஜன இயக்கத்தைச் சிங்கள மக்கள் மத்தியில் ஏனைய இடதுசாரி ஜனநாயக முற்போக்கு சக்திகளுடன் இணைந்து முன்னெடுப்பதை வலியுறுத்தியே இவ் அரசியல் கருத்தரங்கை நடத்தி ஒரு தொடக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றோம் என்று செந்தில்வேல் தனது உரையில் மேலும் குறிப்பிட்டார்.

மலையகக் கல்வியியலாளரான சிறிபாத கல்வியியல் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் சிவ.இராஜேந்திரனும் உரையாற்றினார். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

புதிய அவுஜா அம்பிலிபயர் ஸ்பீக்கர் செட் விற்பனைக்குண்டு. தொடர்பு: கு.பிரணவன், 4ஆம் ஒழுங்கை, கச்சாய் வீதி, சாவகச்சேரி. T.P.: 077 6005569. (36739)

## காணி விற்பனைக்கு

இலக்கம் 400, நாவலர் வீதியில் உள்ள 3பரப்பு, 5.5குழி விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை. தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: 400, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். நேரம காலை 11.00 மணி - மாலை 4.00 மணி வரை. (36761)

## கணனி விற்பனைக்கு

Multimedia Computer (ASUS CD R/W, 56X CD Rom, 40GB HDD, 128 MB RAM, Black Casing & Monitor உடன்) உம், புதிய DVD Re Writer, Capture card என்பனவும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 021 222 3178. (36760)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான நம்பர் 1 பகிரா புறொயிலர் குஞ்சுகள் 25-09-2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, T.P.: 3529. றஞ்சித், 514, ஸ்ரான்லி வீதி. P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. ராதா, மாவடி வீட்டுக்கோட்டை. தாரகை, முதலாம் கட்டை, பருத்தித்துறை. ஸ்ரீராம், பரு.பஸ்நிலையம் முன்பாக. (36721)

## தவறிவிட்டது

J.சியாமினி லயலெற் என்பவரின் தேசிய அடையாள அட்டை (816203333V), இராணுவ அடையாள அட்டை (0905001333) என்பன சிறு தொகையுடன் கூடிய பேர்ஸுடன் பஸ்தியன் சந்திக்கும் யாழ்.பேருந்து நிலையத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0712347472 என்ற எண்ணுடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (36741)

பூதுராயர் கோயிலடி, உரும்பிராய் கிழக்கு என்னும் முகவரியைச் சேர்ந்த கந்தையா மகேந்திரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (543274330V), விசேட அட்டை என்பன அங்கிய பை உரும்பிராய் பவத பத்தினி அம்மன் கோயிலில் வேலை செய்தபோது தவறிவிட்டன. கண்டெடுத்தவாகள் தயவுசெய்து மேற்காணும் முகவரியில் அல்லது கோயில் பிரதம குரு அல்லது நிர்வாகத்திடம் ஒபபடைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (36765)

## நாடகநூல் விற்பனைக்கு

"ஆசிரியர் தினவிழா" என்ற நாடகத்தைக் கொண்ட நூல் "வானொலி நாடகம் எழுதுவது எப்படி?' ஆசிரியர் தின விழாவில் நடிப்பதற்கு மிகப் பொருத்தமான நாடகம். ஆசிரியர்களும் மாணவர்களும் சேர்ந்து நடிக்கலாம். (36726)

## மணமகன் தேவை

ஆஸ்திரேலியாவுக்கும், லண்டனுக்கும் 30 வயதுக்கு மேற்பட்ட, தகுதியான, உயர்தர மணமகன்தேவை. இலங்கையில் விவாகஞ்செய்து பொனசில் அழைக்கப்படும். சாதகம், துாதரம் அனுப்பவும். பொருத்தமானது நேரில் தொடர்புகொள்ளப்படும். தொடர்பு: சு.சிவஷண்முகானந்தக்குருகக்கள், கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை. (36466)

உ
விநாயகர் துணை

## திருமண வரவேற்பு உபசாரவிழா

அன்புடையீர்,

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான தாரண வருடம் ஆவணி மாதம் 31ஆம் நாள் (16.09.2004) வியாழக்கிழமை நடைபெற்ற திருமணத்தையொட்டி

மானிப்பாய் மருதடி
சிவஸ்ரீ வைத்தீஸ்வரசாமி குருக்களின்
பௌத்திரன்
பிரம்மஸ்ரீ பாலகிருஷ்ண ஐயர் தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரன் சிரஞ்சீவி
**கோபிநாதசர்மா**

நவிண்டில் ராமலிங்ககுருவின்
பௌத்திரி
பிரம்மஸ்ரீ வேதநாயக சர்மா தம்பதிகளின்
சிரேஷ்ட புத்திரி
சௌபாக்கியவதி
**காயத்ரி**

வடுவன் தோட்டம், நவிண்டில், கரவெட்டி மணமகள் இல்லத்தில் வரவேற்புபசார வைபவம் 24.09.2004 பிற்பகல் 4.30 மணிக்கு (பழையநேரம்) நடைபெறவிருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*தயவுசெய்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.*

நவிண்டில்.
தொ.பே.இல. 0777 587708. (36737)(42-13-14-26)

தங்கள் நல்வரவை நாடும்
**இரு வீட்டார் அழைப்பு**

## அடிப்படை வசதிகளற்ற சந்தை

அரியாலை தபாற்கட்டைச் சந்திப் பொதுச் சந்தையில் அடிப்படை வசதிகளின்மையால் வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சந்தை மீள இயங்கத் தொடங்கி 2வருடங்களாகியும் மலசலகூட, குடிதண்ணீர் வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. யுத்தத்தின்போது மலசலகூடம் சேதமாக்கப்பட்டதுடன் குழாய்க்கிணறும் தூர்ந்துபோயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(8-30)

**இணைய, இணையத்தள சேவை**

.com .net .org .info
Domian Registration Rs.400/= per Year
Hosting upto Rs.2000/= per year
Limited time offer
**SAAMSTECH, 841, Hospital Road, Jaffna.**
T.P.: 0773 068968 (சி-37510)

## SAAMSTECH இன் ஆங்கில, சிங்கள நேரடி வகுப்பு

காலம்: 2 மாதங்கள்
கட்டணம்: ஆங்கிலம் ரூபா 6000, சிங்களம் ரூ.4000/= முழுமையாகக் கதைக்கலாம்.

**SAAMSTECH**
841, Hospital Rd., Jaffna.
Phone: 0773068968.
(சி-37511)

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்



திருமதி
**நவரத்தினம் இராசமலர்**

அன்னை மடியில் 1946-03-27

ஆண்டவன் அடியில் 2002-10-16

திதி: 23-09-2004

*ஆண்டுகள் இரண்டு ஆனதம்மா*
*ஆறவில்லை எங்கள் துயர்!*
*எங்கள் உயிருள்ள காலம்வரை*
*உங்கள் நினைவிருக்கும்!*

மாணிக்கதியாகராசா வீதி,
சுன்னாகம்.
(36558) (26-13-14)

\- குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### அருட்சகோதரி மேரி ஆமண்டீன் அந்தோனிப்பிள்ளை (திரு)

இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்.திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவரும் தற்பொழுது இளவாலை திருக்குடும்பக் கன்னியர் இல்லத்தில் வசித்து வந்தவருமான அருட்சகோதரி மேரி ஆமண்டீன் அந்தோனிப்பிள்ளை 21-09-2004 செவ்வாய்க்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னாரது பூதவுடல் இன்று (23-09-2004) வியாழக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இளவாலை திருக்குடும்பக் கன்னியர் இல்லத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியின் பின்னர், இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

121, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
(36763)(13-14-26)

*தகவல்:*
அருட்சகோதரி அன்சில்லா ஜேம்ஸ்,
மாகாணத் தலைவி.

## நடமாடும் சேவை

வட்டுக்கோட்டை,செப்.23

சங்கானைப் பிரதேச செயலகத்தினால் சுழிபுரம் பகுதியில் நடத்தப்படுகின்ற நடமாடும் சேவை சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாசாலையில் எதிர்வரும் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளது.

தொல்புரம் மேற்கு, பொன்னாலை, சுழிபுரம் மேற்கு, சுழிபுரம் மத்தி, சுழிபுரம் கிழக்கு, பணணாகம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மக்கள் இந்நடமாடும் சேவைமூலம் தங்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியும்.

இப்பகுதிகளில் வாழும் மக்கள் எதிர்நோக்கும் அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பாகவும் இந்நடமாடும் சேவைமூலம் ஆராயப்படவுள்ளதாகப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (10-161)

## நலன்புரிமுகாமுக்கு வசதிகள்

வலி.தெற்கு,செப்.23

வலி.வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள நலன்புரி முகாமில் தங்கிவாழும் மக்களுக்குக் குழாய்க் கிணறுகள், மலசலகூட வசதிகள் ஏற்படுத்துக் கொடுக்கப்படவுள்ளன.

மல்லாகம் ஊறணி முகாமில் வாழும் மக்களுக்கு 14ஆயிரத்து 500 ரூபா செலவில் இரண்டு கிணறுகள் திருத்தஞ்செய்யப்படவுள்ளன.

மல்லாகம் நீதிவான் இல்லத்துக்கு ஒரு லட்சத்து 28 ஆயிரம் ரூபா செலவில் மலசலகூடமும் -

கோணற்புலம் முகாம் மக்களுக்கு 40 ஆயிரத்து 500 ரூபா செலவில் இரண்டு புதிய குழாய்க்கிணறுகளும், 3 லட்சத்து 84 ஆயிரம் ரூபா செலவில் மூன்று மலசலகூடங்களும் அமைக்கப்படவுள்ளன.

யாழ். மாவட்ட செயலகத்தின் நிதியின் மூலம் இவை அமைக்கப்படவுள்ளன. (10-152)

## எரி காயத்திற்கு உள்ளானார்

தென்மராட்சி,செப்.23

ஜெனரேற்றர் திருத்தவேலை மேற்கொண்டபோது திடீரென அதன் பெற்றோல் தாங்கி தீப்பற்றிக் கொண்டதில் திருத்தியவர் எரிகாயங்களுக்கு இலக்கானார்.

இச்சம்பவம் கடந்த திங்கள் கொடிகாமத்தில் இடம்பெற்றது.

முகப்பகுதி எரிகாயங்களுக்கு இலக்காகியது. கொடிகாமம் ஐயன் கோயிலடியைச் சேர்ந்த கந்தசாமி ராகுலன் (வயது 20) என்பவரே காயமடைந்தவராவார்.

சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர், மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (10-117)

## அனைவருக்கும் புலமைப்பரிசில்

# COMPUTER EXPRESS
## Institute of Information Technology

இலங்கையில் தமிழ் மொழிமூலம் வெளிவரும் கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் கணனிச்சஞ்சிகையின் கிளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் புலமைப்பரிசில் திட்டம் - (4) 2004

**80% OFF**

எமது அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளுக்கும் 80% கட்டணக் குறைப்பு செய்வதில் பெருமையடைகின்றோம்

| பாட நெறிகள் | | பாடநெறிக் கட்டணம் | செலுத்தவேண்டிய கட்டணம்(20%) |
|---|---|---|---|
| Diploma i n computer Science | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| Honours Diploma in Computer Science | - 4 மாதம் | 8,000 | 1,600 |
| Diploma In WebPage Designing | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| Diploma in Graphic Designing | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| Diploma In Desk top Publishing | - 4 மாதம் | 5,000 | 1,000 |
| Diploma in Hard Ware Engineering | - 3 மாதம் | 5,000 | 1,000 |
| Accounting Package | - 3 மாதம் | 7,000 | 1,400 |

### Advances Courses

**50% OFF**

| | | |
|---|---|---|
| Diploma in Net Working | 4000 | 2000 |
| Diploma in Video Editing | 6000 | 3000 |
| Diploma In Multimedia | 5000 | 2500 |

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்,
வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.

September 30ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்துகொள்ளவும்.

வகுப்புக்கள் ஆரம்பம்
Batch -04 - 26/09/2004
Batch -05 - 01/10/2004
Batch -06 - 16/10/2004

Maniyam Building
இல. 15 சிறாம்பியடி வீதி யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
0777 222422, 0777917781

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மினி உலகக் கிண்ணக் கிரிக்கெட் -2004

## இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது இங்கிலாந்து; அரையிறுதியுடன் விடைபெற்றது ஆஸ்திரேலியா

லண்டன்,செப்.23

மினி உலகக்கிண்ணப் போட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான அரையிறுதி ஆட்டத்தில் பலம்வாய்ந்த ஆஸ்திரேலிய அணியை 6 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியதன் மூலம் முதற்தடவையாக இறுதி ஆட்டத்துக்குத் தகுதிபெற்றுள்ளது இங்கிலாந்து அணி.

பலம் வாய்ந்த ஆஸ்திரேலிய அணியை இங்கிலாந்து அணி வெற்றி பெறுமா? என்று பலரும் எண்ணியிருந்த வேளையில் மிகவும் அருமையான ஒரு வெற்றியைப் பெற்றுள்ளது இங்கிலாந்து அணி.

நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி, ஆஸ்திரேலிய அணியை முதலில் துடுப்பெடுத்தாடும் படி கேட்டுக்கொண்டது. அதற்கமையக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்கள் நிதானமாகத் துடுப்பெடுத்தாடிய போதும் அணி 44 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மத்தியு ஹைடன் 17 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து கில்கிறிஸ்ட், அணித் தலைவர் பொண்டிங் ஆகியோர் ஆட்டமிழந்தபோதும் டேமியன் மார்ட்டினும் டரன் லமனும் சிறப்பாக ஆடி அணியை நல்லதொரு நிலைக்கு இட்டுச் சென்றனர். பின்னர் மைக்கல் கிளார்க் அதிரடியாக ஆடி 34 பந்துகளில் 42 ஓட்டங்களைப் பெற்றார்.

இதனால் 50 ஓவர்கள் நிறைவில் ஆஸ்திரேலிய அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 259 ஓட்டங்களைப் பெற்றது. அணியின் சார்பில் மார்ட்டின் 65 ஓட்டங்களையும் கிளார்க் 42 ஓட்டங்களையும் லீமன் 38 ஓட்டங்களையும் பெற்றனர்.


பந்துவீச்சில் இங்கிலாந்து அணியின் சார்பில் டெரன் கௌவ் 48 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் அணித் தலைவர் வோகன் 42 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

260 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றிபெறலாம் என்ற ஓரளவு கடினமான இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணி, ஆரம்பத்தில் ஒரு விக்கெட்டை இழந்தபோதும் அணித்தலைவர் வோகனும் ரெஸ்கோதிக்கும் இணைந்து சிறப்பாக ஆடினர். இதனால் அணி 161 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ரெஸ்கோதிக் 81 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். ஆயினும், தொடர்ந்து வந்த அன்ட்றூஸ்ராஸ், பிளிண்டொப் ஆகியோர் அதிரடியாக ஆடி ஓட்டங்களைப் பெற்றனர். இதன் காரணமாக 46.3 ஓவர்களில் 4 விககெட்டுக்களை மாத்திரம் இழந்து உரிய இலக்கை அடைந்தது இங்கிலாந்து அணி. அணியின் சார்பில் அணித்தலைவர் வோகன் 86 ஓட்டங்களையும் ரெஸ்கோதிக் 81 ஓட்டங்களையும் அன்ட்றூ ஸ்ராஸ் ஆட்டமிழக்காமல் 52 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அ்ணியின் சார்பில் பிரட்லீ 62 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். ஆட்ட நாயகனாக மைக்கல் வோகன் தெரிவானார். (10)



இங்கிலாந்துடனான ஆட்டத்தில் தோல்வியுடன் வெளியேறும் ஆஸ்திரேலிய அணி.



இங்கிலாந்து அணியின் விக்கெட் ஒன்றை வீழ்த்திய மகிழ்ச்சியில் ஆஸ்திரேலிய அணியின் பந்துவிச்சாளர் ஜேசன் கிலெஸ்பி மற்றும் மைக்கல் கிளார்க், சிமென்ஸ்.



எதிரணியின் விக்கெட் வீழ்ந்த குதூகலத்தில் இங்கிலாந்து அணித்தலைவர் மைக்கல் வோகன்.

## இங்கிலாந்து கிரிக்கெட் அணிக்குக் கிடைத்த மிகச் சிறந்த சகலதுறைவீரர் பிளிண்டொப்


இயன்பொத்தம் 1990 ஆம் ஆண்டு தொடக்கத்தில் ஓய்வுபெற்ற பிறகு இங்கிலாந்து கிரிகெட் அணி சரியான சகலதுறை வீரரைப் பல ஆண்டுகளாகத் தேடிக் கொண்டு இருந்தது. ஒரு காலகட்டத்தில் இங்கிலாந்து வீரர்கள் யாராவது துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சு ஆகியவற்றில் சிறிது சிறப்பாக ஆடிவிட்டால் போதும் அந்த நாட்டுப் பத்திரிகைகள் அவரை அடுத்த இயன் பொத்தம் என்று பாராட்டி எழுதித் தள்ளிவிடும். எதிர் பாராத விதமாக பொத்தமுடன் ஒப்பிட்டுப் பேசிய யாரும் தேறவில்லை.

இயன் பொத்தம், கபில்தேவ் போன்ற சிறநத சகல துறை வீரர்கள் ஆண்டுதோறும் வந்துவிடமாட்டார்கள் என்பதை மக்கள் உணரவேணடும். அவர்கள் போன்ற அபரிதமான திறமைகொண்ட சகலதுறைவீரர்கள் ஓர் அணிக்கு 15 ஆணடுகளுக்கு ஒருவர் கிடைத்தாலே பெரிய அதிர்ஷ்டமாகும். இங்கிலாந்து அணிக்குத் தற்போது சரியான ஒரு சகலதுறை வீரர் பிளிண்டொப் கிடைத்துள்ளார். அவர் எக்கச்சக்கமான திறமை கொண்டவர். கடந்த 2 ஆண்டு காலமாக நிலையாகத் துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சில் பிரகாசித்து வருகிறார். சர்வதேச டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளைப் பொறுத்தமட்டில் சிறந்த ஒரேயொரு சகலதுறை வீரரான பிளிண்டொப் இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் முக்கிய கட்டத்தில் அபாரமாகத் துடுப்பெடுத்தாடி இங்கிலாந்து அணியைச் சரிவில் இருந்து காப்பாற்றினார்.

முதல் நாளில் பிளின்டொப் அடித்து ஆடத் தொடங்கிய சமயத்தில் மழையால் ஆட்டம் பாதிககப்பட்டதால் இலங்கை அணியினர் மகிழச்சி அடைந்து இருக்கக் கூடும். ஆனால், நம்பிக்கை மிகுந்த பிளிண்டொப் மறுநாளும் அபாரமாக ஆடிச் சதம் பெறறார். பிளிண்டொப்பின் அதிரடி ஆட்டத்தால் இலங்கை அணி ஏன்தான் களத்தடுப்பை முதலில் தேர்வு செய்தோம் என்று எண்ணியிருக்கக்கூடும். பின்னர் ஆடிய இலங்கை அணி, மோசமான தொடக்கம் கண்டது. ஹார்மிசன், பிளிண்டொப் ஆகியோர் தொடக்க விக்கெட்டுக்களை வேகமாக வீழ்த்தினர். ஹார்மிசன் பற்றித் தங்களுக்குக் கவலை இல்லை என்று பேசிய இலங்கை அணியினர், அதனைச் செயலில் நிரூபிக்கமுடியவில்லை.


பிளிணடொப் ஆட்டம் ரசிகர்களுக்கு விருந்து படைத்த அதே நாளில் நடந்த மற்றோர் ஆட்டத்தில் தென் ஆபிரிக்க வீரர் கிப்ஸ் அடித்த சதம் சிறப்பாக இருந்தது. கிப்ஸ் தென் ஆபிரிக்க அணிக்கு நல்ல அடித்தளம் அமைத்துக் கொடுத்தார். நல்ல தொடக்கத்தைத் தென் ஆபிரிக்க அணியினர் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. ஒரு கட்டத்தில் தென் ஆபிரிக்க அணி மலைக்க வைக்கும் வகையில் ஓட்டங்களைக் குவிக்கும் நிலை இருந்தது. ஆனால், அணித் தலைவர் ஸ்மித் ஆட்டம் இழந்த பிறகு மேற்கிந்திய அணி வீரர்கள் போராடித் தென் ஆபிரிக்க அணியை 250 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தினர். (10)


இங்கிலாந்து அணியின் விக்கெட் ஒன்றை வீழ்த்திய மகிழ்ச்சியில் ஆஸ்திரேலிய வேகப்பந்துவீச்சாளர் பிரெட் லீ.


இங்கிலாந்து அணியின் பந்துவீச்சில் ஆட்டமிழக்கும் ஆஸ்திரேலிய வீரர் மைக்கல் கிளார்க்.


ஆட்டமிழப்பு ஒன்றுக்கு நடுவரிடம் முறையீடு செய்யும் இங்கிலாந்து வீரர் அன்ட்றூ பிளிண்டொப்.


ஆட்டத்தில் வெற்றியீட்டிய மகிழ்ச்சியில் ஆரத்தழுவும் இங்கிலாந்து வீரர்களான அன்ட்றூ ஸ்ராஸ், போல் கொலிங்வூட்.


பந்தொன்றை விளாச முற்படும் ஆஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பொண்டிங்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலர் உணவுப் பொருள் வழங்காததால் வேலைத் திட்டங்கள் ஸ்தம்பித நிலையில்

ஊர்காவற்றுறை,செப்.23

உலக உணவுத்திட்டத்தின் கீழ் ஊர்காவற்றுறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வந்த வேலைத்திட்டங்களில் ஈடுபட்டுவந்த பயனாளிகளுக்கு அதற்கான உலர்உணவுப் பொருள்கள் வழங்கப்படவில்லை எனக் கூறப்படுகின்றது.

இதனால், வேலைகள் முடிவடையும் தறுவாயில் உள்ள போதும் மேற்கொண்டு வேலைகளை செய்துமுடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வேலைத்திட்டங்களில் ஈடுபட்டுவரும் பயனாளிகளுக்கு வேலைகள் பகுதிபகுதியாக நிறைவேற்றப்படும் பட்சத்தில் அதற்கான உலர் உணவுப் பொருள்களும் பகுதிபகுதியாக வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டிருந்தது.

இதனால், உலர் உணவுப் பொருள்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் வேறுவேலைகளை விட்டு இந்த வேலைத்திடடத்தில் ஈடுபட்டவர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

இதனால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவில் தமக்கு அதற்கான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படவேண்டும் என பயனாளிகள் தரப்பில் எதிர்பார்க்கப்படுகிறது.

உலக உணவுத்திட்டத்தின்கீழ் ஊர்காவற்றுறையில் நாரந்தனை இந்துமயானமும், மயானவீதியும், சுருவில் இந்து மயானமும், மயானவீதியும், புளியங்கூடல் சூரியாவத்தை இணைப்புவீதி, புளியங்கூடல் அம்மன் வீதி ஆகியனவும் காரைநகரில் திக்கரை - தன்னை வீதி ஆகியனவும் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன. இந்த வேலைத் திட்டங்களில் ஈடுபட்டுவந்த பயனாளிகளுக்கே இதுவரை உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படவில்லை.

இதனால், மழைகாலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் வேலைகளை நிறைவேற்றி முடிக்கமுடியாதநிலை ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ-16)

## நான்காவது பிறந்த தின வாழ்த்து

23-09-2004

செல்வன்

நொறிஸ்



நோர்வேயில் வசிக்கும்
நிக்சன் - பெல்சியா
தம்பதிகளின்
செல்வப் புதல்வன்
நொறிஸ்

தனது நான்காவது பிறந்தநாளை இன்று (23-09-2004) வியாழக்கிழமை நோர்வேயில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, தம்பி (பெல்ஷன்), அப்பப்பா (தங்கராஜர்), அப்பம்மா (ஆசைக்கிளி), பிரான்ஸில் வசிக்கும் தொட்டப்பா (கொயன்ஸ்), தொட்டம்மா (வதனா), மச்சான் (ஏனோஸ்), மச்சாள் (எஸ்தர்), லண்டனில் வசிக்கும் மதன் மாமா, நோர்வேயில் வசிக்கும் சித்தப்பா (யூடி), யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சித்தப்பாமார், மாமிமார், மாமாமார், மாச்சான்மார், பேரன்மார், பேர்த்திமார், பேழிப்பூட்டி மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

99, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 3693. (சி-37780) (26)

தகவல்:
சவிரியான் தங்கராஜர்
(அப்பப்பா)

## வதிவிடப் பயிற்சி

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் ஆங்கில மொழிமூலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான மூன்று நாள் வதிவிடப் பயிற்சி நாளை வெள்ளிக கிழமை தொடக்கம் யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

ஆங்கிலமொழியில் விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கே இப்பயிற்சிகள் நடைபெறவுள்ளன.

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் மேற்படி பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களைப் பாடநூல், ஆசிரியர் கைந்நூல் ஆகியவற்றுடன் சமுகமளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (10-117)

## தேவை

தச்சுவேலையாள் உடன்தேவை. பீஸ் வேலை செய்ய விரும்புபவர்கள் உடன்தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:
புறோமோட்டேர்ஸ் என்ஜினியரிங் கம்பனி,
844, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
T.P.: 222 5780. (சி-37781)

## பிரிவுத் துயர் பகிர்வு

### செல்வன் வ.கானவர்மன்

எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி. ஜெ.வரதராஜன அவர்களின் மகனும் எமது கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவனுமாகிய செல்வன் வ.கானவர்மனது மறைவையொட்டி ஆழ்ந்த கவலை அடைவதோடு, துயருறும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நல்லுறவு மன்றம்,
யா/மானிப்பாய் மெமோறியல் கல்லூரி

(36776) (32)

## எஃகின் ஸ்பெஷல் ஓவர்சீஸ் ரவல்



யாழ். மக்களுக்கு மீண்டும்
ஓர் அரிய சந்தர்ப்பம்
சிங்கப்பூர் சென்று வருவதற்கான விமானக்கட்டணம் : 13000/=
அனைத்து வரிகளும் உட்பட : 4860/=

இன்று மட்டும்

பயணத்திகதி : 01.10.2004 தொடக்கம் 14.12.2004 வரை

மேலதிக விவரங்களுக்கு : 56/15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 021-222 3771, 0777-915824,0777-270452.
கொழும்பில் தொடர்புகளுக்கு : 0777-287555

## கண்ணீர் அஞ்சலி



வலி. தெற்கு பிரதேச செயலகத்தின் கீழ் அடங்கும் சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர்

திரு.சி.குமரவேல்

அவர்களின் அன்புத் துணைவியாரும் சங்கபொது முகாமையாளருமாகிய

### திருமதி திலகவதி குமரவேல்

அவர்கள்இயற்கையெய்திய செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தோம். அவரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்

பிரதேச செயலகம்,
வலி. தெற்கு, உடுவில்.

(36777)(32-21-17-46)

## மரண அறிவித்தல்கள்

### அமரர் ஆறுமுகம் கனகசிங்கம்



எழுவாவுடை, 8ஆம் கட்டை மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் நியூயோர்க் அமெரிக்காவை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கனகசிங்கம் 21-09-2004 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - ராமாசிப்பிள்ளை தம்பதிகளின் கனிஸ்ட புத்திரனும், திருமதி தயாழமணி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) யின் அன்புக் கணவரும், தயாழகேசரி, (அமெரிக்கா), விமால் (அமெரிக்கா), சுகந்தா (அமெரிக்கா), ஜசோ (ஜேர்மனி), நந்தா (மல்லாகம்), சலஜா (ஜேர்மனி), றம்பா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் தவக்குமார், சிறிஸ்கந்தராஜா, சிவானந்தராஜா, விக்கினேஸ்வரன், தர்மலிங்கம், தவநிதி வசந்தி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் தாரகா, தருஷன், தர்மன், சுவாதி, கோவற்சன், வற்ஷாஜினி கரீஸ், கீர்த்தனா, சரணன், நிர்மதா, மிதுன், சந்துன், மிலன், மிலானி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.09.2004 சனிக்கிழமை K.Kanagathayalan, 3660 Monorc AVE Apt 52 Pitts Ford N.Y 14534, U.S.A இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச.சிவானந்தராசா
(மருமகன்-அதிபர்),
மகள் - நந்தா

எழுவாவுடை 8ஆம் கட்டை,
மல்லாகம்.

(36770)(21-19-17)

### திருமதி பாக்கியலட்சுமி சண்முகராசா

யாழ்ப்பாணம், அரியாலையைச் சேர்ந்த திருமதி பாக்கியலட்சுமி சண்முகராசா அவர்கள் 19.09.2004 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ராமலிங்கம் - முத்தம்மா தம்பதிகளின் ஏகபுதல்வியும் ஓய்வுபெற்ற விதானையார் அரியாலையூர் வி.கே.சண்முகராசாவின் அன்பு மனைவியும் பாலசுந்தரம் (கனடா), கனகசபாபதி (U.K) ஆகியோரின் சகோதரியும் புஸ்பராணி (கனடா), நிமலாவதி (U.K), திருமதி சி.சௌபாக்கியவதி (U.K), காலஞ்சென்ற V.K.சிவசுந்தரம் மற்றம் G.V.K.மயில்வாகனம் (U.K) ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற லோகானந்தா மற்றம் திருமதி த.மேனகா, ருத்திரானந்தா (கனடா), தயானந்தா (கனடா), திருமதி தே.தேவிகா (கனடா), பாலேந்திரா (U.K), ரவீந்திரா (U.K), காலஞ்சென்ற லோகேந்திரா மற்றும் குமணன் (U.K) ஆகியோரின் மாமியாரும் எஸ்.எஸ்.தங்கராஜா (யாழ்.கோட்டக் கல்விப்பணிப்பாளர்), சிறீதேவன் (கனடா), அனுசியா (U.K), நர்சிகா (U.K) ஆகியோரின் உறவுத்தாயாரும் லக்ஷா, சர்வானந்தா,றெமேஷானந்தா, மாதங்கி (கனடா), மானசன் (கனடா), பிரியன் (கனடா), கபிலன் (கனடா), வர்ஷனா (U.K) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இல.7, பேரின்பநாயகம் ஒழுங்கையிலுள்ள அவரின் இல்லத்தில் இன்று (23.09.2004) வியாழக கிழமை பி.ப. 3.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வி.கே.சண்முகராசா (கணவர்),
எஸ்.எஸ்.தங்கராஜா (பெறாமகன் - யாழ்.கோட்டக்கல்விப் பணிப்பாளர்)

இல.07, பேரின்பநாயகம் ஒழுங்கை,
சுண்டிக்குளி,
T.P. 222 5626.

(36773)(39-19-17)

### திருமதி தர்மலிங்கம் வசந்தமாலா (மாலா)



மாசிவன், நீர்வேலி வடக்கைச் சேர்ந்த திருமதி தர்மலிங்கம் வசந்தமாலா (மாலா) அவர்கள் நேற்று (22-09-2004) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தம்பையா தர்மலிங்கத்தின் (T.குமார் ரான்ஸ்போட்) அன்பு மனைவியாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.09.2004) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சீயாக்காடு இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தர்மலிங்கம் (கணவர்)

மாசிவன்,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(36754) (26-21-46-17)

## சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

அன்புடையீர்!

புரட்டாதிச் சனிக்கிழமையை முன்னிட்டு அடியார்களின் வேண்டுகோளுக்கிணங்க, சனீஸ்வரனுக்கு அர்ச்சனை செய்வதற்கும், எள்எண்ணெய்ச்சுட்டி எரிப்பதற்கும் காலை 8.00 மணி முதல் பகல் 12 மணிவரையும் மாலை 4 மணிமுதல் 6.30 மணி வரையிலும் தேவஸ்தானம் திறந்திருக்கும் என்பதை அறியத்தருகின்றோம்.

அனைவரும் வருக
அன்னை அருள் பெறுக.

தர்மகர்த்தா

(36769)(21-17-46)

## யாழ்.மாவட்ட கராத்தே சங்கம்

### முக்கிய கருத்தரங்கு

யாழ். மாவட்ட விளையாட்டுத் துறையினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் முக்கிய பயிற்சி முகாம் ஒன்றிற்கான கலந்துரையாடல் ஒன்று யாழ். YMCAயில் 23.09.2004 இன்று மாலை 3 மணிக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இப்பயிற்சி முகாம் மிக அவசியமாக கருதப்படுவதால் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டப்படுகின்றீர்கள்.

(சி37757) நிர்வாகம்
(21-17-45) யாழ்.மாவட்ட கராத்தே சங்கம்

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

| பிறப்பு | | இறப்பு |
| --- | --- | --- |
| 25 - 05 - 1946 |  | 25 - 08 - 2004 |

அன்புடையீர்,

சென்ற 25-08-2004 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் சுப்பையா பாலசுந்தரம்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியை (23-09-2004) வியாழக்கிழமை கீரிமலை நகுலேஸ்வர ஆலய தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியை (24.09.2004) வெள்ளிக்கிழமை மு.ப.11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

சகோதரர்கள்,
மனைவி, பிள்ளைகள்.

அம்பாள் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(36775) (26-17-46-17)


REPAIRS




UPS
Printers
Monitors
Scanners
Power supply

MICRO PC SYSTEMS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் டிஜிற்றல் பிரிண்டிங்

கிளிநொச்சி,செப்.23

நிழற்படங்களை டிஜிற்றல் இயந்திரம் மூலம் பதிக்கும் வசதியும், வாய்ப்பும் இன்று தொடக்கம் கிளிநொச்சி வாழ்மக்களுக்கு கிடைக்க வுள்ளது.

கிளிநொச்சி, பரவிப்பாஞ்சான் பகுதியில் ஜப்பான் நாட்டின் பிரசித்தி பெற்ற நொரிட்சு கொரி நிறுவனத்தின் நவீன ரக டிஜிற்றல் இயந்திரத் தின் மூலம் நிழற் படங்களைக் குறு கிய நேரத்தில் பதிக் கும் வசதி ஆரம்பமா கிறது. மில்லர்ஸ் நிறுவனத்தின் அனு சரணையுடன் வண்ண முகில் சோலையில் இன்று முதல் இந்த நவீன வசதி படப்பிடிப் பாளர்களுக்கு கிடைக் கும் இதற்கான அரமப வைபவம் இன்று நடைபெறும். (அ)


## பொருளியற் கல்லூரி யாழ்ப்பாணம்

புவியியல் - குமரன் B.A.(Hons)

A/L DAY - வாரத்தில் 8 மணித்தியாலம் நடைபெறுகின்றன.

செவ்., வியா, - 8 - 10
சனி, ஞாயிறு - 10 - 11
திங்கள் - 2 - 4

கிளை நிறுவனம் - இணுவில் பொருளியற் கல்லூரியிலும் இவ்வகுப்பு நடைபெறுகின்றது. (36789)(35)


# நிவாரண வெட்டுக்கு ஜே.வி.பி. இணக்கம்

தற்போது வழங்கப்பட்டுவரும் நிவாரண முறையை நீக்கி அதற்குப் பதிலாகப புதிய முறையொன்று அறிமுகப் படுத்தப்படுமாயின் அதற்குத் தாம் இணக்கம் தெரிவிப்பதாக அண்மையில் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கா ன நிரந்தரப் பிரதிநிதியான ஜேரம்காட்டரைச் சந்தித்துள்ள ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

இந்தப் புதிய நிவாரணமுறை தொடர்பான ஒப்பந்தமொன்று கடந்த 2001 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 16ஆம் திகதி ஜனாதிபதிக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையில் கைச்சாத் தானது. இந்தப் புதிய முறை யின் மூலம் சமுர்த்தி நிவாரணம் படிப்படியாக வெட்டப்படும் அன்று இந்த ஒப்பந்தம் கைச்சாத்தானபோது ஜே.வி.பி. அதற்குத் தனது முழுமையான எதிர்ப்பைத் தெரிவித்திருந்த போதும் நாணய நிதியத்தின் இலங்கைக் கான நிரந்தரப் பிரதிநிதி ஜேரம்காட்டரிடம் ஜே.வி.பியின் தலைவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர். அடுத்த வரவு-செலவுத்திட்டம் வெளியிடப்படும் வரையில் சர்வதேச நாணய நிதியத்தில் இருந்து உதவிகள் எதனையும் வழங்க முடியாது என ஜேரம கார்ட்டர் ஜே.வி.பியிடம் தெரிவித்தார். மேலும், புதிய அரசின் பொருளாதாரக் கொள்கைகள் எவ்வாறானது என்பதைப் பொறுத்தே உதவிகள் வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ள கார்ட்டர் இந்த அரசின் தற்போதைய பொருளாதாரக் கொள்கைகளை ஏற்கமுடியாது எனவும் தெரிவித்துள்ளார். (8)


## ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

அர்ஜுன், லாராதத், ரகுவரன், விவேக் நடித்த

அரசாட்சி

பு.நே. 10.30 ⁿ.30 6.30 8.30

ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம். (36364)



## நாகம்ஸ் சுன்னாகம்

விஜய்.சோனியா அகர்வால். வடிவேல் நடிப்பில்

மதுர

காட்சி நேரம்: 11.00. 3.00. 7.00 (பி.நே) (C-37740)(15)



## நிரஞ்சனாஸ் சங்கானை

இன்று முதல் சரத்குமார்.நக்மா. பார்த்திபன் நடித்த

அரவிந்தன்

தினசரி: 11.00, 2.45, 6.00 (பி.நே)

வெள்ளி, சனி, ஞாயிறு. (ரீல்ஸ்)

Return to tow Moon Junction (இரவு 8.45 பி.நே.)




## மஹோற்சவம்

சாவகச்சேரி செருக்கல் பதியின் 5ஆம் திருவிழா மஹோற்சவம் இன்று (23.09.2004) வியாழக்கிழமை இடம்பெறும்.

5ஆம் திருவிழாவில் பகல்நிகழ்வாக விஷேட அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து மதியம் அன்னதானமும் இடம்பெறும்.

மாலை நேரம் விஷேட மேளக்கச்சேரியும் இடம்பெறும்.

அடியார்கள் அனைவரையும் கலந்து அருள்பெற வேண்டுகின்றோம்.

- 5ஆம் திருவிழா உபயகாரர்கள்.

விளம்பர அனுசரணை: லங்கா டிஸ்ரிபியூட்டஸ்
இல.92, பழம் றோட், கந்தர்மடம்.
(சி.37787)(43-11-12)

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தில் கடமைபுரிந்த

**திருமதி யமுனா குலேந்திரன்**

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரி வித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர், உத்தியோகத்தர்.
கோப்பாய் வைத்தியசாலை (C/37784)(43-11-12)

## மரண அறிவித்தல்

**திருமதி சுப்பிரமணியம் கனகேஸ்வரி**



இல.107/1, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி சுப்பிரமணியம் கனகேஸ்வரி (21.09.2004) செவ்வாய்க்கிழமை இலண்டனில் காலமானார்.

அன்னார் செல்லத்துரை-சிவயோகம் தம்பதிகளின் மூத்த புதல்வியும் சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற சிறாப்பர்) அவர்களின் பாசமிகு மனைவியும் முரளிதரன் (லண்டன்), கேதீஸ்வரன் (லண்டன்), யோகேஸ்வரன் (கனடா), யசோதரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் யோகம்மாவின் அன்புச் சகோதரியும் கம்ஷா, புஷ்பா, சிவாஜினி, ராதா ஆகியோரின் அன்பு மாமியாரும் சிந்துஜா, பிரசாந், ரூபி, வைஷ்ணவி, வைஷ்தேகி, நேத்திரா, விதுஷன், அனுஷன், தீபிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் குணசுசி (குஞ்சு) அவர்களின் பாசமிகு பேர்த்தியும் சிறிதரன், ரவீந்திரன் (பிரான்ஸ்), ஜீவாகரன் (ஹொலண்ட்), நந்தினி ஆகியோரின் பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

C.Subramaniam, Flat 23,
Kina house 7,Pilgrimsway
London - E6 1HJ

தகவல்:
குணசுசி தனேந்திரா (பேர்த்தி)
(36753)(35-11-12-43)

## 95 ஆவது பிறந்த தின வாழ்த்தும்

## 70 ஆவது திருமணநாள் வாழ்த்தும்

## 23.09.2004



இயாமா வளவு தெல்லிப்பழையைச் சேர்ந்த சைவத்திரு. திருச்சிற்றம்பலம் சுந்தரமூர்த்தி (முன்னாள் ஆசிரியர் சைவப்பிரகாச வித்தியாசாலை, மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை) அவர்களின் 95 ஆவது பிறந்த நாளையும் திருமதி தையல்நாயகி அம்மையாருடன் இல்லற வாழ்வின் எழுபதாவது வருடத்தையும் முன்னிட்டு எமது குலதெய்வம் குருநாதரின் திருவருளால் இன்னும் பல்லாண்டு பாரினில் வாழவேண்டும் எனப் பிரார்த்தித்து, எமது இதயம் கனிந்த நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இயாமா வளவு,
தெல்லிப்பழை. - பிள்ளைகள்.
(36788)(29-11-12)

## கண்ணீர் அஞ்சலி

சுன்னாகம் ப.நோ.கூ.சங்கத் தலைவரும் யாழ்.மாவட்ட கூ.கிராமிய வங்கியின் சமாசத் தலைவருமான திரு.குமரவேல் அவர்களின் *அன்புத் துணைவியார்*

**திருமதி திலகவதி குமரவேல்**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் துயரத்தையும் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்.
*நல்லூர் ப.நோ.கூ.சங்கம்.* (C/37784)(43-11-12)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 614 | டிக்கட்டின் நிறம் - நீலம் | |
| திகதி | 21-09-2004 | செல்லுபடியாகும் தொடர் இல. | 4953768-4969385 |

வெற்றி இலக்கங்கள்: 12 13 49 51

லக்கினம்: விருச்சிகம்

ஜக்பொட் பரிசு ரூபா.17,77,600/- வெல்லப்பட்டுள்ளது

இந்த வெள்ளிக்கிழமை ஜக்பொட் ரூபா. 10,00,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,44,739 | 10/- | 34,47,390/- |
| 2.இலக்கங்கள் | 31,732 | 20/- | 6,34,640/- |
| 1.இல + லக்கினம் | 31,453 | 30/- | 9,43,590/- |
| 2.இல + லக்கினம் | 2,836 | 100/- | 2,83,600/- |
| 3.இலக்கங்கள் | 850 | 500/- | 4,25,000/- |
| 3.இல + லக்கினம் | 76 | 5,000/- | 3,80,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இல + லக்கினம் | 1 | 17,77,600/- | 17,77,600/- |
| மொத்தம் | 4,11,696 | - | 94,22,070/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 94,22,070/-

தொடர் இல. 5928208 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2004 செப்டம்பர் 24ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்வுக்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

4962365-3-57
4959848-5-95
4958561-9-04
4954692-6-95
4969276-3-05

### திலீபன் நினைவாக விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,செப்.23

தியாக தீபம் லெப். கேணல் திலீபனின் 17 ஆம் ஆண்டு ஞாபகார்த்தமாக புங்குடுதீவு தேசிய எழுச்சிப் பேரவையினால் நடத்தப்படுகின்ற முன்பள்ளி மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டி புங்குடுதீவு பெருங்காடு கந்தசாமி ஆலய முன்றிலில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதேவேளை - புங்குடுதீவு தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் நாளை வெள்ளிக்கிழமை தியாகி திலீபனின் ஞாபகார்த்தமாக புங்குடுதீவு முத்துமாரியம்மன் ஆலய கல்யாண மண்டப முன்றிலில் அடையாள உண்ணா விரதம் நடைபெறவுள் ளது. இந்த நிகழ்வுகளில் பொது மக் கள்பங்கு கொண்டு சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (எ-13)


புலமைப் பரிசில் - 2004

7ஆவது பரீட்சை 26.09.2004 ஞாயிறு வழமையான நேரப்படி நடை பெறும். 3ஆம், 4ஆம், 5ஆம் தர வகுப்புக்கள். ஆரம்பம்: 01.10.2004.

BOND கல்வி நிலையம், யாழ்நகர். (36779)


# இலங்கை மத்திய வங்கி

## வெளியீடுகள் மற்றும் சர்வதேச சஞ்சிகைகளை இலவசமாக வழங்குதல்

இலங்கை மத்திய வங்கி 2002ஆம் ஆண்டிற்கு முன்னர் வெளியிடப்பட்ட ஆண்டறிக்கை, மாதாந்த செய்தித்திரட்டு, அண்மைக்காலப் பொருளாதார அபிவிருத்திகள், சட்டகான, சமூக பொருளாதார அபிவிருத்திகள், நுகர்வோர் நிதிஅளவீடு மற்றும் உயர்அலுவலர் ஆய்வுகள் போன்ற குறிப்பிட்ட சில வெளியீடுகளை பொதுமக்களுக்கு இலவசமாக வழங்குகின்றது.

இவ்வெளியீடுகள் நூலகங்கள், பல்கலைக்கழகங்கள், பள்ளிக்கூடங்கள், ஆராய்ச்சியாளர்கள், பொருளியலாளர்கள் மற்றும் மாணவர்களுக்கு மிக உகந்தவையாகும்.

பொருளாதாரம், நிதி மற்றும் வங்கித் தொழில் ஆகிய விடயங்கள் தொடர்பாக 1996இற்கு முன்னர் வெளியிடப்பட்ட பல்வேறு சர்வதேச சஞ்சிகைகளும் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன.

இவ்வெளியீடுகளும், சஞ்சிகைகளும் இலங்கை மத்திய வங்கியின் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ளன. இவ்வெளியீடுகளையும் சஞ்சிகைகளையும் இலவசமாகப் பெறவிரும்பும் ஆர்வமுடையோர் இல.57, சிறி ஜயவர்த்தனபுர மாவத்தை, இராஜகிரியவில் அமைந்துள்ள வங்கித் தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தில் 2004ஆம் ஆண்டு செப்டெம்பர் 27ஆம் திகதியிலிருந்து ஒக்டோபர் 6ஆம் திகதிவரை போயா, சனி, ஞாயிறு தவிர்ந்த மற்றைய நாட்களில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

விசாரணைகளுக்குத் தயவுசெய்து தகவல் திணைக்களத்தின் பின்வரும் தொலைபேசி எண்களான 2477424, 2477639, 2477420 மற்றும் 2477421 என்பனவற்றில் தொடர்புகொள்ளவும்.

தகவல் பணிப்பாளர்

**இலங்கை மத்திய வங்கி**
30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு - 01.
Tel : 2477639 Fax : 2477739 Email : information@cbsl.lk
http : //www.centralbanklanka.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதியாட்டத்தில் மே.இந்தியா வெளியேறியது பாகிஸ்தான்

ஐ.சி.சி. மினி உலகக்கிண்ணத் தொடரில் மேற்கிந்தியத்தீவுகள் - பாகிஸ்தான் அணிகளுக்கிடையே இங்கிலாந்து, ரோஸ்பவுல் மைதானத்தில் நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் மேற்கிந்தியத்தீவுகள் 7 விக்கெட்டுக்களால் மிக இலகுவாக வெற்றியடைந்தது. இதன்படி இறுதியாட்டத்திற்கு அந்த அணி முன்னேற, வெளியேறியது பாகிஸ்தான்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 38.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 131 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் யாசீர் ஹமீதைத் தவிர மற்ற வீரர்கள் எவரும் சிறப்பாக ஆடவில்லை. யாசீர் ஹமீது 39 ஓட்டங்களையும், இன்சமாம்-உல்-ஹக் 21 ஓட்டங்களையும் பாகிஸ்தான் சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் மேற்கிந்தியத்தீவுகள் சார்பாக கொரே கொலிமோர் 24 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், வெவல் ஹின்ட்ஸ் 27 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் டெவயன பிராவோ 41 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

வெற்றி இலக்காக 50 ஓவர்களில் 132 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 28.1 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றது. இதன்படி மேற்கிந்தியத்தீவுகள் இந்த ஆட்டத்தில் 7 விக்கெட்டுக்களால் மிக இலகுவாக வெற்றியடைந்தது. அந்த அணிசார்பாக ராம்நரேஷ் சர்வான் ஆட்டமிழக்காமல் 56 ஓட்டங்களையும், பிரைன்லாரா ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களையும்பெற்றனர்.

ஆட்டத்தின் ஒரு கட்டத்தில் சொயிப் அக்தர் வீசிய பந்து லாராவின் கழுத்தில் பட்டதால் அவர் ஆட்டத்தின் பாதியிலிருந்து இடைவிலகினார். எனவே, இறுதியாட்டத்தில் அவர் பங்கேற்பது சந்தேகமே.

பந்து வீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக சொயிப் அக்தர் 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், சொயிப் மாலிக் 15 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

இந்த ஆட்டத்தில் ஆட்டநாயகனாக ராம் நரேஷ் சர்வான் தெரிவுசெய்யப்பட்டார்.(எ-க)

## கற்பிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கற்பிட்டிப் பிரதேச சபைக்குட்பட்ட சமுர்த்தி நிவாரண உணவு முத்திரைகள் விநியோக விடயத்தில் பாரிய முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதாக கற்பிட்டிப் பிரதேச சபை உப தலைவர் எம்.என்.எம்.எம்.பசீர், கற்பிட்டிப் பிரதேச செயலகத்தில் உள்ள அலுவலர்களிடம் முறையிட்டுக்கொண்டிருந்தார். அச்சமயம் அவ்விடத்திற்கு விஜயம் செய்த வடமேல் மாகாணசபை உறுப்பினர் என்.டீ.எம்.தாஹிர்தானும் மேற்குறிப்பிட்ட விடயம் சம்பந்தமாகத்தான் அலுவலர்களிடம் கதைக்க வந்துள்ளார் எனக் கூறியபடி ஆசனத்தில் அமர்ந்துள்ளார்.

சமுர்த்தி நிவாரணம் சம்பந்தமாக மேற்குறிப்பிட்ட பசீர், தாஹிர் இருவரும் ஒன்றாக இருந்து முறையிட்டுக்கொண்டிருந்தபோதே இருவருக்குமிடையே வாய்த்தர்க்கம் ஆரம்பித்தது. பின்னர் அது கைலப்பில் முடிந்தது.

இவ்விருவரையும் சண்டையிலிருந்து விலக்க கற்பிட்டிப் பிரதேச செயலகத்திற்கு வந்திருந்த பொதுமக்களும், ஊழியர்களும் இணைந்து பிரயத்தனப்பட வேண்டியிருந்தது. என்.டீ.எம். தாஹிர், ஐ.மா.சு.கூட்டணிக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதும் எம்.என்.எம்.எம்.பசீர் முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ-க)

## தகவல்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யும் விதத்தில் ஒழுங்கான அடிப்படையில் தொடர்புகளைப் பேணிக்கொள்ளவும் தரப்புகள் இணங்கின.

அடுத்த சந்திப்பு ஒக்ரோபர் 6ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும்.

யுத்தநிறுத்தத்தைத் தொடர்ந்து பேணுவதில் பற்றுறுதி வெளிப்படுத்திய தரப்புகள், யுத்தநிறுத்தத்தை மேலும் வலுப்படுத்துவது குறித்துக் கவனிக்கவும் இணங்கின.

அரசுத் தரப்பில் 23ஆவது பிரிவு இராணுவப் படையணியின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் வஜிர விஜயகுணவர்த்தன, மட்டக்களப்பில் உள்ள 232ஆவது பிரிகேட்டின் கட்டளை அதிகாரி கேணல் லக்சிறி அமரதுங்க, மட்டக்களப்பு பதில் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சர் கீரகல, பொலீஸ் அதிகாரி ஜமால்தீன், விசேட அதிரடிப்படையின் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ரட்னாயக்கா மற்றும் மட்டக்களப்பு விசேட அதிரடிப்படை அதிகாரி டி.சில்வா ஆகியோர் அரசுத் தரப்பில் பேச்சில் பங்குபற்றினர்.

புலிகள் தரப்பில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கௌசல்யன், புலிகளின் சிரேஷ்ட அலுவலர் மார்ஷல், மட்டக்களப்பு - அம்பாறை நிர்வாக அலுவலகப் பொறுப்பாளர் தயாமோகன், அம்பாறை அரசியற் பொறுப்பாளர் குயிலின்பன், மட்டக்களப்பு - அம்பாறை அரசியற்றுறை அலுவலகச் செயலாளர் எவ்.மனோஜ் ஆகியோரும் பங்குபற்றினர்.

- என்று கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-க)

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றிய ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமை கோரும் பிரேஸில், ஜேர்மனி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கும் இலங்கை ஆதரவு வழங்கும் என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

ஐ.நா. பாதுகாப்புச் சபை விரிவுபடுத்தப்படவேண்டும் என்றும் ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார். எதிர்காலத்தில் முடிவுகளை எடுப்பதற்கு வசதியாக ஆபிரிக்க நாடு ஒன்றுக்கு பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமை வழங்கப்படவேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

நிலவியல் சார்ந்த அரசியல் முறைமையைத் தற்போது நிறுவப்பட்டுள்ள பாதுகாப்புச் சபை பிரதிபலிக்கவில்லை. பிராந்தியப் பிரதிநிதித்துவத்தைச் சமப்படுத்தும் வகையில் பாதுகாப்புச் சபையின் நிரந்தர மற்றும் நிரந்தரமற்ற உறுப்புநாடுகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவேண்டும். வளர்ந்துவரும் நாடுகளுக்கும் அதில் இடமளிக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா மேலும் தெரிவித்தார்.

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டமாகப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் செயலாகும். தடுத்து வைக்கப்பட்டுள்ள ஊர்காவலர்களை விடுவிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்" - என்றார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் பதில் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க உரையாற்றினார்.

"விமல் வீரவன்ஸவின் குற்றச் சாட்டை ஏற்றுக்கொள்கிறேன். தடுத்து வைக்கப்பட்டுள்ள ஊர்காவல் படையினர் இருவரையும் விடுவிக்க வேண்டுமானால் நீதிமன்றத்தால் தடுதது வைக்கப்பட்டுள்ள புலி உறுப்பினர்களை விடுவிக்கவேண்டுமெனப் புலிகள் நிபந்தனை விதித்துள்ளனர். யார் யாரை விடுவிக்க வேண்டும். எத்தனை பேரை விடுவிக்க வேண்டும் என்பன போன்ற விவரங்கள் தெளிவாக இல்லை. புலிகளின் நிபந்தனைகளை அரசு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. நீதிமன்றத்தால் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களை நாம் விடுவிக்கவும் முடியாது" - என்றார் அமைச்சர் ரட்ணசிறி.

இப்போது யுத்த நிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கின்றதனால் அதன் அடிப்படையில் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஊர்காவல் படையினரை விடுவிக்க அரசு உச்ச கட்ட நடவடிக்கைகளை எடுக்கும் என்றும் அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க குறிப்பிட்டார். (எ-க)

# இந்த அரசின் முதலாவது சட்டத்திற்கு ஆதரவாக 50 அதிகப்படிவாக்குகள்

உள்நாட்டு இறைவரி (மன்னிப்பு விலக்கல்) ஒழுங்குபடுத்தல் சட்டம் நேற்று நாடாளுமன்றத்தில் ஐம்பது மேலதிக வாக்குகளால் அங்கீகரிக்கப்பட்டது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய ஆகிய இருகட்சிகளும் அரசுடன் இணைந்து சட்டமூலத்திற்கு ஆதரவாக வாக்களித்தன. சட்டமூலத்திற்கு ஆதரவாக 112 வாக்குகளும் எதிராக 62 வாக்குகளும் கிடைத்தன. இன்றைய கூட்டமைப்பு அரசு ஆட்சிக்கு வந்தபின் முதன் முறையாக நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது. அமைச்சர் முத்துசிவலிங்கமும், பிரதி அமைச்சர் எம்.என்.செல்லச்சாமியும் நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சியின் பக்கம் நேற்று அமர்ந்திருந்தனர். ஏனைய இதொ.காவினர் எதிர்க் கட்சிகளின் வரிசையிலேயே இருந்தனர். ஆறுமுகன் தொண்டமான் சபையில சமுகமளித் திருக்கவில்லை

## மட்டு. சுகாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை 9 மணி முதல் 12 மணிவரை இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

பணிப்பகிஸ்கரிப்பால் சகல வைத்தியசாலைகளிலுமுள்ள அவசர சிகிச்சைப்பிரிவு, வெளிநோயாளர் பிரிவு, வைத்திய விடுதிகள் போன்ற அனைத்துப் பகுதிகளும் ஸ்தம்பித நிலைக்கு உள்ளாகின இப்பிரச்சினைக்கு உரிய தீர்வு கிட்டாத பட்சத்தில் வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்வதோடு மட்டக்களப்பு போதனாவைத்தியசாலை ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் குதிக்கத் தீர்மானித்துள்ளனர் என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

அதேநேரம் கல்முனை மாவட்டத்தில் மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் வைத்தியசாலை ஊழியர்களும் நாளை பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (எ-க)

## பயங்கரவாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹூசைன் சம்பந்தமான விடயங்களை மேலும் பயனுள்ள - தாக்குப் பிடிக்கக்கூடிய - விதத்தில சர்வதேச சமூகம் கையாளமுடியும் என் றும் அவர் சுட்டிக் காட்டினார்.

ஈராக்கிற்கு உதவும் இலங்கையின் விருப்பத்தை நடைபெறவிருக்கும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் பாதிக்குமா என்று ஜனாதிபதி சந்திரிகாவிடம் கேட்கப்பட்டது.

"அமெரிக்காவின் ஜனாதிபதியாக யார் இருந்தாலும் நாங்கள் ஈராக்கிற்குத் துருப்புக்களை அனுப்பப் போவதில்லை. ஏனென்றால், போர் முறை - தீர்வுக்கு வழி என்று நாங்கள் நம்ப வில்லை - என்றார் ஜனாதிபதி குமாரதுங்க.

"நாங்கள் எங்கள் நாட்டின் ஆயுதப் பூசலுக் குப் பேச்சு மூலம் தீர்வுகாண முயன்று வருகிறோம்" - என்று கூறிய ஜனாதிபதி குமாரதுங்க, சில வன்முறைச் சம்பவங்களுக்காக புலிகள்மீது குற்றம் சுமத்தினார்.

குறிப்பாக வடக்கு - கிழக்கில் சிறுவர்கள் படைக்குத் திரட்டப்படுவதையும், சட்ட விரோதமாக வரி அறவிடப்படுவதையும் அவர் சுட்டிக் காட்டினார். இலங்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண எடுக்கப்படும் சமாதான முயற்சிகளை விளக்கிய ஜனாதிபதி, இறுதித் தீர்வுக்கான பேச்சுத் தொடங்குமுன் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை நிறுவப்படவேண்டும் என்று புலிகள் வற்புறுத்துகின்றனர் என்றும், அந்தப் போக்கு அவரது அரசுக்குத் திருப்தி தரவில்லை என்றும் கூறினார். (எ-க)

## நெஞ்சைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலில் 20 பாடசாலை மாணவர்களும் 6 பொதுமக்களும் கொல்லப்பட்டிருந்தனர்.

இந்நினைவு தின நிகழ்வுகள் நாகர் கோயில் மகாவித்தியாலயம் தற்போது இயங்கிவரும் புலோலி றோ.க.த.க. பாடசாலையில் குண்டுத் தாக்குதல் நடைபெற்ற நேரமான நண்பகல் 12,45 மணிக்கு ஆரம்பமாகியது.

நாகர் கோயில் வித்தியாலய அதிபர் சி.மகேந்திரம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், உறவினர்கள், கல்வித்திணைக்கள அதிகாரிகள் மற்றும் புலிகளின் பிரமுகர்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

நிகழ்வில், பொதுச்சுடரினை வடமராட்சி மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் பா.ஆதித்தன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து குண்டு வீச்சில் பலியான மாணவர்களின் உருவப்படங்களுக்கு அவர்களின் பெற்றோர்களும், உரித்துடையோரும் சுடரேற்றி மலர் மாலை அணிவித்தனர்.

இத்தாக்குதலின்போது பலியான பொதுமக்களின் நினைவாக நினைவுச் சுடரினை நாகர் கோயில் மேற்கு, நாகர் கோயில் கிழக்குக் கடற்றொழிலாளர் சங்கங்களின் தலைவர்கள் ஏற்றிவைத்தனர். அதனைத் தொடர்ந்து பாடசாலை அதிபர் தலைமையில் நினைவஞ்சலி உரைகள் இடம்பெற்றன. வடமராட்சி வலயக் கல்விப பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம், சர்வதேச மாணவர் அமைப்பு இணைப் பொறுப்பாளர் குகன், மருதங் கேணிக் கோட்டக் கல்வி அலுவலர் பா.இரகுநாதன், ஆழியவளை சி.சி.த.க.பாடசாலை அதிபர் திரவியராஜா, ஆசிரியர் எஸ்.நாகநாதன், ஊடகவியலாளர் பா.நிர்மானுசன் ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினார்கள். மாணவர்களின் கவிதாஞ்சலியும் இடம்பெற்றன. (எ-9-182-173)

## யாழ். பெருமாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தம்பபூசை என்பன நடைபெற்று 8.30 மணியளவில் வசந்த மண்டபப்பூசை இடம்பெறும்.

முற்பகல் 10.30 மணிக்கு ஸ்ரீதேவி, பூமிதேவி சமேத வரதராஜப் பெருமாள் தேரில் ஆரோகணித்தலும் 12.30 மணிக்குத் தேரில் இருந்து அவரோகணித்தலும் இடம்பெறும்.

கிரியைகள் யாவும் பழைய நேரப்படி நடைபெறும் என ஆதீன மஹாசபை அறிவித்துள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு வசந்த மண்டபப்பூசை நடைபெற்று 9.30மணியளவில் புஷ்கரணியில் தீர்த்தோற்சவம் நடைபெறும். (எ)


**M.A., M.Com.**

**(காமராஜர் பல்கலைக்கழகம் - மதுரை)**

01) மேற்குறிப்பிட்ட பட்ட பாட நெறிகளுக்கு பல்கலைக்கழகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
02) பட்டதாரிகள் மாத்திரமே தகுதியுடையவர்களாகக் காணப்படுவர்.
03) பல்கலைக்கழக சகல பதிவுகளும் எமது நிறுவனத்தினூடாகச் செய்துதரப்படும்.
04) விண்ணப்பங்கள் யாவும் 26.09.2004 இலிருந்து ஏற்றுக் கொள்ளப்படும்.
05) விரிவுரைகள் ஆரம்பம்: 05.12.2004
I) தமிழ் III) ஆங்கில இலக்கியம் V) அரசியல்
II) சமயதத்துவம் IV) பொருளியல் VI) சமூகவியல்
VII) பொது நிர்வாகம்.

மேற்குறிப்பிட்ட பாடங்களில் ஒன்று மட்டுமே தெரிவுசெய்யலாம்.

குறிப்பு:- *இவற்றிற்குரிய பரீட்சைகள் இலங்கையில் நடைபெறும்.*

**புதிய உயர்கல்லூரி, ஆரியகுளம், யாழ்ப்பாணம்.**

**யாழ். இணைப்பாளர்.** (36768)(30)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி வேலுப்பிள்ளை சோலை

சாவகச்சேரி, டச்சு வீதியைச் சேர்ந்த திருமதி வேலுப்பிள்ளை சோலை நேற்று (22.09.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் தர்மலிங்கம் (லண்டன்), காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் சின்னத்தம்பி தங்கமணி (சாந்தி வாச் வேக்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற பரஞ்சோதி, சாந்தி, மோகன் (இந்தியா), ஆஷாத், பாரதி (லண்டன்), தேவதாஸ், சித்திரா (ஆஸ்திரேலியா), சுபாஸ், சிவானி (இத்தாலி), ஜெயநாதன், கவிதா, பிரகாஷ், புஸ்பா, ரூபன், மாலா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.09.2004) வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*டச்சு வீதி,*
*சாவகச்சேரி.* (சி-37789)(29-11-12)

தகவல்:
சி.தங்கமணி (மகள்).

### சொர்ணலிங்கம் கதிர்காமநாதன்

புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நவாலி கிழக்கு மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சொர்ணலிங்கம் கதிர்காமநாதன் (இளைப்பாறிய மருந்தாளர் - பதுளை) அவர்கள் நேற்று (22.09.2004) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திருமதி புஷ்பகாந்தியின் அன்புக் கணவரும் பாஸ்கரன், மகேஸ்வரன், மோகனன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

இறுதிச்சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நவாலி கிழக்கு*
*மானிப்பாய்.* (36791)(43-11-12)

தகவல்:
க.பாஸ்கரன் (மகன்).


**NORTH LANKA**
**INSTITUTE OF INFORMATION TECHNOLOGY**
**கணனிப் பயிற்சி நெறிகள்**

**Diploma Courses**
# Diploma in MS Office
# Diploma in Desk Top Publishing
# Diploma in Computer Programming

**Certificate Courses**
MS Word MS Excel
MS Access Visual Basic
PageMaker PhotoShop
CorelDRAW C++

**Diploma in Hardware Engineering**
இக்கற்கை நெறிக்கு லண்டன் C.C.L பல்கலைக்கழகத்துடன் இணைந்து அல்லது Irish International University ஆல் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்.

Irish International University (EC), C.C.I (UK) யின் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு
தலைமையகம்:- பிரதான வீதி, சங்கானை
கிளை:- பிரதான வீதி, நுணாவில் சாவகச்சேரி.

**NEW SCIENCE COLLEGE**
**2006-A/L**
**பொறியியல்**
வட்ட இயக்கத்திலிருந்து
ஆரம்பம்:
24.09.2004
4.30 (SLT)
By கருணாநிதி
(36790)

**சிங்களம் BY மல்வான**
இப்போது புதிய இடத்தில் காலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணிவரை வகுப்புக்கள் நடைபெறுகின்றன. திரு. மல்வான சிங்களம் வழிகாட்டல் ஆசிரியர், இல.35, வைமன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம். (அரசடி சந்திக்கு அருகில்)
(36732)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) திருவ[illegible] வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.09.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org